நவம்பர் 04 24 பக்கங்கள் ரூபா 14.00

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

வார மலர்

## கண்ணிவெடி சிதறல்

புல்கலை பட்டச் சர்ச்சை

## கடைசி நேர கட்சித்தாவல் குழப்பங்கள்

## யாழ். தேர்தல் களம்







## அதிகாரப் படியேற முதல் அடி

# களத்தில் 11 கட்சிகள் வடக்கில் சூடு பிடிக்கிறது

## நீண்ட காலத்துக்குப் பின் வாக்காளர் மத்தியில் ஆர்வம்

பொதுத்தேர்தலில் குடாநாட்டில் இந்த முறை 11 கட்சிகள் களத்தில் குதித்திருக்கின்றன. தமிழர் விடுதலைக்கூட்டணி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி), அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஆகிய நான்கு தமிழ்க் கட்சிகள் இணைந்த தமிழர் கூட்டமைப்பும் —

ஈ.பி.டி.பி., ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., சிஹல உறுமய, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். (பெருமாள் அணி), ஐக்கிய சோஷலிச கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, புதிய இடதுசாரி முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவையுமாக மொத்தம் 11 கட்சிகள் களமிறங்கியிருக்கின்றன.

கடந்த பொதுத்தேர்தலுடன் ஒப்பிடுகையில் இம்முறை போட்டியிடும் கட்சிகளின் எண்ணிக்கை அரைவாசியாகக் குறைந்துள்ளது. இரண்டு பிரதான அணிகளுக்கும் இடையிலேயே இந்த முறை போட்டி இருக்கப் போகிறது.


ஆனந்தசங்கரி

விடுதலைப் புலிகளின் ஆசீர்வாதத்துடன் களமிறங்கியிருப்பதாகக் கூறப்படும் தமிழர் கூட்டமைப்பும் —

அதிகார செல்வாக்கினால் குடாநாட்டில் பலம் பெற்று விளங்கும் ஈ.பி.டி.பி. கட்சியுமே — இந்தத் தேர்தலில் பிரதான அணிகளாக விளங்குகின்றன.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராஜா மகேஸ்வரன் தலைமையில் போட்டியிடும் ஐ.தே.கட்சி சார்ந்த அணி மூன்றாவது சக்தியாக மதிப்பிடப்படுகிறது.

யாழ். குடாநாட்டின் பெரும் பிரதேசம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் வந்து ஆறாவது ஆண்டு நிறைவுபெறும் வேளையில் யாழ்ப்பாண மக்கள் சந்திக்கும் இரண்டாவது பொதுத் தேர்தல் இதுவாகும்.

முந்திய தடவைகள் போன்று அல்லாமல் இந்த முறை தேர்தல் நீதியாகவும் சுதந்திரமாகவும் நடைபெறுமா என்பதைப் பொறுத்து, இந்தத் தேர்தல் முடிவுகள் தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் பெற வாய்ப்பு இருக்கிறது.

### வாக்களிக்க மக்கள் ஆர்வம்

குடாநாடு மீது அரசுப் படைகள் பெரும் போர் தொடுத்ததை அடுத்து வலிகாமம் பிரதேசத்தில் இருந்து மக்கள் ஒட்டுமொத்தமாக இடம்பெயர்ந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு நடைபெற்று ஆறு ஆண்டுகள் நிறைவுபெறுகின்றன.

குடாநாட்டின் பெரும்பிரதேசத்தை விடுதலைப்புலிகளிடம் இருந்து அரசுப் படைகள் கைப்பற்றிய பின்னர் கடந்த ஆறு ஆண்டுகளாக யாழ்ப்பாண மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் தங்கள் வாழக்கையை ஓட்டி வருகிறார்கள்.

இராணுவப் படையெடுப்பு மற்றும் மக்களின் மாபெரும் இடம்பெயர்வு ஆகிய நிகழ்வுகளை நினைவுகூரும் அதேவேளை தேர்தலில் வாக்களிக்கும் மற்றொரு சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது.

இந்தத் தேர்தல் மூலம் தங்கள் அரசியல் தலைவிதிக்கு ஒரு நல்ல முடிவு கிட்டும் என்ற நம்பிக்கை அவர்களில் பலருக்கும் இல்லை. எனினும் தமிழ் மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க இந்தத் தேர்தல் மூலம் வாய்ப்பு ஏற்படலாம் என்ற எதிர்பார்ப்பு அவர்களுக்கு இருக்கிறது.

யாழ் தேர்தல் களம்

தமிழ் கட்சிகளை, அணிகளை ஓரணியில் கொண்டுவந்து தேர்தலை எதிர்கொள்ள எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கும் அதன் விளைவாக உருவாகியிருக்கும் தமிழ் கட்சிகளின் கூட்டமைப்புக்கும் விடுதலைப்புலிகளின் மறைமுக ஆதரவு இருந்தது என்ற நம்பிக்கையும் தேர்தலில் வாக்களிக்க வேண்டுமென்ற ஓர் உந்துதலைப் பலரிடையேயும் ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்த முறை பொதுத் தேர்தலுக்கு ஓரிரு வாரங்களுக்கு முன்னர் பிரபாகரனின் மாவீரர் தின உரை இடம்பெற இருப்பதால் அந்த உரை தேர்தலில் — குறிப்பாகத் தமிழ் மக்கள் அளிக்கப்போகும் வாக்குகளில் — பெரும் செல்வாக்கைச் செலுத்தக்கூடும் என்ற எதிர்பார்ப்பு தமிழ்க் கட்சி வட்டாரங்களில் நிலவுகின்றது.

### படம் எடுக்கத் தடை

பொதுத்தேர்தலுக்கான வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யும் காலம் கடந்த 20ஆம் திகதி ஆரம்பமாகிவிட்டபோதிலும் யாழ் மாவட்டத்தில் கடைசி மூன்று தினங்கள்தான் — அதாவது ஒக்டோபர் 25, 26, 27ஆம் திகதிகள் — யாழ் செயலகத்தில் அந்தப் பணி சூடு பிடித்தது.

யாழ் செயலகப் பகுதியில் பெரும் எண்ணிக்கையில் படையினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு அங்கு இறுக்கமான பந்தோபஸ்து ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.

வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படுவதை படம் எடுக்க இந்தமுறை எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. தேர்தல் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு புகைப்படக்காரரைத் தவிர. வேண்டுமானால் செயலகத்துக்கு வெளியே வைத்து வேட்பாளர்களைப் படம் எடுத்துக்கொள்ளுங்கள் என்று செய்தியாளர்களுக்குக் கூறப்பட்டது.

இதனால் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்த வேட்பாளர்களின் படங்கள் எதுவும் யாழ்பத்திரிகையில் பிரசுரமாகியிருக்கவில்லை.

இந்த முறை தேர்தல் களத்தில் குதித்திருக்கும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளில் பலருக்கும் முன்னர் போன்று பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்காது எனக் கருதப்பட்டாலும் பொலிஸாரின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் எந்தத் தளர்வையும் காணமுடியவில்லை.

சென்ற ஆண்டு பொதுத் தேர்தலுக்கு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட சமயத்தில் முக்கிய வேட்பாளர்களின் உயிருக்குப் புலிகள் குறி வைத்திருப்பதாகப் பொலிஸார் எச்சரித்திருந்தது நினைவிருக்கலாம்.

வேட்பாளர்களை தனித்தனியே அழைத்து அவர்களின் பாதுகாப்புக் குறித்தும் பொலிஸார் அச்சமயம் அறிவுறுத்தல்கள் வழங்கியிருந்தனர்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த உள்ளூர் உறுப்பினர் ஒருவரைக் கொக்குவில் பகுதியில் வைத்துப் படையினர் கைது செய்ய முயன்ற சமயம் அவர் தப்பிவிட, அவரிடமிருந்து மீட்கப்பட்ட பை ஒன்றில் வேட்பாளர்கள் பலரின் புகைப்படங்களும் அவர்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய ஆவணங்களும் மீட்கப்பட்டன என்று பொலிஸ் தரப்பில் அதற்குக் காரணம் கூறப்பட்டிருந்தது. வேட்பாளர்களின் உயிருக்குக் குறிவைக்கவே புலிகள் அப்படங்களைச் சேகரித்திருக்கிறார்கள் என்று பொலிஸ் வட்டாரங்கள் எச்சரிக்கை வெளியிட்டிருந்ததும் நினைவிருக்கலாம்.


டக்ளஸ்

புலிகள் கைக்கு இப்படங்கள் கிடைத்தது தொடர்பாக விசாரணையாளர்களின் கவனம் அப்போது செய்தியாளர்களின் பக்கமும் திரும்பியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த முறையும் வேட்பாளர்களைப் படம் எடுப்பதைப் பொலிஸார் நடை செய்ததற்கு அவர்களது பாதுகாப்பு அச்சுறுத்தலே காரணமாகக் கூறப்படுகிறது.

குடாநாட்டில் இந்த முறை தேர்தல் எப்போதும் இருந்திராத வகையில் சூடுபிடிக்கும் நிலை உருவாகியிருக்கிறது. இதனை நிரூபிப்பது போன்று தேர்தலுக்கு முந்திய பிரசாரத் திருவிழா முன்கூட்டியே ஆரம்பமாகிவிட்டது.

தேர்தல் நடவடிக்கைகள் ஒருபுறம் இருக்க யாழ்ப்பாணத்தில் நிர்வாக விடயங்களில் அரசியல் செல்வாக்கு மற்றும் தலையீடுகள் — பற்றிய தகவல்கள் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன.

வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு — கிழக்கு தமிழ் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் பனை அபிவிருத்திச் சபையின் தலைமைப்பதவி திடீரென மாற்றப்பட்டிருக்கிறது.

இதுவரை தலைவர் பதவியை வகித்து வந்தவரை ஓரங்கட்டிவிட்டு கட்சி செல்வாக்கு மிக்க ஒருவரை அப்பதவிக்கு நியமிக்க முயற்சி எடுக்கப்பட்டதை அடுத்து தனது பதவியை ராஜினாமாச் செய்திருக்கிறார் தற்போதைய தலைவர். அத்துடன் நின்றுவிடாமல் மற்றொரு கட்சியின் சார்பில் அவர் தேர்தலில் வேட்பாளராகவும் களமிறங்கிவிட்டார்.


மகேஸ்வரன்

நிறைவேற்றுப் பணிப்பாளர் என்ற பெயரில் பனை அபிவிருத்திச் சபைக்குப் புதிய தலைவர் ஒருவரை நியமிக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தகவல்.

பொதுமக்களுக்கு நிவாரணமாக வழங்கப்பட வேண்டிய பெரும் தொகையான அரிசி மூடைகள் அண்மையில் மானிப்பாய் பகுதியில் தனியார் சிலரது மறைவிடங்களில் கண்டுபிடிக்கப்பட்டன. கட்சி ஒன்றைச் சேர்ந்த பிரதேச சபைத் தலைவர் தலைமையில் சென்ற குழுவினரே சட்டவிரோதமான முறையில் மறைத்து வைத்திருந்த நிவாரண அரிசியைக் கண்டுபிடித்தனர்.

இந்த கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வெளியாரின் கைக்குக் கிடைத்திருக்க வாய்ப்பு ஏதும் இல்லை என்று கூட்டுறவுப் பகுதி அதிகாரி ஒருவர் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

ஆயினும் இந்த அரிசி எவ்வாறு தனியாரின் கைகளுக்குப் போய்ச் சேர்ந்தது என்பது இன்னமும் மர்மமாகவே உள்ளது. இந்த அரிசி விவகாரத்தை மேலும் கிளறி விசாரணை செய்தால் அதன் மூலம் வெளியாகும் தகவல்கள் தேர்தல் சமயத்தில் பெரும் பாதகத்தை உண்டு பண்ணிவிடலாம் என அஞ்சி அதனை பூசி மெழுகி மூடி மறைத்துவிட முயற்சிகள் நடப்பதாகத் தகவல்.

— ஆதர்ஷா தாஸ்

# வவுனியாவில் பரபரப்பை ஏற்படுத்திய கிரனேட் வெடிப்பு

கடந்த 23ஆம் திகதி வவுனியா கூமான் குளம் — உக்கிளான் குளம் வீதியில் உக்கிளான் குளம் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் பற்றி பல்வேறு ஊகங்கள் கிளப்பப்பட்டுள்ளன.

சைக்கிளில் வந்த பொலிஸார் அப்பகுதியில் வீதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அச்சமயம் அங்கு இரு இளைஞர்கள் ஒரு சைக்கிளில் வந்தனர். அந்த இளைஞர்களில் ஒருவர் தனது அனுமதிப் பாஸைக் காட்டிவிட்டு சென்றுவிட்டார். மற்றைய இளைஞர் அங்கு நிறுத்தப்பட்டுள்ள ஓட்டோ ஒன்றில் ஏறியுள்ளார்.

ஓட்டோவில் இருந்தவர் பொக்கட்டுக்குள் இருந்த குண்டை எடுத்து எறிந்தார் என்றும் —

3 பொலிஸார் காயமடைந்தனர் என்றும் —

இரு புலி உறுப்பினர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும் — பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது.

உயிரிழந்த இருவரில் ஒருவர் ஆட்டோ சாரதியான குமார் அருளானந்தம் என பின்னர் அடையாளம் காணப்பட்டது.

வவுனியா மாவட்ட நீதிவான் எம். இளஞ்செழியன் சம்பவம் நடந்த இடத்துக்கு சென்று சடலத்தைப் பார்வையிட்டார்.

இறந்தவரின் பொக்கட்டுக்குள் இரு கைக்குண்டுகளும் கடித்த நிலையில் சயனைட்டும் காணப்பட்டன.

கைக்குண்டுகள் அவரின் பொக்கட்டுக்குள் எப்படி வந்தன என்பது குறித்து குழப்பம் ஏற்பட்டுள்ளது.

புலி உறுப்பினரா? சிவிலியனா? என்பது குறித்து கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

சிவிலியனாக இருந்தால் அவர் கொல்லப்பட்ட பின்னர் பொக்கட்டுக்குள் கைக்குண்டுகள் வைக்கப்பட்டதா என்ற கேள்வியும் எழும்பியுள்ளது.

— மகாமுனி



சைவ உணவுப் பிரியர்களுக்கு ஓர் அரிய நற்செய்தி

கடந்த இரண்டு வருட காலமாக திருமணம் மற்றும் விஷேட வைபவங்களுக்கு விருந்து உபசரிப்புச் செய்துவரும்

SAI SWASTIC CATERING SERVICE

ஸ்தாபனத்தாரின் ஓர் புதிய பரிமாணம்

SAI SWASTIC RESTAURANT



காலை உணவு
மு.ப. 7.00 முதல்
பகல் உணவு
மத்தியானம் 11.30 முதல்
இரவு உணவு
பின்நேரம் 5.30 முதல்

Take Away வசதிகள் உண்டு

Bambalapitiya, Wellawatte, Dehiwala பகுதிகளில் ஆடர்களை மேற்கொள்பவர்கள் தொலைபேசி மூலம் அதனை மேற்கொள்ளலாம்.

எம்மிடம் DELIVARY வசதி உண்டு

SAI SWASTIC RESTAURANT
No. 9 A, Hampden Lane,
Colombo - 06. Tel: 590139

# மாவீரர்தின உரை, தேர்தல் இரு வரலாற்றுப் பதிவுகள்

எதிர்வரும் பொதுத் தேர்தல் மூலம் நாட்டின் தலை விதியைத் தீர்மானிக்கும் எண்ணத்துடன் அரசியல் வாதிகள் களத்தில் குதித்துள்ளனர்.

ஆனால் வருடா வருடம் புலிகளின் தலைமைப் பீடத்திலிருந்து அசரீரியாய் ஒலிக்கும் பிரபாகரனின் மாவீரர் தின உரை சர்வதேசத்தையும் இலங்கை அரசியலையும் அழுத்தமாக வருடிச் செல்கிறது.

இம்முறை இந்த இரு சம்பங்களும் அடுத்தடுத்து இடம் பெற வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

அடுக்கடுக்காக இடம் பெறவுள்ள இந்த நிகழ்வுகள் அரசியலில் பாரிய திருப்புமுனைகளாக அமையப் போகின்றன.

அரசு தரப்பிலிருந்து அடிக்கடி முழங்கி ஓயும் வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அண்மையில் அளித்துள்ள விசேட செவ்வி புலிகளின் தலைவரின் உரையை எதிர்பார்க்கும் ஆவலை மேலும் அதிகரித்திருக்கிறது.

லக்ஷ்மன் கதிர்காமர் தனது செவ்வியில் ''புலிகளுடன் பேச்சு நடத்த அரசு தயார். ஆனால் அவர்கள் எமது அழைப்பைத் தொடர்ந்து நிராகரித்து வருகிறார்கள். அவர்களின் திட்டம் என்ன என்பது தெரியவில்லை'' என்று கூறி இருக்கிறார்.

''எமது அரசும் ஐ.தே.க வும் அண்மையில் நடத்திய பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்தன. இரண்டு கட்சிகளும் இணைந்து புலிகளுக்கு அழைப்பு விடுவது என்று எமது கட்சி தீர்மானித்தது. ஐ.தே.கவிடம் ஆலோசனை கேட்டது. நாட்டின் நிழல் மந்திரி சபையாகச் செயற்பட வேண்டிய ஐ.தே.க எமது கருத்தை நிராகரித்துவிட்டது. புலிகளுக்கும் அரசுக்கும் தொடரும் புரிந்துணர்வு அற்ற தன்மைக்கு ஐ.தே.கட்சியும் ஒரு வகையில் பொறுப்பாளி ஆகும்.''

இப்படி லக்ஷ்மன் கதிர்காமர் குறிப்பிட்டிருந்தார்.

புலிகள் யுத்த நிறுத்தம் செய்து தமது நல்லெண்ணத்தைக் காட்டிய பின்னரும் அரசு அதை அசட்டை செய்தது. ஆகவே அமைச்சரின் காலம் தாழ்த்திய கவலை மிகு கருத்து ஏற்றுக் கொள்ள முடியாதது.

ஐ.தே.க பொறுப்பற்ற நிலையில் நடந்து கொண்டது என்ற அமைச்சரின் குற்றச் சாட்டுக்கு விடை ஏற்கனவே உண்டு. இரு தரப்புப் பேச்சுக்கள் முறிவடைந்தவுடன் அரசின் அழைப்பை ஐ.தே.க நிராகரித்தமைக்குக் காரணம் தெரிவித்திருந்தது.

தனிநாடு என்ற குறிக்கோளுடன் ஆயுதப் போராட்டம் நடத்துபவர்கள் புலிகள்.

சமாதானப் பேச்சுக்கு அழைக்கும் அரசோ புலிகளின் வேண்டுகோளை ஏற்கத் தயாரில்லை. அப்படியானால் பரிகாரமாக என்ன திட்டத்தை அரசு வைத்திருக்கிறது. அரசு அதுபற்றி முதலில் எமக்கு அறிவிக்கட்டும் என்று ஐ.தே.க பதிலளித்தது.



பிரபாகரன்

அரசு அவ்வப்போது சமாதானப் பேச்சுக்கள் குறித்து வெளியிடும் கருத்துக்களுக்கு வன்னியிலிருந்து, லண்டனிலிருந்து, கிழக்கிலிருந்தும் புலிகளின் தலைவர்கள் கருத்து வெளியிட்டு வந்தனர்.

ஆனால் லக்ஷ்மன் கதிர்காமரின் ஆகப்பிந்திய இந்த அழைப்புக்கு புலிகள் தரப்பிலிருந்து எந்த சமிக்ஞையும் இல்லை.

அந்த வகையில் புலிகளின் தலைவரின் மாவீரர்தின உரை இம்முறை இருமடங்கு பெறுமதியை உள் வாங்கி இருக்கிறது.

தேர்தலால் நாட்டைத் தீர்மானிக்கத் துடிக்கும் தென்னக அரசியல்வாதிகளுக்குத் தனி ஒரு சக்தியின் இந்த 'மான்மியம்' சற்றுக் கசக்கத்தான் செய்கிறது.

இனவாதம் கொண்ட ஜே.வி.பி உட்பட அநேக அரசியற் கட்சிகள் விடுதலைப் புலிகளின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்திப் பேசி தமது தேர்தல் பிரசாரங்களுக்கு மூலதனமாகப் பயன்படுத்தி வருகின்றனர். புலிகள் பற்றி தென்னிலங்கை மக்கள் கொண்டுள்ள நிலைப்பாட்டை மாற்றி எழுத இந்தக் கட்சிகள் முயற்சி செய்கின்றன.

ஆனால் தென்னிலங்கை மக்களும் ஆண்டுதோறும் புலிகளின் தலைவரின் உரையை ஆவலோடு செவிமடுக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

கடந்த வருட மாவீரர் தின உரையில் பேச்சுவார்த்தை என்பது தமிழ் மக்களுக்குப் புதிதான விடயம் அல்ல என்று பிரபாகரன் தெரிவித்திருந்தார்.

''தமிழ் மக்கள் சார்பில் எமது விடுதலை இயக்கமும் எமக்கு முந்திய தலைமைகளும் சிங்கள அரசுகளுடன் எத்தனையோ தடவைகள் பேச்சுக்கள் நடத்தியுள்ளன. பண்டா – செல்வா ஒப்பந்தத்திலிருந்து பல தசாப்தங்களாகப் பல வரலாற்றுச் சூழல்களில் பல்வேறு நிபந்தனைகளின் அடிப்படையில் பேச்சுக்கள் நடைபெற்றிருக்கின்றன.

''ஆயினும் இப்பேச்சுக்கள் தமிழ் மக்களின் பிரச்சி[illegible] தீர்த்து வைக்கத் தவறிவிட்டன. இதனால் தமிழரின் பிரச்சி[illegible] மேலும் சிக்கலடைந்து பெரும் போராக விஸ்வரூபம் பெற்றிருக்கிறது. இந்தத் துரதிஷ்ட நிலைமைக்கு பிரதான காரணம் தமிழரது பிரச்சினையின் அடிப்படைகளை தமிழரது அரசியல் அபிலாஷைகளை சிங்கள தேசம் ஏற்றுக் கொள்ள மறுப்பதுதான்.

''தமிழர் பிரச்சினைக்குச் சமாதான வழியில் நிரந்தரமான அரசியற் தீர்வு காணப்பட வேண்டுமானால் தமிழர் பற்றிய சில அடிப்படை உண்மைகளை சிங்கள தேசம் ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும். அத்தோடு தமிழ் மக்கள் எத்தகைய தீர்வை விரும்புகிறார்கள் என்பதையும் அவர்களது அடிப்படை அபிலாஷைகள் என்ன என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்'' எனக் கூறியிருந்தார்.

தமிழ் மக்களுக்கு எத்தகைய தீர்வு வேண்டும் என அவா குறிப்பிடுகையில் ''ஈழத் தமிழர்கள் தனித்துவமான இன அடையாளத்தைக் கொண்டவர்கள். அவர்கள் ஒரு தேசிய இனக் கட்டமைப்போடு அந்த இனத்துவ பிரக்ஞையோடு வாழும் ஒரு மக்கள் சமூகம். அவர்களுக்கு வரலாற்று ரீதியான தாயக மண்ணாக சொந்த நிலமுண்டு.

''எமது மக்கள் விரும்புவதெல்லாம் ஒன்றுதான். தமது சொந்த நிலத்தில் நிம்மதியாக நிறைவாக வாழவேண்டும் என்பதுதான். மற்றவர்களது அதிகார ஆதிக்கமோ, நெருக்குவாரங்களோ, இல்லாத ஓர் அரசியல் சூழலில் தம்மைத் தாமே ஆட்சி செய்து கௌரவமாக அவர்கள் வாழ வேண்டும். இந்தப் புரிந்துணர்வின் அத்திவாரத்தில் இருந்து தான் ஒரு நியாயமான நிரந்தரமான தீர்வைக் கட்டியெழுப்புவது சாத்தியமாகும்'' என்று வலியுறுத்தியிருந்தார்.

ஆனால் இந்தத் தீர்வு விடயத்தில் சந்திரிகா அரசு அக்கறையாக இல்லை என்பதையும் தனது உரையில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

தென்னிலங்கை சமூகக் கட்டமைப்பில் சகல மட்டங்களிலும் பூதாகாரமாக வளர்ந்து வரும் சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழ் மக்களைக் காருண்யத்துடன் அரவணைத்துக் கொள்ளும் என தாம் நம்பவில்லை என்று அரசின் நிலைப்பாட்டையும் அவர் உணர்த்தினார்.

அதற்குத் தமது பக்கத் தீர்வின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகையில்—

''சிங்கள தேசம் இனவாதப் பிடியிலிருந்து விடுபடாமல் தமிழர்களுக்கு எதிரான அடக்கு முறையை தொடருமானால் நாம் பிரிந்து சென்று தமிழீழத் தனியரசை அமைப்பதைத் தவிர வேறு வழியில்லை'' என்று காட்டமாக் கூறினார்.

ஆனால் இம்முறை பிரபாகரனின் இந்த நிலைப்பாட்டில் மாற்றம் இருக்குமா என்பதை ஆவலாக எதிர்நோக்க வேண்டியுள்ளது.

புலிகள் தரப்பு நல்லெண்ண சமிக்ஞைகளை அரசு ஏற்றுக்கொள்ளும்வரை தொடர்ந்தும் தீவிர போக்கைக் கடைப்பிடிப்பதா? அல்லது வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படுமா?

பொதுத் தேர்தலுக்கு முன் விடுக்கப் படவுள்ள மாவீரர் தினச் செய்தி ஆட்சிபீடம் ஏறவுள்ள அரசுக்கு சமாதான அலாரமாக ஒலிக்கும் என்றே அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

தென்னிலங்கை அரசியலை பகுத்து எடுத்து நோக்கி அதில் தமது அரசியல் நகர்வு குறித்து புலிகள் தரப்பு சமர்ப்பிக்க வேண்டிய கட்டாயம் இம்முறை ஏற்பட்டிருக்கிறது.

ஆனால் புலிகளின் தலைவர் நிகழ்த்தவுள்ள உரையில் தேர்தலில் பல மாற்றங்களை உண்டு பண்ணக் கூடிய சாத்தியக் கூறுகளே அதிகம் உண்டு எனக் கருதப்படுகிறது.

இந்த மாதமும் அடுத்த மாதமும் இலங்கை அரசியலில் இரு வரலாற்றுப் பதிவுகள் இடம் பெறப்போகின்றன.

– சேனாவரையன்


## கனடா, அமெரிக்காவுக்கு விசா

வட அமெரிக்காவில் குடிவரவு விடயங்களில் ஆலோசகராக 12 வருடகால அனுபவம் உள்ளவரும் முன்பு இலங்கையில் சட்டத்தரணியாவும் இருந்த திரு. எம்.சிவகுருநாதன் சட்டத்தரணி தற்போது குறுகிய காலத்திற்கு கொழும்பில் தங்கி நிற்கிறார். தொழில் சார்ந்த அல்லது உயர் கல்வி தகைமையுடையவர்களுக்கும் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நிரந்தர வதிவிட விசா பெறுவதில் உதவ முன்வந்திருக்கிறார்.

தொடர்புகளுக்கு:
சட்ட அலுவலகம்,
341, காலி வீதி, கல்கிசை.

எம். சிவகுருநாதன், சட்டத்தரணி
தொலைபேசி : 075 – 520944 (பகலில்)

## கண்டி அலுவலகம்

சுடர் ஒளியின் மலையகத் தொடர்புகளுக்கான அலுவலகம் 31–10–2001, புதன்கிழமையிலிருந்து இயங்கவுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:
சுடர் ஒளி,
C/o ''அகிலம்''
நபிஷர் சொப்பிங் கொம்பிளெக்ஸ்
135 1/4, கொட்டுகொடல்ல வீதி, கண்டி.

சகலவிதமான விளம்பரங்கள், செய்திகள் இங்கு ஏற்றுக்கொள்ளப்படுவதோடு விற்பனை முகவர்கள் விடயங்களும் கவனிக்கப்படும்.

யூகே
மனதிற்கினிய திருமண அழைப்பிதழ்களைத் தெரிவு செய்து மணவாழ்விலும் மகிழ்ச்சியடையுங்கள்
யூகே
190,
போதிராஜா மாவத்தை,
கொழும்பு–11
Tel: 075-370019,
Fax: 075-370018

RSL 80% ஐ
உங்களுடைய மின் கட்டணத்தில் சேமியுங்கள்!

| | |
|---|---|
| 5W-2U =25 W- | 285/- |
| 7W-2U =35 W- | 295/- |
| 9W-2U =45 W- | 295/- |
| 11W-2U=55 W- | 305/- |
| 15W-2U=75 W- | 315/- |
| 15W-3U=75 W- | 390/- |
| 20W-3U=100W- | 430/- |
| 26W-3U=130W- | 460/- |
| 55W-4U=275W- | 1350/- |

REIMOO SONS LTD.
88A, Main Street,
Colombo 11.
Tel : 325060, 326643
Fax: 94-1-326643
541218

11, National Housing Scheme, Kiribathgoda,
26, Station Road,
Panadura.

ஆங்கிலம் / தமிழ் / சிங்களம் / ஹிந்தி — Audio CD's 100/- - 125/- Video CD's 120/-
Software CD's / Game CD's / TOEFL Exam CD / SAT Exam CD — 100/-
CD House
2nd Floor,
144/2 - 2, முதலாம் குறுக்குத் தெரு,
(Spencer House Building)
கொழும்பு – 11.
Tel: 01 - 385176

அனைத்து வகை செய்மதி
Dish antennas, T.V. antennas
மற்றும் உதிரிப் பாகங்களின்
இறக்குமதியாளர்களும்
விநியோகஸ்தர்களும்
UKAAYE
SATELLITE SYSTEMS (PVT) LTD.
Showroom:
No. 190, Bodhiraja Mawatha,
Colombo-11.
Tel: 075-370019, Fax: 075-370018
Sole Distributor in Sri Lanka for EUROSTAR

## என்டெனா பொருத்துதல்




Get it Installed by professionals
TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656.(TEL/FAX)
E-mail : telecave@eureka.lk

DAXTAR
Digital Video House
VHS / Hi 8 / Videp 8 / VHS C / Video 8 — VCD
புதிய Digital முறையில் VHS கசெட்டிலிருந்து Video CDயாக மாற்றம் செய்ய 1 CD – 500/– மட்டுமே.
Case Cover Photo இலவசமாக செய்துதரப்படும்
DAXTAR DIGITAL VIDEO HOUSE
144/2 - 1, First Cross Street,
(Spencer Building) Colombo - 11.
Tel/Fax: 386757, 386767

## அவசர திருத்தங்கள்




Guaranteed repair & service by trained technicians
TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656.(TEL/FAX)
E-mail : telecave@eureka.lk

சுடர் ஒளி

நவம்பர் 04, 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 074- 513112 - 5
E-mail: sudar@uthayan.com

# தேர்தல் வன்செயல்கள்: தவிர்க்க வழி

இலங்கையின் பன்னிரெண்டாவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனுக்களை வேட்பாளர்கள் தாக்கல் செய்து முழுமையான விவரங்கள் இன்னும் வெளிவரவில்லை. அதற்கிடையில் வன்செயல்கள் அதிகரித்துவருகின்றன.

கொழும்புக்கு வெளியே நடந்த ஒரு தேர்தல் வன்செயலில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் மரணமடைந்துள்ளார். தேர்தல் வன்செயல் எடுத்த முதல் பலி இது.

கொழும்பு நாரஹென்பிட்டியில் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றில் நால்வர் மாண்டனர். பலர் காயமடைந்தனர் என்று தகவல்கள் தெரிவித்தன.

இந்தக் குண்டு வெடிப்பு தற்கொலைக் குண்டுதாரி ஒருவரின் செயல் என்று கூறப்படுகிறது.

நாரஹென்பிட்டியில் ஒரு வைபவத்தில் பிரதமர் கலந்துகொண்டு திரும்பிய சிறிது நேரத்தில் இக்குண்டு வெடிப்பு நிகழ்ந்தது.

பிரதமரைக் குறி வைத்துத்தான் இக் குண்டுத் தாக்குதல் நடைபெற்றிருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.

மாத்தளையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமின் வாகன அணிமீதும் தாக்குதல் நடந்திருக்கிறது.

இவையெல்லாம் பொதுத் தேர்தல் எந்தத் திசையில் போய்க் கொண்டிருக்கிறதென்பதை எடுத்துக் காட்டுகின்றன.

என்னதான் நீதியான நேர்மையான தேர்தல் என்று சொன்னாலும் அதிகாரத்திலுள்ளவர்கள் நாட்டில் வளர்ந்து வரும் வன்முறைக் கலாசாரத்துக்கு வித்திட்டு விட்டு இப்போது அமைதியான நீதியான தேர்தல் பற்றிப் பேசுவதில் பயனில்லை.

தேர்தல் நீதியாகவும் நேர்மையாகவும் அமைதியாகவும் நடைபெறுவதற்கு ஒத்துழைப்புத் தரும்படி தேர்தல் ஆணையாளர் சகலருக்கும் வேண்டு கோள் விடுத்திருக்கிறார்.

தேர்தல் நடைபெறுவதற்கு எத்தனை சட்டங்களையும், சட்டவிதிகளையும் கொண்டு வந்தாலும் சம்பந்தப்பட்டவர்களின் உதவியும் ஒத்துழைப்பும் இல்லாமல் இவற்றை நிறைவேற்ற முடியாது என்பதை உணர்ந்தே தேர்தல் ஆணையாளர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் மனம் வைத்தாலொழியச் சட்டங்களாலும் சட்டக் காவலர்களாலும் வன்செயல்களைத் தடுத்து நிறுத்திவிடமுடியாது. டிசம்பர் மாதம் ஐந் தாம் திகதிதான் வாக்களிப்பு நடைபெற்று தேர்தல் முடிவுகள் வெளியாகும். இன்னும் ஒரு மாதத்துக்கு அதிகமான நாட்கள் பிரசாரத்துக்கு இருக்கின்றன.

வேட்புமனுத் தாக்கல் முடிந்தவுடனேயே உயிர்ப்பலியெடுக்குமளவுக்கு வன்செயல்கள் தலைதூக்கியிருக்கின்றன.

இன்னும் நாட்கள் செல்லச் செல்ல வன்செயல்கள் அதிகரிக்கும் ஆபத்து இருக்கிறது.

தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் இரவு ஒன்பது மணிக்கு முடிவடைய வேண்டுமென்றும் —

ஊர்வலங்கள் நடத்தக்கூடாதென்றும் — தேர்தல் ஆணையாளர் உத்தரவு பிறப்பித்திருப்பது வரவேற்கத்தக்கதுதான்.

ஆனால் பெரிய கட்சித் தலைவர்களும் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் வீட்டுக்கு வீடு, வீதிக்கு வீதி சென்று வாக்கு வேட்டை நடத்தாமலும், பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்ளாமலும் தங்கள் கட்சிக்கும் வேட்பாளருக்கும் ஆதரவு கேட்டுப் பிரசாரம் செய்ய முடியாதா?

நவீன விஞ்ஞான யுகத்தில் இலங்கையின் கிராமங்களில் கூட மூலை முடுக்குகளிலெல்லாம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்க முடிகிறது. ஆகவே தேர்தல் பிரசாரத்துக்கு தொலைக் காட்சியையும் வானொலியையும் மட்டும் பயன்படுத்தினால் என்ன?

தேர்தல் பிரசாரத்துக்குக் களம் இறங்குவதால்தானே அனர்த்தங்கள் ஏற்படுகின்றன! அனைவரது சிந்தனைக்கும் இந்தக் கருத்துச் சமர்ப்பணம்.

# வரலாற்றில் பின்னிப் பிணைந்த பேரம் பேசும் அரசியல்

நாடாளுமன்றத்துக்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தல் முடிந்ததும் அதாவது தேர்தல் முடிவுகள் சரியாக வெளிவருவதற்கு முன்னரே ஆட்சியில் அமருவதற்காக அரசியல் வாதிகளுக்கிடையில் பேரம் பேசப்படும். இது பல நாடுகளிலும் நடைபெறும் நிகழ்ச்சிகள்தான். இலங்கையில் இது முக்கியத்துவம் வாய்ந்தாக இருந்து வருகிறது.

சுதந்திர இலங்கையின் முதலாவது நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் 1947 ஆம் ஆண்டில் நடைபெற்றது. இலங்கைக்கு சுதந்திரம் பெறுவதற்காக தமிழ் மக்களின் சம்மதத்தைப் பெறுவதற்கு டி.எஸ்.சேனநாயக்கா தமிழ்த் தலைவர்களுடனேயே முதலில் பேரம் பேசினார். இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுடன் சமபலப் பிரதிநிதித்தவம் வேண்டுமென்று சோல்பரி அரசியல் ஆணைக் குழு முன்வாதாடி நல்ல முடிவு கிடைக்காததால் பிரிட்டிஷ் அரசுடன் நேரில் வாதாடுவதற்காக ஜீ.ஜீ. பொன்னம்பலம் லண்டன் சென்றிருந்தார்.

## முதலாவது பேரம்

இச்சமயத்தில் இலங்கையிலிருந்த பேராசிரியர் செ. சுந்தரலிங்கம், சி.சிற்றம்பலம், நல்லையா போன்ற தமிழ்த் தலைவர்களுடன் டி.எஸ். பேச்சு நடத்தினார். அவர்களுக்கு வாக்குறுதிகளும் அளித்தார். இந்த வாக்குறுதிகளுக்காகவே பேரம் பேசப்பட்டதாகத் தெரிகிறது. இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு தமிழ்த் தலைவர்கள் சம்மதம் தெரிவித்தனர்.

1948ஆம் ஆண்டு பெப்ரவரி நான்காம் திகதி இலங்கை சுதந்திரமடைந்தது. டி.எஸ். சேனநாயக்கா சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதம மந்திரியாகப் பதவியேற்றார்.

1949 ஆம் ஆண்டில் மலையக மக்களின் குடியுரிமையைப் பறிக்கும் மசோத அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டது. அதை எதிர்த்து பேராசிரியர் சுந்தரலிங்கம் தாம் வகித்த வர்த்தக வணிக அமைச்சர் பதவியை ராஜினாமச் செய்து அமைச்சரவையிலிருந்து வெளியேறினார்.

1947 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலிலிருந்து டி.எஸ். சேனநாயகாவை எதிர்த்து வந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் டி.எஸ். சேனநாயக்கவை சில இடைத் தரகர் களுடன் சந்தித்துப் பேசினார். டி.எஸ். ஸின் அமைச்சரவையில் ஜீ.ஜீ. சேர்ந்தார். கைத்தொழில் கடற்றொழில் அமைச்சரானார். என்ன பேரம் பேசப்பட்டதோ தெரியாது.

1952 ஆம், 1956 ஆம் ஆண்டுகளில் நாடாளுமன்றத்துக்கு நடந்த பொதுத் தேர்தல்களின்போது அரசியல் கட்சிகளுக்கிடையில் பேரம் பேச வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இந்த இருதேர்தல்களிலும் வேறு எந்தக் கட்சியினதோ தலைவர்களினுடையதோ ஆதரவு பெறாமல் ஆட்சியமைப்பதற்கு மக்கள் வாக்களித்திருந்தனர்.

ஆனால் 1956 ஆம் ஆண்டு ஆட்சிபீடமேறியதும் எஸ். டபிள்யு.ஆர். டி. பண்டாரநாயக்கா சிங்களம் மட்டுமே நாட்டின் உத்தியோக மொழி என்ற சட்டத்தை நிறைவேற்றினார். இதை எதிர்த்து காந்நீய வழியில் போராட்டம் நடத்திய இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் 1957 ஆம் ஆண்டில் திருகோண மலையில் பெரும் மாநாடு கூட்டினர். சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து மாபெரும் போராட்டம் நடத்துவதற்குத் தீர்மானம் நிறைவேற்றிச் செயல்படுத்தத் தீர்மானித்தனர்.

இதைத் தவிர்ப்பதற்காக பிரதமர் பண்டார நாயக்கா தமிழரசுத் தந்தை செல்வநாயகத்துடன் பேரம் பேசினார். இதன் முடிவில் இருவரும் ஒரு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

பின்னர் ஜே. ஆர். தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினரின் கண்டி யாத்திரை யாலும் ஆளும் கட்சிக்குள்ளேயே எழுந்த எதிர்ப்பினாலும் இந்த உடன் படிக்கையை பண்டாரநாயக்காவே கிழித் தெறிந்தார்.

1959 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்கா சுட்டுக்கொல்லப்பட்டார். டாக்டர் தக நாயக்கா காபந்துப் பிரதமரானார்.

1960 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நான்காவது நாடாளுமன்றத்துக்கு நடந்த பொதுத் தேர்தலில் டட்லி தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சியும், சி.பி.டி சில்வா, மைதிரிபால சேனநாயக்கா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஆட்சி அதிகாரத்துக்குப் போட்டியிட்டன. இத்தேர்தலில் எந்தக் கட்சியும் தனித்து நின்று ஆட்சியமைக்கும் அறுதிப் பெரும் பான்மையைப் பெறவில்லை.

இருதரப்பாரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவைப் பெற்று ஆட்சியமைப் பதற்குப் பேரம் பேசுவதில் ஈடுபட்டனர். தமிழ் அரசுக் கட்சி விதித்த நிபந்தனைகளை ஏற்று டட்லி தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைத்தது. இந்த நிபந்தனைகள் சில வற்றை உடனடியாகவே நிறைவேற்ற வேண்டுமென்றும் இல்லையேல் சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படும் போது எதிர்த்து வாக்களிக்கப் போவதாகவும் தமிழரசுக் கட்சி தெரிவித்தது.

சில நிபந்தனைகளை டட்லி அரசு உடன டியாக நிறைவேற்றத் தவறியதால் சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரே ரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது முன்னர் சொன்னபடியே தமிழரசுக் கட்சி எதிர்த்துவாக்களித்தது. அரசு கவிழ்ந்தது.

## ஒரே ஆண்டில் தேர்தல்கள்

நாடாளுமன்றத்தைக் கலைத்து மீண்டும் பொதுதேர்தல் நடத்துவதற்கு பிரதமர் டட்லி சிபார்சு செய்தார். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு 1960 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மீண்டும் பொதுத் தேர்தல் நடந்தது.

1960 ஜூலை தேர்தல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு சிறிமாவோ பண்டார நாயக்கா தலைமை வகித்தார். அவர் தேர்தலில் போட்டியிடவில்லை.

இத்தேர்தல் பிரசார சமயத்தில் தமிழரக் கட்சித் தலைவர் செல்வநாயகம் தமிழ் மக்களுக்கு ஒரு கோரிக்கைவிடுத்து அறிக்கை வெளியிட்டார். தேர்தலில் பெரிய கட்சி எதுவும் தானாக ஆட்சி அமைக்கக் கூடிய அறு திப் பெரும்பான்மையைப் பெறக் கூடிய மாதிரி தமிழ் மக்கள் வாக்களிக்கக் கூடாது என்று அவர் அந்த அறிக்கையில் கேட்டிருந்தார்.

இத்தேர்தல் பிரசாரத்தின் போது நாட்டைப் பிளவுபடுத்தி செல்வநாயத்துக்குத் தாரை வார்க்கப்போவதாக டட்லியும் சிறிமாவும் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டினர். தமிழ் மக்களுக்கு செல்வநாயகம் விடுத்த வேண்டுகோளுக்கு கொழும்பிலுள்ள ஆங்கில, சிங்களப் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்தன.

1960 ஜூலை தேர்தல் முடிவுகள் சிறிமா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட் சிக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொடுத்தது. பேரம் பேச வேண்டிய அவசியமில்லாமல் சிறிமா தலைமையிலான சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்தது.

தமிழரசுக் கட்சி 1961 ஆம் ஆண்டில் காந்நீய வழியில் வடக்கிலும் கிழக்கிலும் நடத்திய சத்தியாக்கிரக மக்கள் எழுச்சியை ஆயுதப் படைகொண்டு சிறிமா அடக்கினார்.

1964 ஆம் ஆண்டுக் கடைசியில் பத்திரிகைத் தடை மசோதாவை சிறிமா அம்மையார் கொண்டுவந்த போது ஆளும் கட்சிக் குள்ளேயே எதிர்ப்புக் கிளம்பியது. பேரம் பேசப்பட்டாலும் அதுவெற்றியளிக்காததால் உட்கட்சிப் பூசலால் சி.பி. டி சில்வா குழு வெளியேறியது. ஆட்சி கவிழ்ந்தது.

இடது சாரிகளின் வற்புறுத்தலால் சில தினங்கள் பதவிவிலகாமலிருந்த சிறிமா பின்னர் பதவி விலகினார்.

## தேசிய அரசாங்கம்

1965 இல் நடந்த பொதுத்தேர்தலில் டட்லி அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த போதிலும் சகல கட்சிகளையும் சேர்த்து தேசிய அரசாங்கம் அமைத்தார்.

தந்தை செல்வாவும் டட்லியும் தேர்தலுக்கு முன்பே இரகசியமாக நடத்திய பேரப்பேச்சின்படி டட்லி அரசில் தமிழரசுக் கட்சியின் சார்பில் எம் திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராக பதவியேற்றார்.

மாவட்டசபை அமைப்பதற்காக இப் பதவி வழங்கப்பட்டது. ஆட்சியிலுள்ளோரின் எதிர்ப்பினால் இது நிறைவேறாததால் 4 வருடங்களின் பின் திருச்செல் வம் பதவி துறந்தார். தமிழரசுக் கட்சி அரசுக்கு வழங்கிய ஆதரவை விலக்கியது.

1970 இல் ஆட்சிக்குவந்த சிறிமா தலைமையிலான இடதுசாரிகளுடனான ஐக்கிய முன்னணி அரசு இலங்கையை ஒருசோஷலிஸக் குடியரசாகப் பிரகடனப்படுத்தியது. இதற்கென எழுதிய அரசமைப்பை உருவாக்கியது.

1977 ஆம் ஆண்டில் ஜே.ஆர். மிகப் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிக்கு வந்தார். தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இனப்பிரச்சினை சம்பந்தமாகப் பேரம் பேசுவாரென எதிர்பார்த்தபோதிலும் அதை உதாசீனம் செய்தார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக புதிய அரசமைப்பை உருவாக்கினார்.

1989 இல் ரணசிங்க பிரேமதாஸா நிறைவேற்று அதிகாரம் கொண்ட இரண்டாவது ஜனாதிபதியாக வந்தார். விடுதலைப்புலிகளுடன் பேரம் பேசினார். அதுவும் நிறைவேறவில்லை.

1994 இல் சந்திரிகா பெரும் வெற்றி பெற்று ஜனாதிபதியானார். விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தினார். ஏதுவும் சரிவரநிறைவேறவில்லை. நிபந்தனைகள் செயல்படுத்தப்படவில்லை.

## ஒரு வாக்கினால் ஆட்சியில்

2000 ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் ஒரேயொரு மேலதிக வாக்குப் பலத்தினால் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தது.

அரசியல் கட்சிகளுடன் பேரம் பேசப் பட்டது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விதித்த நிபந்தனைகளை ஏற்று பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தது.

நிபந்தனைகள் விதிப்பதிலும் பேரம் பேசுவதிலும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வீரர் என்று பெயர் பெற்றார். முஸ்லிம் காங்கிரஸ் பிளவுபட்டது. ரவூப் ஹக்கீமை திடீரென்று அமைச்சரவையிலிருந்து சந்திரிகா வெளியேற்றினார்.

ஆட்சி பீடம் ஆட்டம் கண்டது. டிசம்பர் மாதம் ஐந்தாம் திகதி 12 ஆவது நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் நடைபெறுகிறது.

தேர்தல் முடிந்ததும் 2002 ஆம் ஆண்டு ஜனவரி முதல் திகதி நாடாளுமன்றம் கூடும்.

டிசம்பர் 5 ஆந் திகதியிலிருந்து அடுத்த ஆண்டு முதலாம் திகதி நாடாளுமன்றம் கூடும் வரை ஆட்சிக்கு வருவதற்கு பேரம் பேசுவதற்காகவே இவ்வளவு கால இடைவெளி விடப்பட்டிருக்கிறது. ஜே. ஆரின் விகிதாசாரத் தேர்தல் முறையின் சூத்திரம் தந்திரம் எல்லாம் இதில் தான் அடங்கியிருக்கிறது.

— எஸ்.எம்.ஜி

# வவுனியாவை உலுக்கிய பாதுகாப்புக் கெடுபிடி

வவுனியா நகரில் கடந்தவார ஆரம்பத்தில் திடீரென பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டன. பிரதான பாதைகள் மூடப்பட்டன; மக்கள் கடுஞ்சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

ஏன் இந்த நிலை என்று தெரியாது மக்கள் திகைத்தனர்.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தனது படை அணிகளுடன் வவுனியா வந்துள்ளார் என்பதை மக்கள் பின்னர் அறிந்து கொண்டனர்.

அமைச்சரைச் சந்திக்கச் சென்றவர்கள் எல்லாம் பலத்த சோதனைக்கு உள்ளாகினர்.

வவுனியாவில் அமைச்சர் 3 தினங்கள் தங்கியிருந்தார். அந்த மூன்று தினங்களில் தாக்குதல் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

முதல்நாள் வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் படுகாயம் அடைந்தார்.

மறுநாள் ஹொரவப் பொத்தானை வீதியில் துட்டுவெவ என்னும் இடத்தில் இடம் பெற்ற கிளைமோர் தாக்குதல் ஒன்றில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் ஊர்காவலர் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

மூன்றாம் நாள் உக்கிளாங்குளத்தில் இடம் பெற்ற தாக்குதலில் மூன்று பொலிஸாரும் இருவிடுதலைப் புலி உறுப்பினர்களும் காயமடைந்தனர்.

# படையினருக்கு அதிர்ச்சி தந்த புலிகளின் கிளைமோர் தாக்கு

குடாநாட்டில் படையினரின் பிரதான போக்குவரத்துப் பாதையாக விளங்கும் நெடுஞ்சாலைகள் இரண்டு. அதில் ஒன்று யாழ். நகரையும், பலாலிப் பெருந் தளத்தையும் இணைக்கும் பலாலி வீதி. அடுத்தது வலிகாமத்தையும் வடமராட்சியையும் — அவ்வழியே தென்மராட்சியையும் — இணைக்கும் பருத்தித்துறை வீதி.

படையினரின் வாகனப் போக்குவரத்து மற்றும் படையணிகளுக்கான பிரதான விநியோக மார்க்கங்களாக விளங்கும் இந்த இரு பிரதான சாலைகளையும் பாதுகாக்கும் பணியில் பல நூற்றுக்கணக்கான படையினர் ஓய்வு ஒழிச்சல் இன்றி ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். இந்த வீதிகளில் குறிப்பிட்ட தொலைவுகளுக்கு இடையே படை நிலைகள் மற்றும் முகாம்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கெல்லாம் வீதிச் சோதனைகள் இடம்பெறுவது வழக்கம்.

ஆயினும் இத்தனை கண்காணிப்புகளின் கீழ் உள்ள பருத்தித்துறை பிரதான வீதியில் — வல்லை வெளிக்கு அப்பால் நெல்லியடியை அண்மித்த குஞ்சர்கடைப் பகுதியில் — வீதியோரம் சக்திமிக்க கிளைமோர் கண்ணி ஒன்றை வெடிக்க வைத்ததன் மூலம் புலிகள் படையினருக்குப் பலத்த சேதத்தை உண்டாக்கியிருக்கின்றனர்.

புலிகளின் அண்மைக்கால நகர்ப்புறக் கண்ணித் தாக்குதல்களில் மிகவும் தீவிரமானது என்று கருதப்படும் இந்தத் தாக்குதல் யாழ். படையினருக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

பலாலியில் உள்ள இராணுவத்தின் சிவில் நிர்வாகப் பிரிவின் மூன்றாம் நிலைக் கட்டளை அதிகாரியான லெப்டினன்ட் கேணல் லயனல் விஜயக்கோன் உட்பட ஏழு படையினர் இந்தத் தாக்குதலில் சிக்கி உயிரிழந்திருக்கின்றனர். குடாநாட்டில் உயர் உதவிநிலையைச் சேர்ந்த படை அதிகாரி ஒருவர் புலிகளின் கண்ணிக்கு இரையாகி இருப்பது அண்மைக்காலத்தில் இதுவே முதல் தடவை ஆகும்.

இந்த அதிகாரியும் வேறு ஏழு படையினரும் கடமையின் நிமித்தம் இராணுவ 'பிக்கப்' வாகனம் ஒன்றில் சென்று கொண்டிருந்த சமயம் யாழ். பருத்தித்துறை நெடுஞ்சாலையில் குஞ்சர்கடை அருகே உள்ள சிறிய வைரவர் ஆலயத்துக்குச் சமீபமாகக் கிளைமோர் கண்ணி வெடித்திருக்கிறது.

இதனால் இராணுவ வாகனத்துக்குப் பெரிய அளவில் சேதம் ஏற்படவில்லை. ஆனால் அதில் இருந்தவர்களில் ஒருவரைத் தவிர ஏனையோர் கொல்லப்பட்டனர். பிக்கப் வாகனத்துக்கு முன்னால் சென்று கொண்டிருந்த கனரக வாகனம் ஒன்று தப்பிவிட்டது.

கோவிலுக்கு அருகே மரத்தில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர் கண்ணியே இயக்கப்பட்டதாக முதலில் தகவல் வெளியிடப்பட்டிருந்த போதும் வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றிலேயே கண்ணிவெடி பொருத்தப்பட்டிருந்ததாகப் பின்னர் இராணுவ வட்டாரங்கள் சில தெரிவித்தன.

நவீன வடிவிலான புதிய ரக கிளைமோர் கண்ணிகளைப் புலிகள் இப்போது பயன்படுத்தத் தொடங்கி இருப்பதும் இந்தத் தாக்குதல்மூலம் தெரிய வந்திருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

சைக்களில் தொங்கவிடப்படும் சிறிய பையில் அல்லது சைக்கிள் செயின் கவருக்குள் பொருத்தக் கூடிய — சிறிய அதேசமயம் சக்திமிக்க வெடிப்பு அதிர்வை ஏற்படுத்தக் கூடிய — கிளைமோர் கண்ணியே இத்தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

குஞ்சர்கடைப் பகுதியில் படை முகாம் ஒன்று அமைந்திருப்பதால் அந்தப் பகுதியில் வீதியோரத் துப்புரவுப் பணி உட்பட படையினரின் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக இருப்பது வழக்கம். இதனால் அங்கு இப்படி ஒரு தாக்குதலைப் படையினர் எதிர்பார்த்திருக்கவில்லை.

வன்னியிலும் கிழக்கிலும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் ஆழ ஊடுருவும் அணிகள் மூலம் படையினர் நடத்திவரும் கிளைமோர்த் தாக்குதல்களுக்குப் பதிலடியாகப் புலிகள் இந்தத் தாக்குதலை — அதாவது படையினரின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு நகரப் பிரதேசத்துக்குள் — நடத்தியிருக்கலாம்.

குடாநாட்டில் தேர்தல்காலப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான திட்டங்களை வகுத்துவரும் யாழ். படைத் தலைமைக்கு ஆழ ஊடுருவிப் புலிகள் நடத்தியிருக்கும் இந்தக் கண்ணித் தாக்குதல் பெரும் சவாலாக எழுந்துள்ளது.

## வீதியில் வைத்து இளைஞனை சுட்டுப்பிடித்தது பொலிஸ்




யாழ். நகரில் கஸ்தூரியார் வீதி — நாவலர் வீதிச் சந்தியில் கடந்த 23ஆம் திகதி செவ்வாயன்று பகல் பொலீஸாரின் துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்த இளைஞர் ஒருவர் யாழ். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சைக்கிளில் வந்து கொண்டிருந்த இளைஞனைப் பின்தொடர்ந்து ஜீப்பில் வந்த பொலீஸார் அவர்மீது திடீரெனத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது இடுப்பில் படுகாயமடைந்த அந்த இளைஞர் 'தடால்' என அந்த இடத்திலேயே வீழ்ந்தார் என்று கூறப்படுகிறது. உடனடியாக அந்த இளைஞனைப் பிடித்த பொலீஸார் அவரது சேர்ட்டைக் களைந்து அவரிடமிருந்து சில பொருள்களை மீட்டபின் அவரை யாழ். மருத்துவமனைக்கு கொண்டு போய்ச் சேர்த்தனர். அங்கு பொலீஸாரின் பாதுகாப்புடன் அவருக்குச் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

ஊரெழு மேற்கைச் சேர்ந்த செல்லத்துரை குகராஜா (வயது23) என்ற இந்த இளைஞர் தனது உறவினர் ஒருவரின் பிறந்த தினத்துக்குப் பொருள்களை வாங்குவதற்காக யாழ். நகரப்பகுதிக்கு வந்தவேளையே அவருக்கு இக்கதி நேர்ந்திருக்கிறது.

சுடப்பட்ட இளைஞரிடம் இருந்து கிரனேட் மற்றும் சயனைட் வில்லை என்பவற்றைத் தாங்கள் மீட்டதாக யாழ். பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர்.

கடை முதலாளி ஒருவரிடம் ஒப்படைக்குமாறு கோரி நகரப்பகுதியில் வைத்துப் பொதி ஒன்றை இளைஞர்கள் சிலர் தன்னிடம் தந்தனர் என்றும்—

அந்தப் பொதியோடு சேர்த்து அவர்கள் தந்த கிரனேட்டே தம் வசம் இருந்தது என்றும்—

பிரஸ்தாப இளைஞர் வாக்குமூலத்தில் கூறி உள்ளார் என யாழ். பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கிரனேட் அடங்கிய பொதியை இளைஞரிடம் ஒப்படைத்த இனந்தெரியாத அந்த நபர்களுக்கும் கைதாகியுள்ள இந்த இளைஞருக்கும் தொடர்பு இருக்கலாம் என்றும் இவர் விடுதலைப் புலிகளின் ஆதரவாளராக இருக்கக்கூடும் எனச் சந்தேகிப்பதாகவும் பொலீஸ் தரப்பில் கூறப்பட்டிருக்கிறது.

யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள இளைஞருடன் பேசுவதற்கு எவரும் அனுமதிக்கப்படவில்லை.

ஆனால் தனது மகன் ஓர் அப்பாவி என்றும் அவருக்கும் புலிகள் இயக்கத்துக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது எனவும் இளைஞரின் தாயார் கண்ணீர்மல்கக் கூறியிருக்கிறார்.

ஏதேனும் சதித்திட்டத்தில் இந்த இளைஞர் சிக்கியிருக்கலாம் என்று அவரது குடும்பத்தினர் சந்தேகிக்கின்றனர்.

## மிதிவெடிப் பயங்கரம்

யாழ்ப்பாணம் கட்டைப்பிராயில் அமுக்க வெடியில் ஒட்டோ ஒன்று சிக்கியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறுபேர் உட்பட ஏழுபேர் ஒட்டுமொத்தமாக உயிரிழந்த மனிதப் பேரவலம் நடந்து ஒருமாத காலத்துக்குள் தென்மராட்சிப் பகுதியில் மிதிவெடியினால் மற்றொரு மனித உயிரும் காவுகொள்ளப் பட்டிருக்கிறது.

சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் தனது வீட்டைப் பார்த்துவரச் சென்ற நாகமுத்து சின்னத்துரை என்ற குடும்பஸ்தர் மிதிவெடியில் சிக்கிப் பலியாக நேர்ந்துள்ளது.

தனது வளவில் பிடுங்கிய தேங்காய்களை அங்கு வைத்து உரித்துக் கொண்டிருந்த சமயம் இவர் மிதிவெடியில் சிக்கியிருக்கிறார். இதில் பயங்கரம் என்னவென்றால் முதலில் மிதிவெடி வெடித்தபோது தூக்கி வீசப்பட்ட இவர் தனது அடுத்த காலின் உதவியுடன் எழுந்து நடக்க முற்பட்டபோது அடுத்த மிதிவெடி வெடித்ததில் அவரது இரண்டாவது காலும் சிதறியது. இரு கால்களும் சிதறிப்போகத் தரையில் வீழ்ந்த இவர் நீண்டநேரம் அவ்விடத்திலேயே கவனிப்பாரின்றிக் கிடந்திருக்கிறார்.

பின்னர் படையினர் சிலரின் உதவியோடு அவரை மீட்க முற்பட்டசமயம் அவரது முதுகுப் பகுதிக்குக் கீழே கிடந்த மற்றொரு மிதிவெடியும் வெடித்துச் சிதறியிருக்கிறது. இதனால் பலத்த காயமடைந்து இரத்தம் அதிகளவில் வெளியேறிய நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அக் குடும்பஸ்தர் அங்கு உயிரிழந்தார்.

குடாநாட்டில் மிதிவெடிகளின் பயங்கரங்களை உணர்த்த இந்த ஒரு சம்பவம் போதுமானதாகும். இந்த நிலையிலும்—

மிதிவெடிகள் மற்றும் ஆள்களுக்கு எதிரான கண்ணிகள் அகற்றப்பட்டு — மனித நடமாட்டத்துக்குப் பாதுகாப்பான பிரதேசம் என உறுதிப்படுத்தப்படாத இடங்களில் மக்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகள் முழு வீச்சில் தொடர்கின்றன என்பதுதான் இதைவிடப் பயங்கரமான உண்மையாகும்.

## கிராம அலுவலர்கள் மீண்டும் அதே இடத்தில்

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் பொதுமக்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிவாரண பங்கீட்டு அட்டைகளை முறைகேடாகப் பயன்படுத்தினர் என்று குற்றச்சாட்டுகளை அடுத்து இடமாற்றம் செய்யப்பட்ட கிராம அலுவலர்கள் மூவர் மீண்டும் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் கடமையாற்ற அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

நூற்றுக்கு மேற்பட்ட நிவாரண அட்டைகள் உரியவர்களுக்கு வழங்கப்படாமை அல்லது போலியான பெயர்களில் அவற்றைத் தயாரித்து முறைகேடாக வேறு ஆள்களுக்கு வழங்கியமை போன்ற குற்றச்சாட்டுக்கள் கிளம்பியதை அடுத்து பிரஸ்தாப கிராம அலுவலர்கள் மூவரும் வேறு பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு இடமாற்றப்பட்டிருந்தனர்.

பங்கீட்டு அட்டை விநியோகத்தில் இடம்பெற்றன என்று கூறப்பட்ட முறைகேடுகள் குறித்து அச்சமயம் நல்லூர்ப் பிரதேச செயலராகக் கடமையாற்றிய க.குணராசா விசாரணைகளை நடத்தி அறிக்கையை அரச அதிபருக்கு வழங்கியிருந்தார்.

பிரதேச செயலர் விசாரணைகளை மேற்கொண்டிருந்த சமயம் முறைகேடாக விநியோகிக்கப்பட்டுப் பின்னர் காணாமற்போனதாகக் கூறப்பட்ட பங்கீட்டு அட்டைகளில் ஒரு தொகுதி பிரதேச செயலரின் வீட்டின் முன் வீசப்பட்டுக்கிடந்தது.

இடம்பெயர்ந்து நொந்துபோய் இருக்கும் மக்களுக்குப் போய்ச்சேர வேண்டிய நிவாரணத்தை ஏப்பமிட முயலும் இதுபோன்ற முறைகேடுகள் குறித்து வெளியான தகவல்கள் பிரதேச செயலக மக்கள் மத்தியில் அப்போது பெரும் விசனத்தை ஏற்படுத்தி இருந்தது.

ஆனால் இந்த விவகாரம் இடம்பெற்றுச் சுமார் ஒரு வருடம் கழிந்துவிட்ட பின்னரும் கூட அதுபற்றிய விசாரணைகள் முற்றுப் பெறவில்லை. முறைகேடுகள் எங்கே எப்படி நடந்தன என்பது பற்றியோ பிரஸ்தாப கிராம அலுவலர்கள் மூவரும் அதில் சம்பந்தப்பட்டிருந் தார்களா என்பது குறித்தோ எந்தத் தகவலும் பொதுமக்களுக்குப் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

விசாரணைகளை நடத்திய அரச அதிகாரிகள் அந்த அறிக்கைகளைக் கிடப்பில் போட்டு விட்டனர் என்றும் அதனை அடுத்தே கிராம அலுவலர்கள் மூவரையும் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் மீண்டும் கடமைக்கு அமர்த்த முடிவு எடுக்கப்பட்டது என்றும் அறியவருகிறது.

—வலிகாமத்தான்.

# காதல் கானம் இசைக்கும் சில்வண்டுகள்

ஐம்பது மில்லிமீட்டர் அல்லது அதற்கும் குறைவான நீளமுடைய சில்வண்டு ஒருவேளை உங்களைக் கவராமல் இருக்கலாம். ஆனால் இந்த சில்வண்டின் கானம் உலகிலுள்ள கோடாகோடி மக்களைச் சுண்டி இழுக்கிறது. இந்தச் சிறிய உயிர் எவ்வாறு பாட்டிசைக்கிறது, எதற்காக?

சுமார் 2,400 சில்வண்டு வகைகளில் ஆண் சில்வண்டுகள் மட்டுமே பாடுகின்றன, அல்லது ரீங்காரமிடுகின்றன. ஆனால் இவற்றின் குரல்வளையிலிருந்து குரல் வருவதில்லை, இவை தமது இறக்கைகளால் தான் இசை அமைக்கின்றன. முன்பக்கச் சிறகுகளில் ஒன்றிலுள்ள ஒரு பகுதியால் மற்றொன்றில் உள்ள சுமார் 50 முதல் 250 பற்கள் போன்ற பாகங்களை (Projections) உரசுவதன் மூலம் ஆண் சில்வண்டுகள் உச்ச ஸ்தாயியில் பாடுகின்றன. ஒரு வினாடிக்கு எத்தனை பற்களை உரசுகிறது என்பதை பொறுத்து தொனியின் அதிர்வெண் (Frequency) இருக்கும் என்பதாக ஓர் என்ஸைக்ளோப்பீடியா விளக்குகிறது. இந்த அதிர்வுகள் சில்வண்டின் தனித்தன்மை மிக்க கீதமாக காற்றில் ஒலிக்கின்றன. ஆனால் இந்த ஆண் சில்வண்டு நமக்காக கச்சேரி நடத்துவதாக எண்ணி விடாதீர்கள்...! வருங்காலத் துணையை மயக்குவதே இந்த இசைக் கலைஞனுடைய நோக்கம்.



இயற்கையின் ரகசியத்தை ஆராய்தல் என்ற ஆங்கிலப் புத்தகம் இவ்வாறு விளக்குகிறது: "துணையை தேடுவதில் இந்த ஆண் சில்வண்டு கை தேர்ந்து விளங்குகிறது. வித்தியாசமான மூன்று பாடல்களை பாடுகிறது: ஒன்று தான் இருப்பதை விளம்பரப்படுத்துவதற்கு, மற்றொன்று இணை சேர்வதற்கு, இன்னொன்று போட்டியாளர்களை விரட்டியடிப்பதற்கு."

பெண் சில்வண்டின் ஆசையை தூண்டும்வரை, தான் காத்திருப்பதை விளம்பரப்படுத்த சில் ஆண் வண்டுகள் சதா பாடிக் கொண்டே இருக்கும். முன்னங்கால்களில் இருக்கும் காதுகளால் பெண் சில்வண்டு அந்தப் பாடலை கேட்கிறது. ஆனால் இந்தத் தொலைதூர காதலோடு அது திருப்தியடைவதில்லை. கானம் எங்கிருந்து பிறக்கிறது என்பதை அறிய ஓடோடி வருகிறது. அப்போது அந்த ஆண் சில்வண்டு இனிய கீதமாகிய காதல் கானத்தில் தொடர்ந்து பாட்டிசைக்கிறது. இது காதலன் பால் பெண் சில்வண்டை கவர்கிறது. இப்போது அந்தச் சில்வண்டுகள் இணை சேர்கின்றன. கிழக்கு ஆசியாவில், ஆண் சில்வண்டுகளின் பாடலை கேட்டு மகிழ்வதற்காக சிலர் அவற்றை செல்லப் பிராணியாக வைத்துக் கொள்கிறார்கள். வேறு சிலரோ சில்வண்டின் இயற்கை வாழிடத்திலேயே அவற்றின் இன்னிசையை அனுபவிக்க விரும்புகிறார்கள். எந்த சூழலில் இருந்தாலும், இந்தச் சின்ன சிறு சில்வண்டின் இன்னிசை உலகெங்கும் வாழும் மனிதரை கவர்கிறது. அதன் படைப்பாளருக்கு துதி சேர்க்கிறது.

—ரமேஷ்காந்த்


இலகுவில் ஆங்கிலம் கற்க ஓர் அரிய சந்தர்ப்பம்!

வகுப்புக்கள்

Spoken English, Listening and Conversation, Reading and Discussion, Business English and writing skills

என பல்வேறு நவீன முறைகளில்
யாழ்ப்பாணக் கல்லூரி, கொழும்பு மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகங்களின் முன்னாள் விரிவுரையாளரும், ஜப்பானிய பல்கலைக்கழகங்களில் நீண்ட அனுபவம் பெற்றவருமான

ஆசிரியர்: சீலன் கதிர்காமர்

அவர்களால் நடத்தப்படும்
வியாழன் முதல் ஞாயிறு வரை மாணவர்களின் தேவைக்கேற்ப உடனுக்குடன் வகுப்புகள் ஒழுங்கு செய்து தரப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:

CENFED

No. 33, Frankfurt Place, Bambalapitiya,
Colombo - 04. Tel: 588810, 071 - 73610

அலுவலக நேரம்:
செவ்வாய் — சனி காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை

# நுளம்புகளை தேடிச்சென்று அழித்தொழிக்க ஆவேசம்



அமேசன் நாட்டில் நுளம்புகளின் பெருக்கம் மிகவும் பயங்கரமாக அதிகரித்திருக்கிறது. மலேரியா நோய் பரவுவதும் உச்சத்தை அடைந்திருக்கிறது. அதனால் நுளம்புகளைத் தேடிச் சென்று அழித்தொழிக்கும் ஆவேசம் மருத்துவ நிபுணர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. நுளம்புகளை அழித்தால் போதாது நுளம்புகள் மனிதர்களைக் கடிப்பதால் மலேரியா டெங்கு போன்ற நோய்கள் எவ்வாறு பரவுகின்றன என்பதை அறிய அவர்கள் விரும்பினர். நீர் தேங்கியுள்ள இடங்களுக்குச் சென்று நுளம்புகளிடம் கடி வாங்கி தங்களுடைய தேகத்தில் ஏற்படும் தாக்கத்தை அவதானித்து நோயாளர்களைக் காக்க முயலுகிறார்கள்.


# குரைக்காத நாய்கள் கடித்துக் குதறும் பீதி



குரைக்கின்ற நாய்கடிக்காது என்பார்கள். அது எவ்வளவு தூரம் உண்மையோ தெரியாது. ஆனால் ஆஸ்திரேலியாவில் குரைக்காத நாய்கள் குழந்தைகளைக் கடித்துக் குதறும் அவலம் நடக்கிறது. அங்குள்ள விடுமுறை முகாம்களில் வந்து தங்கியிருக்கும் குடும்பத்தவர்களின் குழந்தைகளை டின்கோ என அழைக்கப்படும் கட்டாக்காலி நாய்கள் கடித்துக் குதறி விடுகின்றன. அந்த நாய்களைச் சுட்டுத் தள்ளுவதில் பொலிஸார் மும்முரமாக இருக்கிறார்கள்.

# புனித யுத்தம் புரிந்திட தயாராகும் சீனர்கள்

கம்யூனிஸ்ட் சீனாவில் சித்தாந்த ரீதியிலான அடக்கு முறைகள் அதிகம் என்று கூறப்படுகிறது. அத்தகைய நெருக்குதல்களை எதிர்த்து புனித யுத்தம் புரிபவர்களும் அங்கு உருவாகி வருகிறார்கள். ''பளுன் கொங்க்'' எனப்படும் புனித போராளிகள் சமூக ரீதியிலான வலுவினைப் பெற்று வருகிறார்கள்.



சீனாவின் ''பளுன் கொங்க்'' போராளிகள் இயக்கம் வெளிநாடுகளில் தமது நடவடிக்கைகளை விஸ்தரித்திருக்கிறது. ஆஸ்திரேலியாவில் சிட்னி துறைமுக மண்டபப் பின்னணியில் ''பளுன் கொங்க்'' அணியினர் உடற்பயிற்சி செய்யும் காட்சி.

# கால்கள் முடமானாலும் நிலை குலையாத நங்கை



சென்பான்ஹொங் என்னும் சீனத்துப் பெண் சிறுவயதிலேயே எலும்புப் புற்றுநோயினால் பீடிக்கப்பட்டவர். கால்கள் முடமானாலும் நிலைகுலைந்திடாத பான்ஹொங் 24 வயதில் ரசாயன தொழில் நுட்பவியலாளரானார். கம்பியூட்டர் தொழில் நுட்பத்திலும் வித்தகியானார். ஆயினும் தேசிய அளவில் நடந்த இன்டர்நெட் போட்டியில் அவரால் கலந்து கொள்ள முடியவில்லை. உடல் ஊனமுற்ற பெண் இந்தப் போட்டியில் கலந்து கொள்ள முடியாது என்று அறிவித்தார்கள். அதனால் இன்டர்நெட் யுகத்தையே தனது ஆயுதமாக ஏந்தி ஊனமுற்ற சீனநாட்டுப் பெண்கள் பற்றி இணைய தளம் ஒன்றை உருவாக்கினார். ஒரு வீரப் பெண்ணாகி விட்டார்.

# 2050 உலகக் கிண்ணத்துக்கு ரோபோக்களும் போட்டி

ரோபோ எனப்படும் இயந்திர மனிதனின் தேவை உலகில் அதிகரித்திருக்கிறது. நிர்மாணப் பணிகளுடன் ரோபோக்கள் நின்றுவிடவில்லை விளையாட்டுத் துறையிலும் காலடி எடுத்து வைத்து விட்டன. ரோபோக்கள் உதை பந்தாட்டத்தில் ஆர்வம் கொண்டிருக்கின்றன. ரோபோக்கள் மத்தியில் அணிகள் அமைக்கப்பட்டு ரோபோக்கள் உதைபந்தாட்டப் போட்டிகளும் நடைபெறுகின்றன. அமெரிக்காவில் ரோபோ கிண்ண உதைபந்தாட்டம் நடைபெறுகிறது. ரோபோக்கள் மத்தியில் நடைபெறும் உதை பந்தாட்டங்கள் விரிவடைந்து 2050 ஆம் ஆண்டளவில் மனிதருக்கும் ரோபோக்களுக்கும் இடையில் உலகக்கிண்ண உதைபந்தாட்டம் நடைபெறும் என்று எதிர்வு கூறப்படுகிறது.



# மசாலா மிக்ஸ்

ஒக்டோபர் 21, சுடர்ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை தேவயானியுடையது.

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு.

1. ஞா. அபிராமி, சண்டிலிப்பாய்.
2. ஹிதாயா, இக்பால், கெலிஓயா.
3. மோகன கிருஷாந், திருகோணமலை.

## ஒளிந்திருக்கும் முகம் எது?



சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுகள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (21.10.2001) மசாலாமிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகை யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? லுங்கியைத் தூக்கிக் கட்டி கதாநாயகனாக நடிப்பதற்கு ஒரு கோடி ரூபா வாங்கிய கிரண் நடிகர் இவர். மீண்டும் பெயர் பெற்று வருகிறார்.

இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர்ஒளி'
36/2, பிரெட்ரிக்கா வீதி
கொழும்பு – 06.



# தமிழக தேர்தல் ஊழலால் உள்ளாட்சி மன்றங்கள் பாழ்!

## மல்யுத்த களங்களாக மாறும் ஆபத்து

தமிழக உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடந்து முடிந்திருக்கின்றன. அ.தி.மு.க. அணியினர் முன்னணியில் என்று ஆய்வுகள் தெரிவித்தன.

இதன்படி மொத்தமுள்ள உள்ளாட்சி மன்றங்களில் 50 சதவீதமானவை அ.திமு.க அணிக்குக் கிடைத்தன என்று கணிக்கப்பட்டது. அப்படியானால் தி.மு.க. கூட்டணிக்கு 50 சத வீதமான உள்ளாட்சி மன்றங்களா?

இந்தத் தேர்தலில் வென்றவர்கள் யார்?

இந்தக் கேள்விக்கு விடை கிடைக்க மேலும் சில காலம் செல்ல வேண்டியிருக்கும்.

ஆளும் கட்சியான அ.தி.மு.கவுக்கு அமோக வெற்றி கிட்டியிருந்தால் அதன்மூலம் ஜெயலலிதாவுக்கு அனுதாப அலை இன்னும் இருக்கிறது என்பது நிலை நிறுத்தப்பட்டிருக்கும்.

ஆனால் ஜெயலலிதாவின் மாளிகையுள்ள சென்னை மாநகர வட்டாரத்தில் தி.மு.க வேட்பாளர் வெற்றி பெற்றிருக்கிறார். அதே போல முதலமைச்சர் பன்னீர் செல்வத்தின் சொந்தத் தொகுதியும் தி.மு.க வசமாகியிருக்கிறது.

எனவே இந்த உள்ளாட்சித் தேர்தலின் வெற்றி தோல்விகளைப் கொண்டு கட்சிகளின் செல்வாக்கு பற்றி மதிப்பீடு செய்ய முடியாது.

உள்ளாட்சித் தேர்தலின் போது சில கட்சிகள் குத்துக் கரணம் அடித்தன. ஆனால் அதன் மூலம் அந்தக் கட்சிகளுக்கு லாபம் ஏதும் கிட்டவில்லை.

பாட்டாளி மக்கள் கட்சி தி.மு.க. அணியில் இணைந்தது. ஆனால் கட்சிக்குப் பெரும் பின்னடைவு தான் ஏற்பட்டது. மேலும் சில சாதிக் கட்சிகளின் நிலையும் இது தான்.

ஆறு மாநகர சபைகளுக்கும் நடந்த தேர்தல் தான் முக்கியமானது. அங்கெல்லாம் மல்யுத்தங்கள் நடந்தது போன்ற உணர்வு தான் ஏற்பட்டது.

அ.தி.மு.கவுக்கு மூன்று, தி.மு.கவுக்கு இரண்டு, த.மா.காவுக்கு ஒன்று என்ற வீதத்தில் மாநகர சபைகள் கிடைத்தன. ஆனால் இந்த மாநகர சபைகளில் மேயர்களாக வந்தவர்கள் தமது நிர்வாகத்தை சீரான முறையில் நடத்த முடியாது.

சென்னை, திருச்சி, மதுரை, நெல்லை, கோவை, சேலம் ஆகிய 6 மாநகராட்சிகளிலும் மேயர் பதவியை கைப்பற்றிய கட்சிகளுக்கு வட்டார உறுப்பினர்களில் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

எதிர் அணிகளைச் சேர்ந்தவர்கள்தான் அதிக இடங்களைக் கைப்பற்றி உள்ளனர். இதனால் ஆறு மாநகராட்சிகளிலும் துணை மேயர் பதவியை எதிர்க்கட்சிகளே கைப்பற்றும் நிலை ஏற்பட்டுள்ளது.

பொதுவாக துணை மேயர் பதவிக்கு மேயர் பதவியைக் கைப்பற்றிய கட்சியை சேர்ந்தவர்கள்தான் தேர்ந்து எடுக்கப்படுவார்கள். ஆனால் இந்தமுறை துணை மேயர் பதவியை எதிர் அணியினர் கைப்பற்றும் வாய்ப்பு ஏற்பட்டு இருக்கிறது.

சென்னையில் மேயர் பதவியை தி.மு.க கைப்பற்றி இருக்கிறது. ஆனால் உறுப்பினர்கள் எண்ணிக்கை தி.மு.கவுக்கு அ.தி.மு.கவை விட குறைவாகவே உள்ளது.

தி.மு.க 61 இடங்களையும் அதன் தோழமைக் கட்சியான பாரதீய ஜனதா 3 இடங்களையும் பா.ம.க 1 இடத்தையும் பெற்றுள்ளன. மொத்தமாக 65 இடங்களை தி.மு.க கூட்டணி பிடித்துள்ளது.

அ.தி.மு.க 67 இடங்களையும், த.மா.கா 14 இடங்களையும், வ.கம்யூனிஸ்ட் 1 இடத்தையும் பெற்றுள்ளன. மொத்தம் 82 இடங்களை அ.தி.மு.க கூட்டணி பிடித்துள்ளது.

சென்னை மாநகராட்சியில் மொத்தம் உள்ள 155 இடங்களில் 78 உறுப்பினர்களின் ஆதரவு கிடைத்தால் மட்டுமே தி.மு.கவுக்கு துணை மேயர் பதவி கிடைக்கும்.

ஆனால் தி.மு.க வுக்கு 65 இடங்கள்தான் கிடைத்துள்ளன. அ.தி.மு.க கூட்டணிக்கு 82 இடங்கள் உள்ளன. எனவே அ.தி.மு.க துணை மேயர் பதவியை கைப்பற்றுவது உறுதி.

மதுரை மாநகராட்சி மேயர் பதவியை தி.மு.க கைப் பற்றி உள்ளது. மொத்தம் உள்ள 72 வட்டாரங்களில் எந்தக் கூட்டணிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால் துணை மேயர் பதவிக்கு கடும் போட்டு ஏற்பட்டுள்ளது.

தி.மு.க கூட்டணி மொத்தம் 29 இடங்களைப் பெற்றுள்ளன. அதில் தி.மு.க 27 இடங்களையும், பாரதீய ஜனதா 2 இடங்களையும் பிடித்துள்ளன.

அ.தி.மு.க கூட்டணிக்கு 28 இடங்கள் கிடைத்துள்ளன. இதில் அ.தி.மு.க 22 இடங்களிலும், த.மா.கா 5 இடங்களையும் வ.கம்யூனிஸ்டு 1 இடத்தையும் பெற்றுள்ளன.

இங்கு இ.கம்யூனிஸ்ட் 5 இடங்களையும், காங்கிரஸ் 1 இடத்தையும் பிடித்துள்ளன. சுயேச்சை குழுவில் 9 பேர் வெற்றி பெற்றுள்ளனர். சுயேச்சைகளின் ஆதரவு யாருக்கு கிடைக்கிறதோ அந்தக் கட்சிக்குத்தான் துணை மேயர் பதவி கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.


மேஜர் ஸ்டாலின் தப்பிப் பிழைத்தார்.

திருச்சி மாநகராட்சி மேயர் பதவியை த.மா.கா கைப்பற்றி உள்ளது. மொத்தம் உள்ள 60 இடங்களில் தி.மு.க கூட்டணி 31 இடங்களைப் பிடித்துள்ளது. அ.தி.மு.க கூட்டணி 19 இடங்களை மட்டும் கைப்பற்றியுள்ளது.

காங்கிரஸ், ம.தி.மு.க ஆகியவை தலா 1 இடத்தையும், சுயேச்சைகள் 8 இடங்களையும் பெற்றுள்ளன. எனவே துணை மேயர் பதவி தி.மு.கவுக்கு எளிதாகக் கிடைத்துவிடும்.

கோவை மாநகராட்சி மேயர் பதவியை அ.தி.மு.க கைப்பற்றி உள்ளது. மொத்தம் 72 வட்டாரங்களில் அ.தி.மு.க கூட்டணி 30 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. தி.மு.க கூட்டணி 24 இடங்களைக் கைப்பற்றியுள்ளது.

ம.தி.மு.க 3 இடங்களிலும் இ.கம்யூனிஸ்ட் 4 இடங்களிலும் சுயேச்சைகள் 8 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளனர். கோவை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் துணை மேயர் பதவியைக் கைப்பற்ற இரு அணிகளுக்கும் சுயேச்சைகள் ஆதரவு தேவை.

சேலம் மாநகராட்சி மேயர் பதவியை அ.தி.மு.க கைப்பற்றி உள்ளது. மொத்தம் 60 வட்டாரங்களில் சரி பாதியாக அ.தி.மு.க கூட்டணி 30 இடங்களைக் கைப்பற்றி உள்ளது. தி.மு.க கூட்டணி 21 இடங்களைக் கைப்பற்றி உள்ளது.

ஜனதா தளம் 1 இடத்தையும், சுயேச்சைகள் 8 இடங்களையும் கைப்பற்றியுள்ளன. ஒரே ஒரு உறுப்பினரின் ஆதரவு கிடைத்தால் துணை மேயர் பதவி அ.தி.மு.கவுக்கு கிடைக்கும்.

நெல்லை மாநகராட்சி மேயர் பதவியை அ.தி.மு.க கைப்பற்றியுள்ளது. இங்கு அ.தி.மு.க கூட்டணியில் 17 உறுப்பினர்கள் வெற்றி பெற்றுள்ளனர். தி.மு.க கூட்டணிக்கு 24 இடங்கள் கிடைத்து உள்ளன.

நெல்லை மாநகராட்சியில் மொத்தம் உள்ள 55 இடங்களில் 28 உறுப்பினர்களின் ஆதரவு கிடைத்தால்தான் துணை மேயர் தேர்தலில் வெற்றி பெற முடியும். இங்கு 14 சுயேச்சைகள் வெற்றி பெற்றுள்ளனர். சுயேச்சைகளின் ஆதரவு கிடைக்கும் கட்சிக்குத்தான் துணை மேயர் பதவி.

புதிய மாநகர மேயர்களாக வந்திருப்பவர்களில் சென்னை மேயராக வந்த ஸ்டாலின் பெற்ற வெற்றி தான் குறிப்பிடத்தக்கது. அவரை வெட்டிச் சாய்க்க மாபெரும் பிரயத்தனமே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

''ஒரு லட்சம் பெரும்பான்மை வாக்குகளுடன் வெற்றி பெற்றிருக்க வேண்டியவன் நான். ஆனால் அ.தி.மு.கவினர் அட்டூழியத்தினால் எனது வாக்குகள் கெடுக்கப்பட்டன.''

சென்னை மேயராகத் தெரிவு செய்யப் பட்ட எம்.கே.ஸ்டாலின் மேற் கண்டவாறு கூறினார்.

''சென்னையில் அ.தி.மு.க வெற்றி பெற்றதாக அறிவிக்க ஏற்கனவே திட்டமிட்டு இருந்தனர். அவர்களுடைய அராஜகத்தை எல்லாம் கடந்து வெற்றி பெற்று இருக்கிறேன்.

மாலையில் 4.00 மணி அளவில் நான் ஆளுநரை சந்தித்து நிலைமையை எடுத்துக் கூறினேன். இரவு 11 [illegible]வில் அ.தி.மு.க வேட்பாளர் பாலகங்கா, அமைச்சர் ஜெயக்குமார், [illegible] எம்.எல்.ஏ ஆகியோர் மாநகராட்சி சென்று பாலகங்கா வெற்றி பெற்றதாக அறிவிக்க முயற்சிகள் நடப்பதாக எனக்கு செய்தி கிடைத்தது.

ஆனால் நான் ஆளுநரிடம் புகார் செய்து இருந்ததால் அவர்களால் எதுவும் செய்ய முடியாமல் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் நான் வெற்றி பெற்றதாக அறிவித்தனர்.

இவ்வாறு மு.க.ஸ்டாலின் கூறினார்.

கே : அ.தி.மு.க உறுப்பினர்கள் அதிக அளவில் வெற்றி பெற்று இருக்கிறார்களே. திட்டங்களை எப்படி நிறைவேற்றப் போகிறீர்கள்.

ப : அரசியல் ரீதியாக எந்தத் தீர்மானமும் கொண்டு வரப்போவதில்லை. மக்கள் நலத்திட்டங்களுக்கான தீர்மானங்களை மட்டுமே கொண்டு வருவோம். அதனால் அவை எளிதாக நிறைவேறி விடும். இதற்கு அ.தி.மு.க கவுன்சிலர்கள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் நடவடிக்கை பற்றி மக்களிடம் எடுத்துச் சொல்வோம். எந்தப் பிரச்சினை வந்தாலும் சமாளித்து நடத்துவேன். முறையாக வாக்குகள் எண்ணப்பட்டு இருந்தால் 100க்கும் மேற்பட்ட தி.மு.க உறுப்பினர்கள் வெற்றி பெற்று இருப்பார்கள். இந்த தில்லு முல்லுகள் பற்றி ஏற்கனவே தேர்தல் கமிஷனுக்கு நாங்கள் புகார் கொடுத்துள்ளோம். இந்த புகாரின் அடிப்படையில் தேர்தல் முறைகேடுகள் பற்றி நீதிமன்றத்தில் வழக்கு தொடருவோம். அதிகாரிகள் எவரும் இல்லாமலே அவர்களாகவே முடிவை அறிவித்து இருக்கிறார்கள்.

இவ்வாறு மு.க.ஸ்டாலின் கூறினார்.

அதே நேரத்தில் அ.தி.மு.க ஆட்சியாளர்கள் தேர்தல் மோசடிகளில் ஈடுபட்டு வன்முறையாளர்களாக மாறினார்கள் என்றும் புகார் தெரிவிக்கப்பட்டது.

தமிழக அரசு மட்டத்திலான தி.மு.க — அ.தி.மு.க. பலப்பரீட்சை தமிழகம் முழுவதும் பட்டி தொட்டி எங்குமே விதைக்கப்பட்டு விட்டது.

இந்தியாவிலேயே சிறப்பான நிர்வாக நடைமுறையைக் கொண்ட மாநிலம் என்று பெயர் பெற்றது தமிழகம். அதன் பெருமையை மழுக்கடித்து விடும் விதத்தில் உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் அமைந்து விடக்கூடாது.

—கதாசி





AWAIT! உலகப் பிரசித்திபெற்ற HERO சைக்கிள்களை யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளலாம்.




- ISO 9001 மற்றும் 9002 சர்வதேச தரம்வாய்ந்தது.
- 8 வருடம் உத்தரவாதம். ஸ்டான்டட், ஸ்போட்ஸ், ஆண்களுக்கும், பெண்களுக்கும் மற்றும் பல விதமான புதிய ரகங்கள்.
- 82 நாடுகளுக்கும் சைக்கிள்களை ஏற்றுமதி செய்யும் உலகளாவிலான ஒரே ஸ்தாபனம். அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா ஆகிய நாடுகளும் உள்ளடங்கும். மேலும் பல நாடுகள்.
- இதுவரைக்கும் தொழிற்சாலையில் 50 லட்சம் சைக்கிள்களை உற்பத்தி செய்து எம் வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்தி உள்ளோம்.

தரம்வாய்ந்ததைத் தெரிவு செய்யுங்கள்.
போலியைக் கண்டு ஏமாறாதீர்கள்.
பிழையான தொழில்நுட்பத்தின் வழிகாட்டலைக் கண்டு ஏமாற வேண்டாம்.

மேலும் விவரங்களுக்குத் தொடர்புகொள்க:

HERO CYCLES
பைஸால் ஹாட்வெயார் ஸ்டோர்ஸ்
FAIZAL HARDWARE STORES
74, டாம் வீதி, கொழும்பு - 12.
தொலைபேசி: 01-384250-4, 01-433727 பெக்ஸ் 01-446088
E-mail: faisto@sri.lanka.net

# தேர்தலில் பிடிக்கும் சூடு களமுனையிலும் வெடிக்குமா?

## அரசியல் நெருக்கடி காலத்தில் படையினரின் உளவியல் பலம் சிதறடிப்பு

டிசம்பர் 5இல் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டு விட்டன. 18 பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளில் இருந்தும் 42 சுயேச்சை அணிகளில் இருந்தும் சுமார் 4610 பேர் 225 ஆசனங்களைக் கொண்ட நாடாளு மன்றில் இடம்பிடிப்பதற்காக தேர்தலில் வாக்குக் கேட்டு நிற்கின்றார்கள்.

இம்முறை இத்தேர்தலில் போட்டியிடும் பிரதான கட்சிகள் தனித்து அல்லாது பல கட்சிகளை உள்ளடக்கிய கூட்டணியாகவே களம் இறங்கியிருக்கின்றன.

இது ஒருபுறம் இருக்க இம்முறை போட்டியிடும் கட்சிகள் இரண்டாகப் பிரிந்து போயுள்ள ஒரு நிலைமையைக் காணக்கூடியதாக இருக்கிறது.

புலிகளுக்கெதிரான கொள்கை உடைய கட்சிகள் ஆளுங்கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துள்ளன.

புலிகளுடன் பேசித்தான் தீர்வுகாண வேண்டும், யுத்த நிறுத்தம் வேண்டும், அதிகாரப் பரவலாக்கல் வேண்டும் என்ற நிலைப்பாட்டை கொண்ட கட்சிகள் மற்றொரு அணியில் நிற்கின்றன. எதிரணியிலுள்ள பெரும்பான்மை இனக்கட் சிகள் இவ்வாறான ஒரு கருத்தைக் கொண்டிருந் தாலும் ஆளும் கட்சியின் வாய்க்கு அகப்பட்டு பெரும்பான்மை இன மக்களின் உணர்வுக ளுக்கு முகம் கொடுக்க அவை தயங்குகின்றன.

உதாரணமாக தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் சம உரிமையுடன் சுதந்திரமாக வாழ வேண்டும் என்கிறது ஜே.வி.பி. ஆனால் அதன் உள்நோக்கம் இனவாதத் தைத் தூண்டும் விதத்திலேயே உள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னத் தின் கீழ் ஒன்றாகியுள்ள தமிழ்க்கட்சிகளை 'புலிகளின் ஏஜெண்டு கள்' என்றும் யானையும் புலியும் ஒன்றாகச் சேர்ந்து இம்முறை தேர்தலில் நிற்கின்றன என்றும் இனவாதக் கருத்துக்களை முன்வைத்து ஜே.வி.பி. பரப்புரைகளில் ஈடுபட்டு வருகிறது.

அத்துடன் அரச கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகளும் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களும் இவ்வாறான கருத்துக்க ளையே முன்வைத்து வருகின்றன.


ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாட்டில் கொளுந்து விட்டெரியும் இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு கண்டு சிதைந்து போயுள்ள பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது தனது தலையாய கடமை என்று கூறுகிறார். அவர் புலிகளுக்கு நாட்டைப் பிரித்துக் கொடுத்துவிடப் போகிறார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

இதேபோலத்தான் அரச சார்பு தமிழ் கட்சிகள் ஐ.தே.க. மீதும் நான்கு கட்சிகள் கூட்டமைப்பு மீதும் புலிச் சாயத்தை பூச விளைகின்றன.

ஆனால் புலிகளின் உண்மையான நிலைபாடுதான் என்ன? பதவிக்கு எந்தக் கட்சி வந்தாலும் தமிழர்களின் பிரச்சினையை ஒரு பயங்கரவாதப் பிரச்சினையாக நோக்கும் வரை ஜனநாயக வழிமுறைகளில் நம்பிக்கை வைக்க அவர்கள் தயாரில்லை.

அரச தரப்பு நாடாளுமன்ற கூட்டத்தொடரை ஒத்திவைத்தது முதல் அதைக் கலைக்கும் வரையான சுமார் 3 மாதகாலப் பகுதியை புலிகள் தமக்கு சாதமாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

இக்காலப் பகுதியில்தான் கடலில் பாரிய பல சமர்கள் இடம்பெற்றுள்ளன. கிழக்கு மாகாணத்தில் பாரிய ஆட் சேர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றன. இதற்கு மேலாக சுமார் 5க்கும் மேற்பட்ட ஆயுதக் கப்பல்களை இலங்கையின் சர்வதேசக் கடல் எல்லை வரை செலுத்தி வந்து முல்லைத்தீவு கடலில் படகுகளில் சாமர்த்தியமாக உள்வாங்கியிருக்கிறார்கள். அத்துடன் அங்கொன்றும் இங்கொன்றுமாக வடக்கு கிழக்கில் அமைந்திருக்கும் பாதுகாப்பு நிலைகள் மீது தாக்குதலை நடத்தி உள்ளனர். இப்படியாக படைத்தரப்பு மீது இடைவிடாது அழுத்தத்தைக் கொடுத்து அவர்களது உளவியல் பலத்தை சிதறடிக்கும் நடவடிக்கைகளில் புலிகள் ஈடுபட்டிருக்கிறார்கள்.




இறுதியாக நீண்ட தூரம் ஊடுருவித் தாக்கும் இராணுவ கொமாண்டோப் படையணிகளின் தாக்குதல்களை முறியடிக்க பல்வேறு நடவடிக்கைகளை தமது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் மேற்கொண்டிருக்கிறார்கள்.

புலிகளின் இந்த நடவடிக்கைக்கும் நாடாளுமன்ற ஒத்திவைப்புக்கும் அது கலைக்கப்பட்டமைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

தெற்கில் நிலையற்ற குழப்பங்கள் நிறைந்த அரசியல் சூழலை எப்போதுமே விரும்பும் புலிகள் அவற்றின் வெளிப்பாடுகளால் கவரப்படவில்லை. ஐ.தே.க. ஆட்சிக்கு வர இருக்கிறதே என்று அவர்களுடன் பேரம் பேசவுமில்லை.



அவர்களது நடவடிக்கைகள் எல்லாம் படையினருக்கு எதிரான தயார் படுத்தல்களாகவே இருந்தன. தெற்கிலுள்ள அரசியல் கட்சிகளுடன் தேன் நிலவு கொண்டாடுவதை அடிப்படையாகக் கொண்டிருக்க வில்லை.

தமிழ்க்கட்சி களைப் பொறுத்தவரை அவர்கள் தமது நாடாளுமன்றக் கதிரைகளை தக்க வைக்க யாருடைய கொம்பையும் சீவத் தயாரான நிலையில் உள்ளனர் போன்றே தெரிகிறது.

தான் பதவிக்கு வந்தால் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படும் என மார் தட்டும் ஐ.தே.க. இராணுவத் தலைமைப்பீடம் சரியில்லை என்று கூறுகிறது. மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா போன்றோரை மீளவும் பதவிக்கு கொண்டுவர அது திட்டமிட்டிருப்பதாக உள்வீட்டு வட்டாரங்கள் ஊகம் தெரிவிக்கின்றன. புலிகளுடன் சமாதானம் பேச ஐ.தே.க. தயார் என்றால் மேற்படி திட்டம் எதற்கு?

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசும் 1994இல் ஆட்சியேறும் போது தன்னை ஒரு சமாதானப் புறாவாகவே காட்டிக்கொண்டது.

ஆனால் பின்னர் நடந்தது என்ன? அதுபோல் ஐ.தே.கவும் பதவிக்கு வரும்வரை சமாதானம் பேசிவிட்டு ஆட்சிக் கோலை கையில் எடுத்தவுடன் பச்சோந்தியாக மாறிவிடாது. என்பதற்கு என்ன உத்தரவாதம்?

அது பின்னர் இருமல் கிழவியை விற்றுவிட்டு தும்மல் கிழவியை வாங்கிய கதையாக மாறிவிடும். ஆகவே பொறுப்புள்ள தமிழ்க் கட்சிகள் செய்யவேண்டியதெல்லாம் அரசமைப்பினூடான சமாதான உத்தரவாதம் ஒன்றை ஐ.தே.கவிடம் இருந்து பெற்றுவிட்டுத்தான் அதற்கு ஆதரவளிக்கவேண்டும்.

எவ்வாறாயினும் நாடாளுமன்றில் ஏற்படும் வெப்ப தட்ப நிலைமைகளுக்கேற்ப புலிகள் தம்மை மாற்றிக்கொள்ளப் போவதில்லை.

இராணுவப் புலனாய்வுத் துறை அறிக்கைகளின்படி புலிகள் பாரிய யுத்தம் ஒன்றிற்கான தயார்படுத்தலில் இறங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பூநகரிப் பகுதியில் புலிகளின் நடமாட்டங்கள் அண்மைய வாரங்களில் அதிகரித்துள்ளன என்றும் தேர்தலுக்குச் சற்று முன்பாக புலிகள் யாழ் நகர் மீது மேற்கொள்ளவுள்ள அதிரடி நடவடிக்கைக்கான ஏற்பாடுகளாகக் கூட அது இருக்கலாம் எனவும் அவ்வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன.

புலிகளால் முறையாக அனுஷ்டிக்கப்படும் மாவீரர் வாரமும் இந்த இடைவெளிக்குள்ளேயே வருவதால் புலிகள் இம்முறை நிச்சயமாகவே தாக்குவார்கள் என்றே படைத்தரப்பும் நம்புகிறது. கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி இதனை வெளிப்படையாகவே கூறியிருக்கிறார்.


புலிகளால் உள்வாங்கப்பட்ட நவீன ஆயுதங்கள் என்ன என்பதை அறியத்துடிக்கும் படைத்தரப்பு, புலிக ளின் எத்தகைய தாக்குதலையும் சமாளிக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை டிசம்பர் 5ஆம் திகதி ஜனாதிபதி தனக்கு கிரக ரீதியாக நல்ல நாள் என நம்பியபடியினாலேயே அத்திகதியில் தேர்தலையும் வைக்க தீர்மானித்தார் என்று அரச தரப்பினரை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகின்றன.

அதன்படி தான் 1995இல் யாழ் மாவட்டத்தை படையினர் கைப்பற்றிய பின் டிசம்பர் 5ஆம் திகதியே யாழ் செயலகத்தில் சிங்கக் கொடியை பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை பல்லாயிரக்கணக்கான ஆயுதப் படையினர் பார்த்து நிற்க ஏற்றிவைத்தார் என்றும் இது புலிக ளின் தலைவர் பிரபாகரனின் மனதில் ஆழப் பதிந்த வடுவாகிவிட்டது என்றும் கூறப்படுகிறது.

மீண்டும் டிசம்பர் 5 ஆம் திகதியை ஜனாதிபதி பொதுத் தேர்தலுக்கான தினமாக தேர்ந்தெடுத்துள்ளமையால் அவர் பிரபாகரனின் கோபத்தை சீண்டி விட்டிருப்பதாகவும் அதற்குப் பழி வாங்குமுகமாக அவர் யாழ் நகர் மீது பாரிய தாக்குதலொன்றை மேற்கொள்ள லாம் எனவும் கூறப்படுகிறது.

எனவே அடுத்து வரும் வாரங்களில் தேர்தல்களில் பிடிக்கும் சூடு களமுனையிலும் வெடிக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.



''எங்க பாட்டி செத்ததை நினைத்தால் எ னக்கு இப்பவும் மனசுக்கு வருத்தமா இருக்கு!''

''ஏன்டி?''

''எங்க பாட்டி உயிரோட இருந்திருந்தால் ஓட்டுப்போட ஐநூறு ரூபா பணம் கிடைச்சிருக்குமே!''


சுடர் ஒளி
THE SUDAR OLI සුඩර් ඔළි
VIBRANT TAMIL DAILY & WEEKLY

36/2 பிரெட்றிக்கா வீதி, கொழும்பு – 06. (இலங்கை)
36/2 FREDRICA ROAD, COLOMBO - 06. (SRI LANKA)
36/2 [illegible] - 06. ([illegible])
TEL / FAX: 074 - 513112 / 5 E-Mail: sudar@uthayan.com

ELECTION ADVERTISEMENT RATES
தேர்தல் விளம்பரக் கட்டண விவரம்

| அளவு | கலர் | கறுப்பு/வெள்ளை |
|---|---|---|
| UNSPECIFIED | | |
| FULL PAGE | 48,000.00 | 33,000.00 |
| HALF PAGE | 25,120.00 | 17,280.00 |
| QUARTER PAGE | 12,560.00 | 8,640.00 |
| BACK PAGE | | |
| *100% EXTRA* | | |
| FULL PAGE | 75,288.00 | - |
| HALF PAGE | 42,400.00 | - |
| QUARTER PAGE | 21,200.00 | - |
| STRIP 8X6 | 12,720.00 | - |
| PAGE SPECIFICATION | | |
| 50% EXTRA | | |
| FULL PAGE | 60,288.00 | 49,500.00 |
| HALF PAGE | 33,760.00 | 25,920.00 |
| QUARTER PAGE | 16,880.00 | 12,960.00 |
| COLUMN. C.M RATE | 157.00 | 108.00 |

# தமிழ் கட்சிகள் கூட்டமைப்பு குறிக்கோளை எட்டுமா?

## தோல்வியில் முடிவடைந்த முன்னைய முயற்சிகள்

நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு வெற்றிகரமாக உருவாகிவிட்டது.

இப்படி ஒரு கூட்டமைப்பு உருவாகி இருப்பது காலத்தின் தேவை என்பதில் சந்தேகம் இல்லை.

கடந்த பொதுத்தேர்தலில் தமிழ்க் கட்சிகள் கூட்டணி அமைக்காது ஒன்றை ஒன்று எதிர்த்துப் போட்டியிட்டன. இதன் பலன் திருகோணமலை உட்பட பல இடங்களை தமிழர்கள் கோட்டைவிட்டனர். நாடாளுமன்றத்தில் தமிழர் பிரதிநிதித்துவம் குறைந்தது.

தமிழ்க்கட்சிகள் மற்றும் அமைப்புக்களிடையே ஒற்றுமை என்பது சுலுபமாகச் சாதிக்கக்கூடியது அல்ல. இப்படியான முயற்சிகள் தேர்தல் காலத்திலும் சரி தேர்தல் இல்லாத காலத்திலும் சரி தமிழ் மக்களுக்கு நெருக்கடி ஏற்படும் காலத்திலும் சரி சுலபமாக நிறைவேறுவதில்லை.

தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடை யிலானாலும் இன விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கிய தமிழ் அமைப்புகளுக்கிடையிலானாலும் ஒற்றுமை ஏற்படுத்த எடுத்த முயற்சிகள் சுலபமாக வெற்றி பெற்றதில்லை.

ஜீ.ஜீ. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கும் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையிலான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்குமிடையில் தேர்தல் காலத்திலும் தேர்தல் அல்லாத நெருக்கடியான கட்டங்களிலும் ஒற்றுமையை ஏற்படுத்த எடுத்த முயற்சிகள் வெற்றி பெற்றதில்லை.

பல வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண நகரில் தமிழ்க் காங்கிரஸும் தமிழ் அரசுக் கட்சியும் கூட்டாக எதிர்ப்பு ஆர்ப்பாட்ட முயற்சியில் ஈடுபட்டன. முற்றவெளியிலிருந்து ஒன்றாக வாகன ஊர்தியில் பவனி செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இருதலைவர்களும் ஆதரவாளர்களும் முற்ற வெளியில் சந்தித்தனர். எல்லோரும் வாகனங்களில் ஏறிக் கொண்டனர். எந்தத் தலைவர் வாகன ஊர்திக்கு தலைமை தாங்கிச் செல்வ தென்பதில் இணக்கம் ஏற்படவில்லை. ஜீ.ஜீ. தனது காரில் ஏறித்தனது ஆதரவாளர் தொடர்ந்து வர காரைச் செலுத்தினார். செல்வநாயகம் மறு திசையில் தமது வாகனத்தைச் செலுத்திச் செல்ல ஆதரவாளர்கள் பின் தொடர்ந்தனர். எந்தத் தலைவரின் பின்னால் அதிக ஆதரவாளர்கள் சென்றனர் என்பதை மதிப்பிட்டதுடன் இணைப்பு முயற்சி முடிந்தது.

பின்னர் 1975ஆம் ஆண்டில் தமிழ்க் கட்சிகளுக்கிடை யில் ஒற்றுமையை ஏற்படுத்தி தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்ட போது காவலூரர் வ. நவரத்தினத்தையும் அவரது சுயாட்சிக் கழகத்தையும் இந்தக் கூட்டணியில் இணைத்துக் கொள்ள அமைப்பாளர்கள் மறுத்துவிட்டனர்.

1985 ஆம் ஆண்டில் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ''பேச்சு வார்த்தை'' நடத்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மூலம் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். முயன்றபோது தமிழ் அமைப்புக்களை ஒன்றிணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. நான்கு அமைப்புக்களின் தலைவர்கள் சென்னையில் சந்தித்து ஒருவருடன் ஒருவர் கை கோத்து ஒற்றுமையை எடுத்துக் காட்டி புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

திம்புவில் நான்கு கட்சிகளும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டு ஒரு திட்டத்தைச் சமர்ப்பித்தன.

நான்கு தமிழ் அமைப்புக்களின் ஒற்றுமை நீடிக்கும் என்று அப்பொழுது மக்கள் எதிர்பார்த்தனர். ஒற்றுமை ஏற்பட்டிருந்த சமயம் இந்த அமைப்புக்க ளைச் சேர்ந்தவர்களே இது ஒரு தற்காலிக ஏற்பாடுதான் இது நீடிக்காது என்று கருத்து வெளியிட்டனர். யார் யாரை முந்தி ஒழித்துக் கட்டு வது என்ற நிலையே நிலவியது.

இப்பொழுது பன்னிரெண்டாவது நாடாளுமன்றத் துக்குத் தேர்தல் நடைபெறவிருப்பதைத் தொடர்ந்து நான்கு கட்சிகளிடையே ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது.

ஒற்றுமைக்காக நடந்த பேச்சு வார்த்தைகளில பொதுச் சின்னத்தை ஏற்றுக் கொள்ளச் செய்வதில் இழுபறி நிலவிய போதும் இறுதியில் இதற்கு அனைவரும் ஒத்துக்கொண்டது வெற்றிதான்.

ஆனால் இந்த கூட்டமைப்பு சுலபமாக ஏற்படவில்லை. நான்கு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் மனப்பூர்வமாக இணைந்து ஒன்றுபட்டுள்ளனர் என்றும் சொல்ல முடியாது.

''எல்லாளன் படை'' என்ற பெயரில் முதலில் வெளி வந்த துண்டுப் பிரசுரமும் இதைத் தொடர்ந்து 'பண்டார வன்னியன் படை'' ''குளக் கோட்டன் படை'' என்ற பெயர்களில் வெளிவந்த துண்டுப்பிரசுரங்களுமே இந்தக் கூட்டமைப்பு 'வெற்றிகரமாக' உருவானதற்குக் காரணம் என்று சொல்லலாம்.

இந்த ஒற்றுமையும் கூட்டமைப்பும் தொடர்ந்து நீடிக்க வேண்டுமெனில் இந்த ஒரே அமைப்பே தமிழ மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக இருக்க வேண்டும். இதுவே பெரும்பாலான மக்களின் விருப்பமாகும்.

1947 ஆம் ஆண்டில் இலங்கையின் முதலாவது நாடாளுமன்றத்துக்கு நடந்த பொதுத் தேர்தலிலிருந்து இப்போது கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் வரை தமிழ்க் கட்சிகளும் தமிழ்த் தலைவர்களும் சாதித்தது என்ன என்பதை அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பன்னிரெண்டாவது நாடாளுமன்றத்திலாவது தமிழர் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து ஒற்றையாட்சி முறையை மாற்றி பெரும்பான்மை ஜனநாயகம் தமிழ் மக்களை அடக்கியொடுக்கக்காமல் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இது நடக்குமா?

—எஸ்.எம்.ஜி.

# கவிதைச் சமர்

## 'விரக்தியால் வடித்த மொழி'

*(லோ. துஷிகரனின் கவிதைக்கு பதில் கவிதை)*

சிங்காரக் கூந்தலதில்
சிக்குண்டு போனவனே
சந்திரப் பூவதனமென்றாய்
சரித்திரம் மா(ற்)றிய தென்றாம்.
ஐந்தாறு வருடம் செல்ல,
தரித்திரமே இங்கு வந்து
தாரமாய் நிற்குதென்பாய்
வாடிய மலரென முகம்
வாட்டி வதைக்குதென்பாய் — என்
இடைக்குப் பல மீற்றர்
உடைதேடத் தேவையென்பாய்.

நரைத்த முடி கண்டு நீ
நளினமாய் நகைத்திடுவாய்
தெளித்திடும் என்சிரிப்பில்
தகரச் சத்தம் கேட்குதென்பாய்
கரிமுஞ்சிக் கழுதையிலே
மீன் வாடை வருகுதென்பாய் — என்
மதுரப் பெயர் மறந்திடுவாய்
மிருகப் பெயர்களெல்லாம் அழகாய்
செல்லப் பெயர் ஆக்கிடுவாய்
ஏந்திழையாள் ஏனை விட்டு
ஏன் தொலையாள் என நினைப்பாய்
விடை கேட்ட மானுடா
தப்புக் கணக்கும் போட்டு விட்டாய்
வெறும் மோகமல்ல காதல்
வந்த பின்பு அதற்கு இல்லை சாதல்
வயதுப் பசி மயக்கத்திலே
கண்ணயர்ந்து நடக்கிறாய் நீ
கவனம் செல்லும் பாதையிலே — பல
கண்ணிவெடிகள் உனக்காய்
கண்விழித்துக் காத்திருக்கின்றன.

சதாசிவம் லாவண்யா,
யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

## உன்னவள் வீட்டிலே என்னவள் ஏட்டிலே

நீ அழகாய் கொடுத்த
கவிதைச் சமர்க்கண்டு
நானும் தொடுக்கின்றேன்
துயரானச் சமரொன்று

சிப்பி செதுக்காத
அழகுச் சிலையென்று
பல்லவன் இருந்தாலே
வியர்ப்பானே
அவளைக் கண்டு

கோல மயிக் கொண்டு
எழுதாத கவி ஒன்று
அன்றவள் படித்தாளே
அழகான விழிக்கொண்டு
அந்த மொழிக் கண்டு
கசந்தது தமிழன்று
தங்கக் கிளி வந்து
நெஞ்சினில் குடிக்கொண்டு
நித்தமும் வாட்டி [illegible]
கனவினில் எனை [illegible]ந்து
இன்றவள் எங்கென்றுத் — தெரியுமா...?
உன் கவிதைக்குள் வந்தவள் வீட்டிலே
என் கவிதையின் பொருளந்த...?
துலைந்தவர் ஏட்டிலே..''
காணாமல் போனோரின் பட்டியலில்
தொடர்ந்திடு — நீ பாட்டிலே''

ரா. சேகர், கம்பளை.

## விழியசைவில் மலர்ந்த கவிதை

சந்திரப்பூ வதனத்தாள் — உன்
சரித்திரம் மாற்றியதாய்
ஊழையிடும் கவிமகனே
உனக்கேன் வீண்வேலை

மங்கையவள் இடையசைவை
மாந்தியாய் நீயும் எண்ணி — உன்
கண்கள் குதித்தது
கானல் நீர்தான் பார்வை பொய்தான்

பிரம்மனின் படைப்புன்னை
பித்தனாய் மாற்றவில்லை
பின்னிய அவள் நடையில்
பிரண்டது உன் மனமில்லை
கரு நாகம் நெளிவதாய்
கருங்கூந்தல் தெரிகிறதோ?
எல்லாமும் உன் நெஞ்சில்
எரிகின்ற சபலமடா
ஆசையென்னும் அக்கினிக்குள்
ஆழ்கின்ற அவஸ்தையடா
வர்ணிப்பு பூச்சுகளால்
வதனத்தை வர்ணித்து
பூவுலகை ஆண்டு வர
புகழாரம் சூடிடுவாய்
உன் தூக்கம் கலைந்ததற்கு
அவள் மீது பழிசொல்வாய்
இன்னொருத்தி வந்தவுடன்
இதுவெல்லாம் மறந்திடுவாய்

அங்கமலர் தண்டிகையில்
அணங்கவள் வலம் வருவாள்
உன்நிழலைத் தொடர்ந்து
என்னாவி அலைகிறதே
என்றெல்லாம் புகழுரைப்பாய்
அவள் கன்னியில்லையென்ற
உண்மையது தெரிந்து விட்டால்
சனியனென்ற வார்த்தைகளால்
சமர் நீயும் செய்திடுவாய்!

உன் ஆசை முடிந்ததுமே
உவமை எல்லாம்
உதிர்ந்து விடும்
நீவடித்த கவிதைக்கு
அவள் கண்ணீர் கோலமிடும்
முள் மலை மீது
பாறங்கல் சுமந்த பூவைப்போல்
துன்பத்தில் அவள் வாழ்வு
துவண்டுப் போய் அல்லலுறும்

உன் வருடலுக்காய் வரமாட்டாள்
வளர்த்து விட்ட கற்பனையை
உயிராக்கித் தரமாட்டாள்
ஏற்கனவே இன்னொருவன்
வருடலுக்குள் வீழ்ந்ததனால்
புண்ணான வாழ்வினிலே
பூவையவள் புரளுகிறாள்.

எம். ஸாலிஹ் அஸீம்,
புத்தளம்.

## 'சமாதானம்'

வெள்ளைமுகிலுக்குள்
ஒழிந்துபோன வெண்புறாவாக
தண்ணீர்தடாகத்தினுள்
மூழ்கிப்போன தாமரையாக
அரசியல் கூட்டங்களின்
அத்திவாரமான வாசகமாக
நமக்குள்ளேயே தொலைந்து
தொலைவாகிப்போனது சமாதானம்!
சமாதானத்திற்கு
இலட்சினை கொடுக்கும்
இன்முகங்கள்
தன்மானத்தினை
தானம்செய்கையில்
சமாதானம் சமாதானமாக
நமை தேடி வரும்

ந. சங்கீதா, நாவலப்பிட்டி.

## நம்பிக்கை

சுதந்திரத்தின்
சுகமான காற்றை
சுவாசிப்பதற்காக — தம்
சுவாசத்தை
அர்ப்பணித்தவரிங்கே அநேகர்!

சுதந்திரவானில்
சிறகு விரிக்க
வேண்டுமென்பதற்காக
சிலுவைகளைச்
சுமந்தவரிங்கே அநேகர்!

நிம்மதிக்காகவே
ஏங்கி நின்று
நித்திரையடைந்தவர்களும்
இங்கு அநேகர்

எனவே
தியாகங்களுக்கும்
அர்ப்பணிப்புகளுக்கும்
நிச்சயம்
பலனுண்டு — என்ற
நம்பிக்''கை''யும்
நமக்குண்டு

ஜே. எம்.ரி. றொட்றிக்கோ
யாழ். பல்கலைக்கழகம்.

## வாருங்கள்

பாருங்கள் பாருங்கள்
குடியிருந்த பூமி யிங்கே
செங்குருதி தோய்ந்து
செல்லடியால் சிதறுபட்ட
எங்கள்
சந்ததியைப் பாருங்கள்!

கேளுங்கள் கேளுங்கள்
மூழு மிந்த யுத்தத்தால்
வாழுமெங்கள்
மனை போச்சு
நாங்கள்
வைத்திருந்த பொருள்
போச்சு
ஊருவிட்டு அகதியாகி
ஒளியிழந்து
வாழுமெங்கள் கதையை
கேளுங்கள் கேளுங்கள்!

ஏ.தர்சினி, சேனையூர் — 6.

## அழகானது...!

மொட்டுக்களை விட...
மலர்கள் அழகானது...!
மலரை விட — உன்
மௌனம்
அழகானது...!

தண்டை விட...
தாமரை அழகானது...!
தாமரையை விட —
உன்
தவிப்பு அழகானது...!

வானத்தை விட...
நிலவு அழகானது...!
நிலவை விட — உன்
நாணம் அழகானது...!

கனவை விட...
கவிதை அழகானது...!
கவிதையை விட நம்
காதல் அழகானது...!
நன்றி

எஸ். தமிழாம்பிகை
ஜெகன்,
நானாட்டான்.

## அநீதிக்கு அரியாசனம்

மரண நிழலின் வியாபிப்பு,
உயிர்கள் உருக உருக
முகாரியின் பேரோசை
நிசப்தத்தை கிழித்து
எங்குமே பரவுகிறது.
பெருகும் துயர் துடைக்க
கரங்களற்றுப் போய்
முடமானது எம்மினம்,
வசந்தமிழந்த வாழ்வில்
அழிவின் ஆக்கிரமிப்பே
கோலோச்சுகிறது.
அமைதிக்காக
அமைதியற்று துடிக்கும்
எங்கள் நெஞ்சோசைகளை
புரிந்து கொள்ள
திராணியில்லா
மனித மற்ற மனங்களே —
எங்கள்
தலை விதியை
தீர்மானிக்கும்
தலைமைக் கர்த்தாக்கள்.
நீதி குருடாக்கப்பட்டதால்
அநீதிக்கே இங்கு
அரியாசனம்

செபஸ்ரி — செல்வராஜ்,
இலாவத்துறை.

# ஜனாதிபதி தலையிட்டும் புலிகளின் ஆயுதக்கப்பல் தப்பியது எப்படி?

**முல்லைத்தீவு முகாமைத் தாக்கி அழிப்பதற்கு புலிகளுக்கு ஆயுதங்கள் தேவைப்பட்டன. 1996 பெப்ரவரியில் புலிகளின் ஆயுதங்களுடன் வந்த முதலாவது கப்பல் இலங்கை கடற்படை, விமானப்படை ஆகியவற்றால் தாக்கி அழிக்கப்பட்டது. இதனை அடுத்து புலிகள் மற்றும் ஒரு கப்பலில் ஆயுதங்களைக் கொண்டு வர முயற்சித்தனர். இந்தக் கப்பலும் விமானப்படையின் கண்ணில் பட்டுவிட்டது. அவசர உதவிகோரி கிழக்கு கடற்படைத் தளபதி ஊடாக கடற்படைத் தலைமையகத்துக்கு தகவல் பறந்தது.**

அவ்வேளை, கடற்படையின் உயர திகாரிகள் அனைவரும் கடற்படை தலைமையக ஒன்றுகூடல் அறையில் கூடியிருந்தனர்.

அவர்கள் முன்னிலையில் தான் கிழக்குக் கடற்படைத் தளபதியின் அவசரத் தொலைபேசி அழைப்பை ஏற்று அவருடன் கடற்படை உயர்மட்ட அதிகாரி தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்தார்.

முன்னர் புலிகளின் ''கொமெக்ஸ் ஜொக்ஸ்—3'' கப்பலைத் தாக்கி அழித்ததில் கடற்படைக்குக் கிடைக்க வேண்டிய நற்பெயரை விமானப் படை தட்டிச் சென்றதாலும்—

அன்று இடம் பெற்ற வேறுவிடயங்க ளாலும் எரிச்சலடைந்திருந்த அந்த உயர் மட்ட அதிகாரி கிழக்குக்கடற்படைத் தளபதியின் அவசர கோரிக்கையை அடியோடு நிராகரித்துவிட்டார்.

''விமானப்படை அந்தக் கப்பலைக் கண்டு பிடித்ததால் அதுபற்றி விமானப்படையே கவனம் எடுக்கட்டும்.''

''கடற்படை அது குறித்து அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. இப்போது யாழ்ப்பாணத்துக்குச் சென்று கொண்டிருக்கும் படகுகள் — கப்பல்கள் அணிக்கு கடற்படையின் பெரும் பகுதித் தாக்குதல் படகுகள் பாதுகாப்பாகச் சென்று கொண்டிருப்பதால் அப்பணி முக்கியமானது என்பதால் அத்தாக்குதல் படகுகளை வேறு வேலைக்குத் திசை திருப்ப முடியாது.'' — என்று அந்த உயர்மட்ட அதிகாரி திட்டவட்டமாகக் கூறினார்.

### மன்றாட்டம்

ஆனால் கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதி விடவில்லை. எதிரியின் ஆயுதக் கப்பலை அழிப்பதே முக்கியமான வேலை என்பதால் அதற்கு உடனடியாக அனுமதி தரும்படி தனது மேலதிகாரியிடம் மன்றாடினார்.

''கப்பலில் இருக்கக் கூடிய ஆயுதங்கள் பயங்கரமானவை. அவை பின்னர் எமக்கு மோசமான விளைவுகளைத் தரக்கூடும்'' — என்று அவர் வாதிட்டார்.

ஆனால் அவரது கோரிக்கை ஏற்கப்படவில்லை. கடற்படை உயரதிகாரி, கிழக்குக் கடற்படை உயரதிகாரி, கிழக்குக் கடற்படைத் தளபதியின் ''அலட்டலுக்கு'' தொடர்ந்து செவி கொடுக்க விரும்பாது தொலைபேசியை வைத்து விட்டார்.

எனினும் கிழக்குக் கடற்படைத் தளபதி விடவில்லை. தனக்குக் கீழ் உள்ள தாக்குதல் படகுகளை சம்பந்தப்பட்ட இடத்துக்கு விரைந்து அனுப்ப அனுமதி கோரி பல இடங்களுடன் தொடர்பு கொண்டார். ஆனாலும் அவர் முயற்சி பலிக்கவில்லை.

சரியாக இரவு 7.30 மணி.

அதுவரை கப்பலைத் தாக்கி அழிக்கும் முயற்சியில் ஈடுபட்ட ''புக்காரா'' இருட்டுப்பட்டதால் தனது முயற்சி வெற்றியளிக்காத நிலையில் மீண்டது.

### ஜனாதிபதிக்கு தகவல்

அப்போதுதான் கிழக்குப் பிராந்தியக் கடற்படைத் தளபதியின் நிலைமை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் எம்.பி. ஒருவரின் காதுகளுக்கு எட்டியது. அவர் உடனடியாக அலரிமாளிகையில் இருந்த ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கினார்.

ஜனாதிபதி உடனே பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையைத் தேடினார். ஆனால் ரத்வத்தை அச்சமயம் கொழும்புக்கு வெளியே சென்றிருந்ததால் ஜனாதிபதி தானே நேரடியாக விடயத்தில் தலையிட்டார். திருமலையில் இருந்த முழுக் கடற்படைத் தாக்குதல் அணியையும் சம்பவம் நடந்த இடத்துக்கு விரையும்படி ஜனாதிபதி உத்தரவிட்டார்.

7.30 மணிக்கு சற்றுப் பின்னர் அரை டசினுக்கும் அதிகமான தாக்குதல் படகுகள் திருகோணமலையிலிருந்து விரைந்தன; புலிகளின் ஆயுதக் கப்பலைத் தேடிப்பறந்தன.

### கப்பல் தப்பியது

ஆனால் காலம் பிந்திவிட்டது. இருள் சூழ்ந்து விட்டதால் அந்த இருளில் புலிகளின் ஆயுதக் கப்பலை கடற்படை கப்பல்களால் தேடிப் பிடிக்க முடியவில்லை.

பல நூறுதொன் ஆயுதங்களை முல்லைத்தீவு கடலில் இறக்கிக் கொடுத்து விட்டு புலிகளின் ஆயுதக் கப்பல் மாயமானது.

அதிலிருந்து இறக்கப்பட்ட துப்பாக்கிகள், மோட்டார்கள், பீரங்கிகள் போன்றவைதான் முல்லைத்தீவுத் தாக்குதலுக்கு நிச்சயமாகப் பயன்படுத்தப்பட்டன என்று அடித்துக் கூறியது. கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று.

கடற்படையினர் தமது தாக்குதல் படகுகளை நேரத்துடன் அனுப்பி யிருந்தார்களேயானால் புலிகளின் ஆயுதக் கப்பலும், அதிலிருந்து ஆயுதங்களைப் பெற்றுக் கொண்ட படகுகளும் நிச்சயம் தாக்கி அழிக்கப்பட்டிருக்கும் என்றும் மேலும் கூறியது அப்பத்திரிகை.

ஆனால் இதில் ஆச்சரியப்படத்தக்க விடயம் என்னவென்றால் தனது கடமையைச் சரிவரப் புரியத் தவறிய — சம்பந்தப்பட்ட — கடற்படை உயரதிகாரிக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை என்பது தான்.



### ஓயாத அலைகள் — வெளிவராத தகவல்கள் 3



### இரண்டு மாதங்கள் காத்திருந்தது ஏன்?

மே மாத முற்பகுதியில் தேவையான ஆயுதங்களை முல்லைத்தீவு கடற்பிரதேசம் ஊடாக பாதுகாப்பான தமது தளங்களுக்குக் கொண்டு வந்து சேர்த்த பின்னரும் கூட — உடனடியாகத் தமது தாக்குதலை புலிகள் ஆரம்பிக்கவில்லை.

இரண்டு மாதங்கள் காத்திருந்து ஜூலை யில்தான் நடத்தினார்கள். இத்தாக்குதலை புலிகள் ஜூலையில் நடத்தியதற்கு பல காரணங்கள், பின்னணிகள் உள்ளன.

புலிகளைப் பொறுத்தவரை ஜூலையில் இரண்டு தினங்கள் அவர்களுக்கு முக்கியமானவை.

இரண்டும் 'கறுப்பு' என்ற பெயருடன் சம்பந்தப்பட்டவை.

விடுதலைப் புலிகளின் முதலாவது கரும்புலி கப்டன் மில்லரின் தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்றது இந்த ஜூலை மாதத்தில் தான்.

1987இல் 'ஒப்பரேசன் லிபரேசன்' படை நடவடிக்கையை ஆரம்பித்து முன்னேறிய அரச படைகளைக் கதிகலங்க வைத்த முதலாவது கரும்புலித் தாக்குதலை நடத்தியவர் தான் கப்டன் மில்லர் அவரின் நினைவாக அவர் சாவைத்தழுவிய ஜூலை 5 ஆம் திகதியை 'கரும்புலி தினமாக' விடுதலைப் புலிகள் அனுஷ்டித்து வருகின்றனர்.

அது தவிர, தமிழர் விடுதலைப் போராட்டத்தில் ஒரு திருப்பு முனையாக அமைந்த கறுப்பு ஜூலை வன்முறைகள், தீவின் தென்பகுதியில் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழத்து விடப்பட்டதும் இந்த ஜூலை மாதத்தில் தான்.

1983 ஜூலையில் திருநெல்வேலியில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் 13 இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டதை அடுத்து ஜூலை 23 ஆம் திகதி முதல் நாடு முழுவதிலும் தமிழர்களுக்கு எதிரான இனவன்முறை பற்றிப்பரவியதையும் —

அதனால் தமிழர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்துக்கு சர்வதேசரீதியில் ஆதரவு பெருக அந்த வன்முறைகள் உதவியதையும்— அனைவரும் அறிவர்.

உரிமை கேட்ட தமிழர்களுக்கு வன்முறை மூலம் அளிக்கப்பட்ட பதிலே 1983 கலவரம்.

ஜூலை மாதங்களில் பல தாக்குதல் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. அவ ற்றில் சில வருமாறு.

1993 ஜூலையில் வெலி ஓயா (மணலாறு) பாதுகாப்பு அரண் தொடரில் ஜானகபுர முகாம் தாக்கப்பட்டது.

1995 ஜூலை 9 இல் வலிகாமத்தில் அரசுப்படைகள் 'முன்னேறிப் பாய்தல்' நடவடிக்கையை ஆரம்பித்ததும் பதிலடியாக ஜூலை 14 ஆம் திகதி 'புலிப்பாய்ச்சல்' தாக்குதல் நடத்தப்பட்டது.

அடுத்த சில தினங்களில் காங்கேசன்துறை முகாமுக்குச் சற்று வெளியே வைத்து கடற்படைத் கட்டளைக் கப்பலான 'எடித்தாரா' மீது கரும்புலித் தாக்குதல் நடத்தப்பட்டது.

1995 ஜூலை 28 ஆம் திகதி மணலா றில் அரசபடைகள் மீது புலிகள் நடத்திய பெரும் தாக்குதல் நடவடிக்கை புலிக ளுக்குத் தோல்வியில் முடிவடைந்தது.

1996 இல் கரும்புலித் தினத்துக்கு முதல் நாள், படையினரின் முழுக்கட்டுப் பாட்டில் இருந்த யாழ. நகரில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை இலக்குவைத்து தாக்குதல் நடத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து முல்லைத் தீவுப் பெரும் தாக்குதல் இடம்பெற்றது.

ஆறுநாட்கள் கழித்துக் கொழும்பில் தெகிவளையில் ஓடும் ரயிலில் வெடித்த குண்டினால் எழுபது பேர் வரை உயிரி ழந்தனர்; பல நூற்றுக்கணக்கானோர் காயமுற்றனர்; அங்கவீனமடைந்தனர்.

இந்த ஜூலை மாதப் பின்னணியில் தான் முல்லை முகாம் மீதான வெற்றிகரத் தாக்குதலை புலிகள் ஒப்பேற்றியிருந்தார்கள்.

யாழ் குடாநாட்டின் கட்டுப்பாட்டை இழந்தமை புலிகளைப் பொறுத்த வரை பெரிய இராணுவத் தோல்வி. அதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் மணலாறில் புலிக ளின் தாக்குதல்கள் அணிக்குக் கிடைத்த படு தோல்வியுடன் புலிகளின் சரிவு காலம் ஆரம்பமாகிவிட்டது என்று பலரும் கணிப்புக் கூறத் தவறவில்லை. ஆனால் அவர்களது கணிப்புத் தவறாக இருக்க லாம் என்ற பாடத்தை அவர்களுக்கு உணர்த்தியது முல்லைத்தீவு முகாம் வீழ்ச்சி.

### விடுதலைப் புலிகளின் மனச்சோர்வு

முல்லைத்தீவுத் தாக்குதலுக்கு முன்னர் கிடைத்த அடுத்தடுத்த தோல்விகளால் — அல்லது அரச படைகளின் முன்னேற்ற நகர்வுகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பின்வாங்கியதால் — ஏற்பட்ட தலை குனிவால் — புலிகளின் அணிகள் மத்தியில் மனச்சோர்வு ஏற்பட்டிருந்தது.

ஆனால் அது போராட்டத்தைக் கைவிட்டு ஓடும் சோர்வல்ல. ''வெல்ல முடியா விட்டாலும் அடிபட்டுச் சாவோம்'' என்ற மன ஓர்மம் தான் புலிகளின் மத்தியில் ஓங்கி நின்றது. வெற்றி மீது நம்பிக்கை இருக்கவில்லையே தவிர, யுத்தத்தில் உக்கிரமாக ஈடுபடவேண்டும் என்ற ஆவேசம் — உக்கிரம் — புலிகள் மத்தியில் உயர்ந்து நின்றது.

இந்த மன எழுச்சியையே புலிகளின் தலைமைப் பீடம் தனக்குச் சாதகமாகத் திறம்படப் பயன்படுத்தி, முல்லையில் அரச படைகளை மண்டியிட வைத்துவிட்டது.

### உளவுத் தகவல்கள்

யாழ்ப்பாணத்தை அரசபடைகள் கைப்பற்றியதை அடுத்து அவற்றின் நகர்வு வன்னிப் பெருநிலப்பரப்பை நோக்கிய தாகத்தான் இருக்கும் என்பது விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்குத் தெட்டத் தெளிவாகப் புரிந்திருந்தது.

யாழ். குடாநாட்டில் தமது ஆள் பலத்தை அதிகரித்து விட்டு அங்குள்ள முக்கிய தாக்குதல் பிரிவுகளை வன்னிக்கு நகர்த்த படைத்தரப்புத் திட்டமிடுவது பற்றிய உளவுத் தகவல்களும் அவருக்குக் கிடைத்துக் கொண்டிருந்தன.

அதைத் தடுப்பதற்கு என்ன செய்ய லாம் என்பதில் புலிகளின் தலைவர் தீவிரமாக இருந்தார்.

(வளரும்)

## சுடர் ஒளி சிறுகதை

# எங்கள் தேசத்தின் சங்கதி

நீ.பி. அருளானந்தம்

"சுதாகரன் கண்டபடி வெளியால போய்த் திரியாதை ராசா. இங்க இருக்குமட்டும் கவனமா நீ வீட்டிலேயே இரப்பு அதுதான் நல்லம்"

எழுபத்தெட்டு வயதின் உடல் சுருக்கங்களைக் கொண்ட அவனது அம்மம்மா இப்படியாக சொன்னார். அவவுடைய சொல்லில் அர்த்தம் இருந்தது. அம்மாவும் முன்பு இப்படியாக சொல்லி விட்டிருந்தாலும் பாட்டியின் அறிவுரைதான் இப்போது அவனது காலை இழுத்து நிறுத்தி அவன் வெளியே எங்கும் போக விடாது தடுத்தன.

எனது ஊர் ... எனது நீர்... எனது காற்று... என்று சுதந்திரமாக யாழ்ப்பாணத்தில் எங்கும் சஞ்சரித்துப் போக வந்த அவனுக்கு இதுபோல எவ்வளவு தடைகள். உறவினர்கள் நண்பர்கள் என்று எத்தனை முகங்களை அவன் போய்ப் பார்க்க எண்ணி இருந்தான்.

அதுவும் இங்கே முடியாதுபோல் இருக்கிறது... ஒழுங்காக தங்கள் வீடுகளிலும் இப்போது அவர்களும் இல்லையாம்... இடம்பெயர்வுகள் அவர்களை சிதறிப் போக வைத்திருக்கிறது... அவனது தாய்மாமன் கூட இதை அனுபவிப்பவர்தான். அவரும் இதிலிருந்து தப்பிவிடவில்லை.

கனடாவிலே இருந்து கொண்டு இங்காலேயுள்ள தேசத்து சங்கதிகளையெல்லாம் அறிந்து விட்டிருந்தும் இங்கே வந்துநேரே அவற்றை இவர்கள் வாயிலாக கேட்கத்தான் அவனுக்கு இப்போது திடும்—என்று பயமாய் இருக்கிறது.

"தம்பி உனக்குத் தெரியுமோ இல்லையோ கேளன்"... என்று அம்மா ஒரு செய்தியைச் சொன்னார்... இருபாலைப்பகுதியில் அந்தக் கொடூரம் நிகழ்ந்ததாம்... ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அந்த ஆறுபேரும் ஆட்டோவில் ஏறி ஒழுங்கை வழியாக பயணம் போகும் போது நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த அமுக்க வெடி வெடித்ததில் எல்லாருமே இறந்துவிட்டார்களாம்... பத்திரிகையில் போட்டிருந்த புகைப்படத்தையும் அம்மா காட்டிவிட அதை பார்க்கும்போது அவனது மனதில் கவலை அடையாய் அப்பிக் கொண்டது. "குருத்து மாதிரி பச்சைக் குழந்தையுமடா தம்பி"... படத்தில் குழந்தையை மட்டும் சுட்டிக் காட்டி கண்கலங்கி நிற்க அம்மா சொன்னா"

இருந்த சந்தோஷமும் அவனுக்குப் போய் விட்டது. என்ன வாழ்க்கை இது?... எல்லா நாடுகளிலும்தான் குண்டுகள் வெடிக்கின்றன. கட்டடங்கள் சாய்கின்றன... மனிதர்கள் சாகிறார்கள் என்றாலும் இங்கு போலவா அங்கே இவையெல்லாம் ஊறிப் போனதாக தொடர்கின்றன. இந்த யுத்தம் எப்போது தான் இந்த நாட்டைவிட்டு தொலையப்போகிறதோ...

"அம்மா வந்ததுக்கு மாமாவை முதலில் அவரிண்ட வீட்ட போய் பார்த்திட்டு வாறனம்மா" அங்கிருந்து நடையைக் கட்ட ஆயத்தமானான்.

"ஏன் அவசரப்படுகிறாய் தம்பி மாமாவை நான் போய் கூட்டிக் கொண்டு வாறன்" அப்பா வெளிக்கிட்டார்.

"நான் போய் நேரில அவரை வீட்ட போய் பார்க்கிறனப்பா"

"இரு சுதாகரா அங்க எல்லாம் போக உனக்கு கஷ்டமாயிருக்கும் கனதூரம் ஒழுங்கேக்கிளால நல்லாய் உள்ளுக்க போக வேணும்... அப்பா சொல்லுறதைக் கேள்" அம்மா சொன்னார்.

ஒழுங்கை என்றதும் அவனுக்கும் யோசனை. மிதி வெடி அமுக்க வெடி இப்படியெல்லாம் இன்னமும் இருக்கிறதாமே... சட்டையைக் கழற்றிப் போட்டு விட்டு இருந்து விட்டான். இங்கே தமிழர்கள் மத்தியிலே ஒவ்வொரு குடும்பத்திலும் யுத்தத்தால் ஏற்பட்ட தாக்கம் இருக்கிறது. விதவைகள் இருக்கிறார்கள் அங்கவீனர்கள் இருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக அநியாயமாக எத்தனை மனித உயிர் இழப்புகள். அவைகளை நினைத்தவாறு அவனிருக்க மாமாவை கூட்டி வர அப்பா வெளியே போய்விட்டார்.

"அம்மா... மாமா எப்படி சுகமாக இருக்கிறாரே?"...

"அவன் தம்பி உன்னாலதான் ஏதோ அனுப்புற காசை வைச்சு கஞ்சி குடிக்கிறான்... பிள்ளைகளும் படிக்குதுகள். கால் ஏலாத்தால பொறுப்பான வேலை ஒண்டையும் அவனுக்கு செய்ய ஏலாமல் கிடக்குது. தோட்டம் கொத்துறத்துக்கெல்லாம் இப்ப கூலி வைச்சுத்தான் கொத்துறான். பாவம் என்ர தம்பி"

மாமா மிதி வெடியில் காலை இழந்ததிற்குப் பிறகு அந்தக் குடும்பத்தையும் இவன்தான் கொண்டிழுக்க வேண்டியதாகி விட்டது. நல்ல உழைப்பாளி அவர் இன்று முடங்கி விட்டார் பழைய தெம்பு அவரிடமில்லை.

"அண்ணா இங்கயெல்லாம் கனபேர் காணாமலும் போயிட்டினம் மனிதப்புதைகுழிகளின் கதை உனக்குத் தெரியுமோ இல்லையோ..." தங்கை சுமதி நூற்றுக் கிழவி போல பல நியூசும் சொன்னாள் கொஞ்சம் கொஞ்சமாக இப்படியான கதைகளைக் கேட்டுக் கொண்டிருக்க மனப் பாதிப்பு அவனுக்கு அதிகரித்தது. இங்கே வந்து பொறிக்குள் ஒரு எலியைப் போல மாட்டிக் கொண்டு விட்டேனா என்று கூட சிந்தித்தான்.

கொஞ்ச நேரத்திற்குள் அப்பாவோடு மாமாவும் வீட்டுக்கு வந்தார். முன்பு எல்லாம் மாமா சாரத்தை சண்டிக் கட்டு கட்டியிருப்பார் இப்போது கீழே தொள தொளக்க அவிட்டுவிட்டு கால்களின் கீழே வரமட்டும் மூடியதாக உடுத்தி யிருந்தார். பொய்க் கால் பொருத்தி இடுப்பில்



குதிரைப் பொம்மையுடன் ஆடும் நடனம் ஏனோ அவரைக் கண்டதும் இவனுக்கு ஞாபகம் வந் தது இந்த நினைவு ஒரு கணம் அவனது மனதைப் பிழிந்து எடுத்தது.

மாமா அவனுக்குக் கிட்டவாக வந்ததும் "மருமோனே... மருமோனே" என்று சொல்லி அவனது கண்களில் கண்ணீர் வருமட்டும் கட்டிப் பிடித்து இருகன்னங்களிலும் முத்தமிட்டார்.

"மருமோன் சுகமாயிருக்கிறயேடா"

"எனக்கென்ன மாமா... அங்கயெல்லாம் நாங்கள் நல்லாத்தான் இருக்கிறம். ஆனா... இங்க நீங்க இப்படி... சீ.. படுகிறதை யோசிக்கயிலதான் எங்களைப் போல இருக்கிறவயளுக்கு கவலையாக்கிடக்கு"

"இந்தாடா சுதாகரா உனக்குப் பிடிச்ச பாணிப் பினாட்டு கொண்டந்தனானடா. கணக்காய் இனிப்புப் புளிப்புறைப்பிருக்கு சாப்பிட்டுப் பாரடா"

மாமா பார்த்திருக்க ஒரு துண்டு எடுத்து சுதாகரன் வாயில் போட்டான். கண்ணை மூடிசுவைக்கும் அளவுக்கு பனாட்டு நல்ல ருசியாக இருந்தது.

"எனக்கும் தா அண்ணா"

தங்கச்சிக்கும் கொடுத்தான்.

சுற்றம் சூழ்ந்து இருக்க சொந்த மண்ணில் இருக்கும் போது என்ன இனிமையானதொரு வாழ்க்கை தானும் மாமாவும் விடிய விடிய தூங்காது கண்கள் எரிய கண்டு கழித்த கூத்துக்களையெல்லாம் அவன் கணக்குப் போட்டு எண்ணினான்.

"சுதாகரா கொழும்பில் எத்தினை நாட்கள் தங்கியிருந்தாய் அங்க சித்தப்பா எல்லாரும் வீட்டில எப்பிடி சுகமாயிருக்கினமே"

"ஓம் மாமா... அவயள் நல்லாயிருக்கினம் ஆனாலும் கொழும்பு வாழ்க்கையிலும் இப்போ குறையிருக்கு. கறண்ட் இல்லாம எங்கட இந்த இடத்தில இருக்கலாம். இருட் டிலும் இங்க இருக்கலாம். ஆனா என்னமோ இட்டு முட்டாகத் தான் இருக்கு. கொழும்பு நகரம் எண்ட பேர் தான் இருட்டில இப்ப அது மூழ்கிக்கிடக்கு. அங்கயும் சுருக் கெண்டு தேள் கொட் டுற மாதிரி நுளம்பு கடிக்கிது. மனிதனுக்குரிய அத்தியாவசிய தேவைகள் இந்த நாட்டில எங்கே யும் நிறைவேற்றப் படேல்ல.. ஆனா... தேவையில்லாததுக் கெல்லாம் இங்க காசைக் கொட்டி சிலவழிக்கிறாங்கள்" அவன் எரிந்தான்.

"அதை விடு சுதாகரா.. ஏதோ அவங்களும் நாங்கள் பட்டதுகளை கொஞ்சம் அனுபவிச்சுப் பார்க்கட்டும் அப்பதான் அதிலயுள்ள கஷ்டம் நஷ்டம் விளங்கும். இப்ப நான் சொல்லுறதைக் கேளன். இன்னும் இங்க ஒன்றுமே திரிந்தேல்ல வெளியமட்டும் நீ போய்த் திரியாத.. நாளைக்கு நான் உசிர் மீன் வாங்கிக் கொண்டு வாறன். நல்ல கூழ் காய்ச்சிக் குடிப்பம்.. மாமி பிள்ளைகளும் நாளைக்கு இங்க வருவினம்... இங்க சாப்பிட உனக்கு என்னென்ன ஆசையோ என்னட்டச் சொல்லு. எப்பிடியாவது எல்லாமே கொண்டந்து தாறன்"

இப்படியாக மாமா பாசமும் அக்கறையுமாகக் கதைத்தார். அதனால் அன்று முழுக்க நேரம் போனதே அவனுக்குத் தெரியவில்லை. இரவு பத்துமணியாகியும் மாமா சொல்லிக் கொண்டிருக்கும் கதை கேட்டு முடியவில்லை. அம்மாதான் கடைசியாக வந்து அதற்குக் குறுக்குக் கட்டை போட்டார்.

"வீட்டில எல்லாரும் தனிச்சுப்போய் இருப்பினம் கெதியாய் போடா தம்பி" அம்மா தனது சகோதரனுக்கு இதை சொல்ல வேண்டியதாக இருந்தது.

"போறன் அக்கா... காலையில வாறன் சுதாகர்" அவனைப் பார்த்து மாமா கூறினார்.

வழியனுப்பி விட்டு முற்றத்திலே குறுக்கும் நெடுக்குமாக சுதாகரன் உலாத்தினான். இருந்தாற்போல் நல்ல காற்று அடித்து வீட்டின் முன்னே இருந்த பனையும் வேம்பும் ஆவேச ஆட்டமாய் ஆடின. பனை ஓலைகள் விஸ்... விஸ்... என்று ஓசை எழுப்பின. அந்தநேரம் ஒரு மூச்சு நன்றாகவே காற்றை அவன் உள்ளுக்குள் இழுத்து வெளியேவிட்டான். மனம் அப்போது கொஞ்சம் பாரம் குறைந்து விட்டதாய் இருந்தது.

அவனைப் பாதுகாப்பதிலேயே அவனது குடும்பத்திலுள்ளவர்கள் எல்லோரும் அக்கறை காட்டுவதன் அர்த்தம் இப்போது அவனுக்கு விளங்கியது.

எல்லோரும் இன்று அவனை நம்பித்தான் வாழ்க்கையை நடத்துகிறார்கள். அவன் வெளியே இருந்து பணம் அனுப்பாவிட்டால் இங்கே அடுப்பு எரியாது... படிப்பு நடவாது இவர்கள் எல்லாம் வாழ அவன் தன்னை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

அது நியாயமானதொன்று. அவனும் அதை உணர்ந்து நடக்க வேணும் கவனமாக இருக்க வேண்டும் இதை அவனது அறிவு அறிவுறுத்தியது உடனே முடிவு எடுத்தான்.

"சீக்கிரமாக நான் வெளியால போய் விட.வேண்டும் இப்போதைக்கு இதுவே விவேகமான செயல்."

(யாவும் கற்பனை)

# ராசி பலன்

**04.11.2001 முதல் 10.11.2001 வரை**

**பொ.சந்திரன்.**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

புதன், சுக்கிரன், சூரியன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். செவ்வாய், ராகு, கேது ஆகிய கிரகங்கள் ஓரளவு நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மனப் போராட்டம் இருக்கும். எடுத்த கருமம் இலகுவில் நிறைவேறலாம். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். பிரயாண வாய்ப்பு உண்டு. தொழில் துறை முன்னேறும்.

**இடபம்: கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

குரு, செவ்வாய், சந்திரன் ஆகியன நன்மை செய்யும். சுக்கிரன், கேது போன்றவையால் ஓரளவு நன்மையான பலனை எதிர்பார்க்கலாம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். நினைத்த கருமத்தை செயலாக்கலாம். வீடு, வாகனங்களால் லாபம் அடையலாம். திருமண வாய்ப்புண்டு. பிரயாண வாய்ப்புண்டு. உடல் ஆரோக்கியம் நன்று. தொழில் துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இல்லை.

**மிதுனம் : மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

புதன், சூரியன், சுக்கிரன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். சந்திரனால் ஓரளவு நன்மையான பலனை எதிர்பார்க்கலாம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மனப்போராட்டம் இருக்கும். எடுத்த கருமம் தாமதப்பட்டே நிறைவேறும். வீடு, வாகனம் லாபம் தரும். உடல் ஆரோக்கியம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. தொழில்துறையில் சில பின்னடைவுகள் வரலாம்.

**கடகம் : புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

புதன், சூரியன், சுக்கிரன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். ராகு, கேது, சனி போன்ற கிரகங்களால் ஓரளவு நன்மையான பலனை எதிர்பார்க்கலாம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். வீடு, வாகனம் லாபம் தரும். எடுத்த கருமத்துக்கு தடைவர வாய்ப்புள்ளது. பிரயாண வாய்ப்புள்ளது. உடல் ஆரோக்கியம் உண்டு. தொழில் முயற்சி முன்னேறும்.

**சிங்கம் : மகம், பூரம், உத்தரம் 1**

சுக்கிரன், குரு, சனி போன்ற கிரகங்களால் நன்மையுண்டு. செவ்வாய், ராகுவால் ஓர் அளவு நன்மையான பலனை எதிர்பார்க்கலாம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். எடுத்த கருமம் தடைப்பட்பட வாய்ப்புள்ளது. உடல் நலம் சிறப்பாக இருக்கும். பிரயாண வாய்ப்பு உண்டு. திருமண வாய்ப்பு உண்டு. தொழில் சிறப்படையும்.

**கன்னி : உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2**

புதன், சுக்கிரன், சனி போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். குரு, ராகு போன்றவை ஓரளவு நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த கருமம் இலகுவில் நிறைவேறும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமணவாய்ப்புண்டு. பிரயாண வாய்ப்புண்டு. தொழில்துறை முன்னேறும்.

**துலாம் : சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3**

புதன், சுக்கிரன், குரு போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். ராகு, கேதுக்களால் ஓரளவு நன்மையான பலனை எதிர்பார்க்கலாம். பணம் இருக்கும். கல்வியில் கவனம் குறையலாம். எடுத்த கருமம் இலகுவில் நிறைவேறும். மன அமைதி இருக்காது. வீடு, வாகனம் லாபம் தரும். திருமண வாய்ப்புண்டு. பிரயாண வாய்ப்புண்டு. உடல் நலம் உண்டு. தொழில்துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது.

**விருச்சிகம் : விசாகம் 4, அனுஷம், கேட்டை**

செவ்வாய், சந்திரன், ராகுவால் நன்மையான பலனை எதிர்பார்க்கலாம். சுக்கிரனால் ஓரளவு நன்மையான பலனை எதிர்பார்க்கலாம். பணம் தட்டுப்படலாம். கல்வியில் கவனம் குறையலாம். மன அமைதி இருக்காது. வீடு, வாகனம் லாபம் தரும். எடுத்த கருமம் இலகுவில் நிறைவேறும். பிரயாண வாய்ப்புண்டு. தேகசுகம் ஆரோக்கியமாக இருக்கும். தொழில்துறையில் சாண் ஏற முழம் சறுக்கும்.

**தனு : மூலம், பூராடம், உத்தராடம் 1.**

குரு, புதன், சுக்கிரன் போன்ற கிரகங்களால் நன்மையான பலன் உண்டு. சனி ஓரளவு நன்மையான பலனை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த கருமம் இலகுவில் நிறைவேறும். வீடு, வாகனம் இலாபம் தரும். திருமண வாய்ப்புண்டு. பிரயாண வாய்ப்புண்டு. உடல் ஆரோக்கியம் சில சமயம் பாதிக்க வாய்ப்புள்ளது. தொழில்துறை முன்னேறும்.

**மகரம் : உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2.**

புதன், சுக்கிரன், செவ்வாய் ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். ராகு, கேதுக்கள் ஓரளவு நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மனம் அமைதியாய் இருக்கும். எடுத்த கருமம் தாமதமாகி நிறைவேறும். வீடு, வாகனம் லாபம் தரும். உடல் சுகம் சிறிது பாதிக்கலாம். பிரயாண வாய்ப்பு பிரகாசமாக இருக்கின்றது. தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் இருக்கும்.

**கும்பம் : அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3**

குரு, புதன், சுக்கிரன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். செவ்வாய், கேதுவால் ஓரளவு நற்பலனை எதிர்பார்க்கலாம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மனப்போராட்டம் இருக்கும். எடுத்த கருமம் இலகுவில் நிறைவேறும். வீடு, வாகனம் லாபம் தரும். திருமண வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும். தொழில்துறை முன்னேறும்.

**மீனம் : பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி**

சூரியன், புதன், செவ்வாய் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். சனி, கேது போன்ற கிரகங்களால் ஓரளவு நன்மையான பலனை எதிர்பார்க்கலாம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த கருமம் தாமதமாக நிறைவேறும். பிரயாண வாய்ப்புண்டு. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். உடல் நிலை ஆரோக்கியமாக இருக்கும். தொழில்துறையில் போதிய முன்னேற்றம் இருக்காது.

# திருமணத்திற்குக் காதலர் சம்மதம் கழுத்தை நீட்டத் தயாராகிறார் பூமிகா



விளம்பரப் படங்களில் நடித்து திரைக்கு வந்தவர் பூமிகா. தெலுங்கில் நடித்துக் கொண்டிருந்த வரை 'பத்ரி' படத்திற்காகத் தமிழிற்கு அழைத்து வந்தனர்.

இப்போதுள்ள தமிழ்க் கதாநாயகிகளை விட வேறுபட்ட தனித்தன்மையான அழகு பூமிகாவிடம் இருந்தது. அதனால் பூமிகாவிற்கு வரவேற்பும் இருந்தது. ஆனால் 'பத்ரி' படம் வெளியான கால கட்டத்திலேயே பூமிகா 'குஷி' பட இயக்குநர் சூர்யாவைக் காதலிக்கிறார் என்ற செய்தி காட்டுத் தீயாகப் பரவ ஆரம்பித்தது.

பூமிகா வரவினால் கலங்கிப் போயிருந்த ஜோதிகா, சிம்ரன் போன்றவர்களுக்கு இந்தச் செய்தி அல்வா கொடுத்தது போலிருந்தது. அப்பாடா! வெறும் வாயை மெல்லுபவர்களுக்கு அவல் கிடைத்து விட்டது. திரையுலகில் எப்படியும் பூமிகா—சூர்யா காதல் விவகாரத்தைப் பெரிதாக்கி ஒரு வழி பண்ணி விடுவார்கள் என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள்.

அவர்கள் எதிர்பார்த்தது போலவே 'பத்ரி'யை அடுத்து பூமிகா ஒப்பந்தமான 'ரோஜாக் கூட்டம்' படத்தோடு சரி. வேறு புதிய தமிழ்ப் படங் களில் பூமிகா ஒப்பந்தமாக வில்லை.

பூமிகாவை புதிய படங்களில் ஒப்பந்தம் செய்வதற்கு தயாரிப்பாளர்களுக்கு ஆசையிருந்தாலும் பூமிகா திருமணம் செய்து கொண்டு செட்டிலாகிவிட்டால் தம் கதி என்னாவது என்று நினைத்து அந்த ஆசையை ஓரங் கட்டினர்.

ஆனால் பூமிகா எதையும் பற்றிக் கவலைப்படாமல் தன் காதலில் ஆழமாக இருந்தார். திருமணத்திற்குப் பூமிகா அவசரப்படுத்திய போதும் காதலர் சூர்யா அதற்கு சம்மதம் கொடுக்காமல் தள்ளிப் போட்டுக்கொண்டே வந்தார்.

'குஷி' தெலுங்குப் பதிப்பில் பிஸியாகியிருந்த சூர்யா அந்த வேலைகள் முடிந்தவுடன் திருமணம் செய்து கொள்வார் என்று பத்திரிகைகள் தகவல் தெரிவித்தன.

'ரோஜாக்கூட்டம்' பட ஷூட்டிங்கில் தமது காதலை வளர்த்துக் கொண்டுள்ள பூமிகா—சூர்யா ஜோடி பரபரப்பில் இருந்து தப்புவதற்காக ஒன்றும் தெரியாதவர்கள் போல் பாசாங்கு செய்து வருகிறார்கள்.

சமீபத்தில் நடந்த 'விஜய்' நாற்பெரும் விழாவிற்கு பூமிகாவும் வந்திருந்தார். 'பத்ரி' படத்தில் நடித்ததற்காக அவருக்கும் கேடயம் வழங்கப்பட்டது.

பூமிகாவோ சூர்யா யாரென்று கேட்டால் தெரியாது என்பது போன்று பதில் சொல்லி யிருக்கிறார். நீங்களும் திடீரென ரகசிய திருமணம் செய்து கொள்வீர்களா? என்று கேட்டால், உடனே கண்கலங்கி டென்ஷனாகி விடுவதுடன் "எனக்கு அவர் மேல் காதலும் கிடையாது கத்தரிக்காயும் கிடையாது என்று ஆங்கிலத்திலும் இந்தியிலும் மாறி மாறிச் சொல்லி வருகிறார்.

ஆனால் மொழி மாற்றிப் பேசினாலும் காதல் காதல் தான். சூர்யாவைக் காதலிக்கவில்லை என்றால் அதைத் தைரியமாக பத்திரிகையாளர்களிடம் மறுத்துச் சொல்ல வேண்டியது தானே!

இது இப்படியிருக்க, சூர்யாவோ பூமிகா விஷயத்தில் பிடிவாதமாக இருக்கிறார். அடைந்தால் பூமிகா இல்லையேல் திருமணமே வேண்டாம் என்று தன் உறவினர்களிடம் கண்டிப்பாகச் சொல்லி விட்டாராம்.

அத்துடன் பூமிகாவுடன் தன்னை இணைத்து வரும் பத்திரிகைச் செய்திகளை கத்தரித்து பாதுகாத்து வருகிறாராம். எது எப்படியிருந்தாலும் இவர்களது மறைமுகக் காதல் வாழ்க்கை விரைவில் அம்பலத்துக்கு வரப் போகிறது.

பூமிகாவின் நச்சரிப்பினால் சூர்யா திருமணத்திற்குச் சம்மதம் கொடுத்து விட்டார். பூமிகா நடித்து வரும் படங்கள் முடிவடைந்ததும் திருமணம் நடக்கலாம் என்று நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

—ஷாம்

## டெலிபோனில் வளரும் சிம்ரனின் காதல்



சமீபகாலங்களில் பத்திரிகைகளில் அதிகம் பரபரப்பாகப் பேசப்படுபவர் சிம்ரன். இதற்குக் காரணம் அவரின் காதல் விவகாரம் தான். ஆனால் தன்னைப்பற்றி தமிழ்ப்பத்திரிகைகளில் வெளியாகி வரும் அனைத்து தகவல்களும் பொய்யென்று கூறும் சிம்ரன், "இதுவரைக்கும் என்னிடம் பல மனேஜர்கள் வேலை பார்த்திருக்கிறார்கள். தனிப்பட்ட பல சிக்கல்களினால் எத்தனையோ உதவியாளர்களை மாற்றி விட்டேன். அப்படி வெளியேற்றப்பட்ட சில பேரில் யாரோ ஒருவர் தான் என்னைப்பற்றி பொய்யான தகவல்களைப் பரப்பி விட்டிருக்கிறார் என்று நினைக்கிறேன். எனக்கும் ராஜு சுந்தரத்துக்குமிடையேயான காதல் முறியவில்லை. ஒரு சில தனிப்பட்ட காரணங்களுக்காக நாங்கள் இருவரும் சந்திப்பதைக் குறைத்துக் கொண்டுள்ளோம். அதுமட்டுமல்ல, சினிமாவில் இரண்டு பேரும் பிஸியாக இருப்பதனால் நேரில் சந்தித்துப் பேசுவதற்கு நேரமில்லை. ஆனால் தினமும் டெலிபோனில் பேசிக் கொள்வோம். இப்போதைக்கு டெலிபோனில் தான் வளர்கிறது எம் காதல்" என்று சிரித்தபடியே கூறுகிறார்.

## அம்மாவானார் ரோஜா

அசோக்—சாந்தியின் கைக்குழந்தையை கவனிப்பதற்காக வேலைக்காரியாக நியமிக்கப்பட்டார் திவ்யா. வீட்டுத் தோட்டத்தில் அந்தக் கைக் குழந்தையுடன் இருந்த போது திடீரென்று குழந்தை அழ ஆரம்பித்தது.

உடனே திவ்யா யாராவது பார்க்கிறார்களா? என்று சுற்றும் முற்றும் பார்த்து விட்டு தாவணியை விலக்கி அக் குழந்தைக்குப் பாலூட்ட ஆரம்பித்தாள். இதைப் பார்த்த தோட்டக் காரன் அதிர்ச்சியடைந்து நின்றான். வேலைக்காரன் பார்த்ததைத் திவ்யாவும் கண்டாள். குழந்தையைத் தூக்கிக் கொண்டு தோட்டக்காரனிடம் சென்ற திவ்யா "இங்கே பார்த்ததை யாரிடமாவது சொல்ல நினைச்சே அப்புறம் நடக்கிறதே வேற" என்று எச்சரித்து விட்டு கைக்குழந்தையுடன் வீட்டை நோக்கி நடந்தாள். இப்படியொரு காட்சி ஆபாவாணனின் 'இரண்டு பேர்' படத்திற்காக அண்மையில் படமாக்கப்பட்டது. திவ்யா வாக ரோஜாவும், வேலைக்காரனாக செந்திலும் நடித்தனர். அசோக்—சாந்தி தம்பதிகளாக ராம்கி—குஷ்பூ நடிக்கின்றனர்.

(தலைப்பைப் பார்த்து நீங்கள் ஏடாகூடமாக நினைத்துக் கொண்டால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல.)

## இனி இவர்கள்..!

சன்.டி.வியில் 'தில்லானா தில்லானா' என்ற நிகழ்ச்சியை நடத்தி வருபவர் மேஜர் சுந்தரராஜனின் மகன் கௌதம். இவர் முதன் முதலாக 'ஆளவந்தான்' படத்தில் இரண்டு பாடலுக்கு நடனம் அமைத்திருக்கிறார். 'ஆளவந்தான்' வெளிவந்தால் கௌதம் திரையுலகில் நடன இயக்குநராகப் பிரகாசிக்கக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கிறதாம்.

பாரதி ராஜாவின் மகன் மனோஜ் திரையுலகில் காலடி ஊன்றுவதற்குப் படாத பாடுபட்டு வருகின்றார். நலன் விரும்பி ஒருவர் பெயர் ராசியைப் பற்றிக் கூறிவிட, சரி அதையும் தான் செய்து பார்ப்போமே என்று நினைத்து தனது பெயருடன் தந்தையின் பெயரையும் சேர்த்து மனோஜ் கே.பாரதி என்று மாற்றி வைத்துள்ளார்.

**

'ஆனந்தம்' படத்திற்கு வசனம் எழுதிய பிருந்தாசாரதி ஒரு படத்தை இயக்குகிறார். படத்தின் பெயர்—'மழைக்காலம்' படத்தை சூப்பர் குட் பிலிம்ஸினரே தயாரிக்கிறார்கள்.

**

சினிமாவை விட்டு ஒதுங்கி பிஸினஸில் கவனத்தைச் செலுத்திய அரவிந்தசாமி ஒரு புதிய படமொன்றில் நடிக்கப் போகிறார்.

**

'மஜ்னு' படத்தை விரைவில் வெளியிட வேண்டும் என்பதில் முழு மூச்சாக ஈடுபட்டிருக்கிறார் பிரசாந்த். ஆனால் போகிற போக்கைப் பார்த்தால் மஜ்னுவை முந்திக் கொண்டு 'தமிழ்' வெளிவந்துவிடும் போலிருக்கிறது.



பிரசாந்த்

## ஆளவந்தானின் ஆளுகையில்...

'ஆளவந்தான்' தமிழ்த்திரையுலகை மட்டுமல்ல, இந்திய திரையுலகத்தையும் மிகுந்த எதிர் பார்ப்பிற்கு உள்ளாக்கியிருக்கும் படம். பரபரப்பான பூஜையோடு ஆரம்பமாகி ஹொலிவூட் தொழில் நுட்பத்துடன் சூப்பர் அக்டர் கமல் ஹாசனின் மதிநுட்பமும் இணைந்து உருவாவதனால் இதற்கு இத்தனை எதிர்பார்ப்புகள்.

உலக திரைப்பட வரலாற்றினை இனிவரும் காலங்களில் ஆளப்போகும் இந்த ஆளவந்தானின் ஆரம்பமே அசத்தியிருக்கிறது.



கமல் ஹாசன்

ஆளவந்தானுக்காகத் தயாரிப்பாளர் செலவிட்டதொகை 16 கோடி. இதில் நடிகர் கமல்ஹாசனின் சம்பளம் 7 கோடியும் அடங்குகிறது. திரையிடத் தயாராக இருக்கும் இந்த நேரத்தில் படம் 29 கோடியே 7 லட்சத்திற்கு விற்பனையாகியிருக்கிறது. தமிழ் நாட்டில் மட்டும் 100 தியேட்டர்களில் திரையிடுவதற்கு 9 கோடியே 32 லட்சத்திற்கு பேரம் முடிந்துள்ளது. அதன் படி 100 தியேட்டர்களில் 4 காட்சிகளிலும் 4 லட்சம் பேர் பார்த்தால் ஒரு கோடி வசூலாகும். நான்கு வாரங்களிலும் நான்கு காட்சிகளும் ஹவுஸ் புல் ஆனால் 28 கோடி கிடைக்கும். தியேட்டர் வாடகை, கேளிக்கைவரி 50 சதவிகிதம் இதரசெலவுகள் என 14 கோடியை ஒதுக்கினால் 14 கோடி ரூபாய் இலாபம் பெறலாம். ஆனால் விற்பனை 9 கோடியே 32 லட்சத்துக்கு மட்டும். இது நான்கு வாரங்களுக்கான கணக்கு மாத்திரமே. ஆர்.எம்.எஸ்.—4 கோடி, ஓடியோ ரைட்ஸ்—50லட்சம், தெலுங்கு ரைட்ஸ்—4 கோடி, கேரளா ரைட்ஸ்—1.25 கோடி, கர்நாடக ரைட்ஸ்—1 கோடி, டிவி ரைட்ஸ்—2கோடி. தமிழ் நாட்டில் ஆளவந்தானை ரிலீஸ் செய்யப் போகும் சில விநியோகஸ்தர்களும் அவர்கள் படத்தை விலைக்கு வாங்கி இருக்கும் தொகையையும் பார்ப்போம்! மதுரைராமநாதபுரம் —1.42லட்சம், கோவை 1.30லட்சம், சேலம்—1.10 லட்சம் திருச்சி, தஞ்சை —1.25 லட்சம், செங்கல்பட்டு, சென்னை —தயாரிப்பாளர் தாணு நேரடியாக ரிலீஸ் செய்யப்போகிறார். வேலூர்—1.00லட்சம், திருநெல்வேலி, கன்னியாகுமரி—75லட்சம் (ரஜினிகாந்தின் படையப்பாவே 1[illegible] லட்சத்திற்குத்தான் விலை போனது)

## லவ்வர்ஸ் படத்தில் மீனா

சின்னு மூவிஸ் என்ற புதிய பட நிறுவனம் தயாரிக்கும் படம் 'லவ்வர்ஸ்'. கதாநாயகனாக முரளி நடிக்க இவருக்கு ஜோடியாக மீனா நடிக்கிறார். இவர்களுடன் மணிவண்ணன், வடிவேலு, மனோரமா, வெண்ணிறஆடைமூர்த்தி, ராம்ஜி, யுகேந்திரன் ஆகியோரும் நடிக்கிறார்கள். படத்தின் ஒளிப்பதிவை Y.N. முரளி கவனிக்கிறார்.

இசை—யுவன் சங்கர்ராஜா, கலை—மகி, ஸ்டன்ட்— சூப் பர் சுப்பராயன், கதை—ஈ.வி. சத்யநாராயணா, திரைக்கதை அமைத்து இயக்குகிறார்— ரவி.

## பிடிகொடுக்கவில்லை பிரதியூஷா

அறிமுகமாகி குறுகிய காலத்திற்குள் மளமளவென்று இத்தனை படங்களில் நடிக்கும் ரகசியம் பிரதியூஷா தன்னுடன் இணைந்து நடிக்கும் கதாநாயகர்களைக் கைக்குள் போட்டுக் கொள்வது தான் என்று கூறப்படுகின்றது. இதனைப்பற்றி பிரதியூஷாவிடம் கேட்டால் பிடி கொடுக்காமல் பேசும் அவர் "நான் கால்ஷீட் குளறுபடி செய்வதில்லை. என்னுடன் யாரையும் ஷூட்டிங் ஸ்பொட்டுக்கு அழைத்து வந்து மற்றவர்களை கஷ்டப்படுத்துவதில்லை. நான் அதிக படங்களில் நடிப்பதற்கு இதுவே காரணம்" என்று கூறுகிறார்.



# ஜோதிகாவிற்கு சிபாரிசு ரஜினி மறுப்பு

அடுத்து ரஜினி நடிக்கும் படத்திற்கு கதை இன்னும் தெரிவாகவில்லை. ஆனால் கதாநாயகி தெரிவாகிவிட்டார் என்று கோடம்பாக்கத்தினர் கூறுகின்றனர்.

ரஜினியுடன் நடிக்கும் அதிஷ்டம் ஜோதிகா விற்குத்தான் கிடைக்க விருந்ததாம். டிஸ்கசனின் போது பலரும் ஜோதிகாவின் பெயரையே கூறி னார்களாம். ஆனால் ரஜினிக்கு இதில் விருப்பமில்லையாம். வயது வித்தியாசம் அதிகமாகத் தெரியும் என்று மறுத்து வருகிறா ராம். ரஜினியின் புதுப்படத்தை இயக்கப்போவது ஷங்கர்.



மோனல்

'12பி' படம் சமீபத்தில் திரையிடப்பட்ட படம். இப்படத்தில் விவேக் தோன்றும் காட்சிகள் திரையில் வரும் போது ரசிகர்கள் ரொக்கட் விடுகிறார்கள். இதை ஒரு தியேட்டரில் நேரில் பார்த்த விவேக் நெகிழ்ந்து போய்விட்டாராம். என் மேல் இவ்வளவு அபிமானமும் பற்றுதலும் வைத்திருக்கும் என் ரசிகர்களுக்கு என்ன கைமாறு செய்யப் போகிறேன் என்று தனக்குத் தானே கூறிக்கொண்டாராம்.

அப்போது பக்கத்திலிருந்த ரசிகை இந்தா பிடி என்று பறக்கும் முத்தம் கொடுத்து அசத்தி விட்டாராம்.

# ரசிகையின் அன்புப்பரிசு



விவேக்

'பாளையத்து அம்மன்' மூலம் தமிழ் திரையுலகில் பக்திப் படங்களின் வரவு அதிகரித்திருக்கிறது. 'குழந்தையும் தெய்வமும்', 'தாலிகாத்த அம்மன்', 'ராஜராஜேஸ்வரி' போன்ற படங்கள் வெளியாகின. இப்போது 'கோட்டை மாரியம்மன்', 'பண்ணாரிஅம்மன்', 'அங்காள பரமேஸ் வரி'ஆகியவை தயாரிக் கப்பட்டு வருகின்றன.

*'கோட்டை மாரியம்மன்'*

ரோஜா, தேவயானி கதாநாயகிகளாக நடித்து வருகின்றனர். தேவயானிக்கு இது முதல் பக்திப்படம் என்பதனால் அசைவ உணவைத் தவிர்த்து நடித்து வருகிறார். ரோஜாவும் அசைவ உணவைத் தவிர்த்து விட்டார். 50 அடி உயர அம்மன் சிலை முன்பு ரோஜாவும் தேவயானியும் ஆடும் நடனக் காட்சி அண்மையில் படமாக்கப்பட்டது.

''முரண்டு பிடித்த முண்டக் கண்ணியம்மா முறைச்சுப் பார்க்காதே பாளயத்தம்மா'' என்ற பாடல் காட்சி மதுரை அழகர் மலை செல்லும் வழியில் உள்ள 50 அடி உயரமான அம்மன் சிலை முன்பு எடுக்கப் பட்டது. பாடலைப் பாடியபடி ரோஜாவும் தேவயானியும் ஆட அவர்களோடு சேர்ந்து 50 நடனக்கலைஞர்களும் நடனமாட பக்திரசம் சொட்டச் சொட்ட காட்சி படமாக்கப்பட்டது.



பண்ணாரி அம்மனாக விஜயசாந்தி

# அசத்தலாக தயாராகும் அம்மன் படங்கள்

*'பண்ணாரி அம்மன்'* – முதன் முதலாக விஜயசாந்தி அம்மனாக வேடமேற்றிருக்கிறார். உண்மைக் கதையைப் படமாக எடுத்து வருகிறார்களாம்.

*'அங்காள பரமேஸ்வரி'* – 'நாகவள்ளி', 'தேவி' போன்ற அம்மன் புகழ் பேசிய படங்களைத் தயாரித்த தேவிசித்ரம் நிறுவனம் தயாரிக்கும் புதிய படம் 'அங்காள பரமேஸ்வரி'. இதில் மீனா, ரோஜா, அம்மன் வேடங்களில் நடிக்க பக்தையாக பிரேமா நடிக்கிறார்.

## 'ஜெமினி' நாயகி மும்பை கிரண்

பல வெற்றிப்படங்களைத் தந்த ஏ.வி.எம்.நிறுவனம் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தயாரிக்கும் படம் 'ஜெமினி'. இதில் விக்ரம் கதாநாயகனாக நடிப்பது தெரிந்த செய்தி. கதாநாயகியாக மும்பை மொடல் அழகி கிரண் அறிமுகமாகப் போகிறார்.

படத்தின் ஒளிப் பதிவு–வெங்கடேஷ், கலை–தோட்டாதரணி, எடிட் டிங்–சுரேஸ் அர்ஸ், பாடல்கள் –வைரமுத்து, இசை– பரத்வாஜ்,தயாரிப்பு– எம்.சரவணன், எம். பாலசுப்ரமணியன், எம்.எஸ்.குகன்.

# மனிதாபிமானமுள்ள நடிகர் அஜித்

இப்போதுள்ள நடிகர்களில் மனிதாபிமானம் மிக்கவர் என்ற பெயர் அஜித்துக்கு கிடைத்திருக்கிறது. இதற்கு சான்று பகரும் வகையில் மேலும் ஒரு சம்பவம் அண்மையில் நடந்திருக்கிறது.

அஜித்குமாரின் மனேஜர் சுரேஷ் சந்திராவின் உடல் நிலை திடீரென்று சரியில்லாமல் போகவே மருத்துவ மனையில் சேர்ந்து அறுவைச் சிகிச்சை செய்திருக்கிறார். ஓய்வு எடுப்பதற்காக வீட்டிற்குச் சென்றவருக்கு இன்ப அதிர்ச்சி காத்திருந்ததாம்.

புதிய ஏ.சி, கார்ட்லெஸ் போன், கார்ட்லெஸ் பெல் என மேலதிக வசதிகளை ஏற்படுத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்திருந்தாராம் அஜித்குமார்.

நன்றி உணர்ச்சியோடு திக்கு முக்காடிப் போயிருக்கின்றனர் சுரேஷ் சந்திராவின் குடும்பத்தினர். வெல்டன் அஜீத் கீப் இட் அப்..



அஜித்குமார்—ஜோதிகா

# திரை மறைவில்

'மல மல மல்லே' என்ற பாடலுக்கு ஆடினாலும் ஆடினார் 'தாஜ்' நடிகை பாடலுக்கு ரசிகர்களிடத்தில் அப்படியொரு வரவேற்பு! முன் னர் படத்தை வாங்க மறுத்த விநியோகஸ்தர் களிடத்தில் இப்போது கடும் போட்டி நிலவுகிறதாம்.

* *

'தோஸ்த்தின் உதவியினால் 'சமுத்திரம்' படத்தில் நடித்தார் 'வானவில்' நடிகை. இப்போது வேறுபடங்கள் இல்லாத நிலையில் தெலுங்கு கன்னடப் பக்கம் போயுள்ளாராம். ஆனாலும் அவ்வப்போது சென்னைக்கு வந்து நோட்டம் விட்டுக் கொண்டிருக்கிறார்.

* *

கவுண்டர் 'பெல்' நடிகரிடம் உதை வாங்கியே முன்னுக்கு வந்தவர் 'தில்' லில் முடியும் நாலெழுத்து நடிகர். தமிழில் அண்ணரின் இடத்தை வடிவான வேலுவும் விவேகமானவரும் கைப் பற்றிவிட்டனர். அடுத்து என்ன செய்யலாம் என்ற ஆலோசனையில் இறங்கியுள்ள அவரை சொந்தப் படம் எடுக்குமாறு கூறியிருக்கின்றனர் அவரது உறவினர்கள். சொந்தப்படம் எடுத்து சோகமான கதையை 'தில்' நடிகரும் அறிந்திருப்பதனால் பின் வாங்கிக் கொண்டிருக்கிறாராம்.

* *

ஆடைக்குறைப்பு, முத்தச்சலுகை அனைத்தையும் தமிழ்த்திரையுலகிற்கு வழங்கித் தன்னாலான முயற்சிகளைச் செய்து பார்த்தார் 'ரன்' நடிகையின் உடன்பிறப்பு. ஆனால் தனது முயற்சிகளனைத்தும் கோணலான நிலையில் அக்கா வழியில் முன்னேற்றி விடக் கூடிய காதலரைத் தேடி வருகிறாராம்.

* *

இளைய தளபதி தன்னிடம் வேலை செய்பவர்களுக்குச் சொந்தமாக பிளாட் கட்டிக் கொடுக்கப் போகின்றார் என்ற செய்தி வந்தது. அப்போது இளைய தளபதி என்றால் தளபதிதான் கர்ண பரம்பரை என ஆஹா ஓஹோ வென்று புகழ்ந்தனர் வேலையாட்கள். இப்போது என்னடா வென்றால், அந்த பிளாட்களுக்கு வாடகை நிர்ணயித்து வசூல் செய்ய ஆரம்பித்திருக்கிறார் தளபதியின் தந்தை.

* *

திருமணமாகி குழந்தை பெற்றுக் கொண்டாலும் 'பூ' நடிகையின் மவுசுகுறைந்துவிடவில்லை. திருமதிஎன்றகௌரவத்துடன் மீண்டும் வலம் வர ஆரம்பித்திருக்கிறார். ஜெயா டி.வியில் 'கோடீஸ்வரி' நிகழ்ச்சி, திரைப் படங்கள் என்று பிஸியாகி இருக்கிறார்.




# பெற்றோருக்கு உள்ள நீரிழிவு பிள்ளைகளுக்கும் ஏற்படுமா?

கே : எனக்கு வயது 27 (ஆண்). இன்னும் திருமணமாகவில்லை. விரைவில் திருமணம் செய்ய இருக்கிறேன். கடந்த 10 வருடங்களாக நான் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு இன்சுலின் மருந்தை ஊசி மூலம் ஏற்றிவருகின்றேன். இதனால் எனது எதிர்கால வாழ்க்கை பாதிக்கப்படுமா? நான் காதலிப்பவரைத் திருமணம் செய்ய எனக்குத் தயக்கமாக இருக்கிறது. இந்த நோய் எனது மனைவிக்கோ அல்லது பிறக்கப் போகும் பிள்ளைகளுக்கோ ஏற்பட்டு விட சந்தர்ப்பம் இருக்கிறதா? அத்தோடு எனது உறுப்பு (ஆண்) மிகவும் சிறிதாக இருக்கிறது. ஆனால் அதன் தொழிற்பாட்டில் பிரச்சினையில்லை. எனது இந்த மனத் தடுமாற்றங்களுக்கெல்லாம் தீர்வாக உங்கள் பதில் அமையுமென நம்புகிறேன்.

ப : நீரிழிவு நோய் உள்ளவர்கள் திருமணம் செய்வதற்கு எந்தவித தயக்கமும் காட்ட வேண்டிய அவசியமில்லை. இது ஒரு தொற்றுநோயல்ல. எனவே இது உங்கள் மனைவிக்கு ஏற்படமாட்டாது. உங்களுக்கு ஏற்பட்டிருப்பது 1 ஆம் ரக நீரிழிவு நோய் ஆகும்.(**Type -1 diabetes mellitus**) இது இளம் வயதில் ஏற்படும். இதனைக் கட்டுப்படுத்த ஊசிமருந்து (இன்சுலின்) தேவை.

இந்த 1 ஆம் ரக நீரிழிவு நோய் அவர்களின் பிள்ளைகளுக்கு கடத்தப்படும் சந்தர்ப்பம் மிகக்குறைவு. உங்களுக்கு பிறக்கப்போகும் குழந்தைக்கு நீரிழிவு நோய் வரக்கூடிய சந்தர்ப்பம் 3.5% ஆகும். (அதாவது முப்பதில் ஒரு பங்கு).

தொழிற்பாடு நல்லதாக இருந்த பொழுதும் உங்கள் ஆண் உறுப்பு சிறியதாக இருப்பதாக எழுதியிருந்தீர்கள். இது உங்கள் குடும்ப வாழ்க்கையில் எந்த வகையிலும் பிரச்சினையாக இருக்க மாட்டாது. இதை ஒரு பிரச்சினையாக கருதி பலர் ஆலோசனை கேட்டு எழுதியிருக்கிறார்கள். மனிதர்களிடையே உயரத்தில் வேறுபாடு இருப்பது போல இதன் அளவிலும் வேறுபாடுகள் இருக்கலாம். இதனை ஒரு குறையாக கருத வேண்டாம். சரியான அளவு ஊசி மருந்து (இன்சுலின்) மூலமும் நீரிழிவு நோய்க்கு ஏற்ற உணவு வகைகள் மூலமும் உங்களினுடைய இரத்தத்தில் உள்ள குளுக்கோசின் அளவு கட்டுப்படுத்தப்பட்டால் நீங்கள் சுகமாக நீண்ட காலம் வாழ முடியும்.

**இரத்தத்தில் உள்ள குளுக்கோஸை கட்டுப்படுத்துவதன் மூலம் நோயிலிருந்து மீள முடியும்.**

கே : நரைத்த தலைமயிரை மீண்டும் நிரந்தரமாக கறுப்பாக மாற்றுவதற்கு ஏதாவது மருந்துகளோ மருத்துவ முறைகளோ கண்டறியப்பட்டுள்ளனவா?

ப : இது சம்பந்தமாக சில ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இதுவரை இதற்கு திருப்திகரமான மருத்துவ முறைகள் எதுவும் கண்டறியப் படவில்லை.

**இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் சி.சிவன்சுதன். நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:—
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
36/2, பிரெட்றிகா வீதி,
கொழும்பு — 06.**

கே : நான் ஒரு ஆண். வயது 17. கடந்த 6 மாத காலமாக எனது கைத் தோலில் ஒரு படர்த்தி மாதிரி இருக்கிறது. அவ்விடத்தில் உணர்ச்சி குறைந்து காணப்படுகிறது. இப்படியான ஒரு படர்த்தி (தேமல் போல) தோலில் ஏற்பட்டு அவ்விடத்தில் உணர்ச்சி குறைந்து காணப்பட்டால் அது தொழுநோய் (குஷ்டரோகம்) ஆக இருக்கக்கூடும் என சுடர் ஒளியில் வாசித்து அறிந்தேன். முழங்கையிலே சுண்டும் பொழுது நரம்பு தட்டுப்பட்டது போலவலி ஏற்படுகிறது. இதற்கு கிறீம் ஒன்று பூசி வருகிறேன். சுகம் தெரியவில்லை. எனக்கு பயமாக இருக்கிறது. இதற்கு நான் என்ன செய்ய வேண்டும்.

ப : இங்கு ஒவ்வொரு வினாவுக்கும் பிரசுரிக்கப்படும் விடைகளும் அறிவுறுத் தல்களும் அந்த வினாவைக் கேட்டவருக்கு மட்டும் அல்ல. அதனை ஒத்த பிரச்சினை உள்ள அனைவருக்கும் அந்த அறிவுறுத்தல்கள் பொருந்தும். உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அறிகுறிகள் தொழு நோயை ஒத்ததாகவே இருக்கின்றன. இதனை மருந்து பூசுவதன் மூலம் மாற்ற முடியாது.

ஆரம்ப நிலையில் உள்ள உங்களது இந்த நோயை, 6 மாத காலத்திற்கு மாத்திரைகளைப் பாவிப்பதன் மூலம் முற்றாகக் குணப்படுத்தலாம். எனவே காலம் தாழ்த்தாது ஒரு தோல் வைத்திய நிபுணரை அல்லது ஒரு பொது மருத்துவமனை மருத்துவரை (தோல் கிளினிக்) சந்தித்து உங்கள் நோயை உறுதிப்படுத்திக் கொண்டு அதற்கான மருந்துகளைப் பெற்று பாவித்துக் கொள்ளுங்கள். முன்பு தொழுநோய் என்பது மாற்ற முடியாத ஒரு பயங்கரமான நோயாகக் கருதப்பட்டது. இப்பொழுது இதனை இலகுவில் முற்றாக மாற்ற முடியும்.

**நரை முடியை நிரந்தரமாக கறுப்பாக மாற்ற முடியாது**

கே : எனது வயது 18(பெண்). வன்னிப் பிரதேசத்தில் இருந்து எழுதுகிறேன். எனக்கு கடந்த 2 வருடங்களாக மாதவிடாய் வரும் போது அதனுடன் சேர்ந்து பூச்சிகளும் வெளியேறுகின்றன. எனது கருப்பை பாதிக்கப்பட்டிருக்குமோ என்று பயமாக இருக்கிறது. எனக்கு திருமணமானால் குழந்தைகள் பிறக்குமா என்றும் சந்தேகமாக இருக்கிறது. இந்த நோய் ஏற்பட்டபின் என்னால் கல்வியில் முற்றாகக் கவனம் செலுத்த முடியவில்லை. இந்த நோய் பற்றி நான் எவரிடமும் கூறவில்லை. இந்த நோயை குணப்படுத்த உங்கள் ஆலோசனையை விரைவில் எதிர்பார்த்திருக்கிறேன்.

ப : பூச்சி மருந்தை(*Worm Treatment*) உட்கொள்வதன் மூலம் நீங்கள் உங்கள் நோயை முழுமையாக குணப்படுத்திக் கொள்ள முடியும். இந்த பூச்சிகள் உண்மையில் உங்கள் கருப்பையில் இருந்து வரவில்லை. மாதவிடாய் காலத்தில் குடலில் காணப்படும் பூச்சிகள் மலவாசலினூடாகவே வெளிவருகின்றன. எனவே நீங்கள் பயப்பட வேண்டிய அவசியமில்லை.

இந்த நோய் குணமாகிய பின் மீண்டும் அந்தப் பூச்சியின் தொற்றுதலைத் தடுப்பதற்கு மலம் கழித்த பின்பும் உணவு உண்பதற்கு முன்பும் கையை சவர்க்காரம் போட்டு கழுவ வேண்டும். கைவிரல் நகங்களை ஒட்ட வெட்டிக் கொள்ள வேண்டும். கண்ட கண்ட இடங்களில் உணவு அருந்துவதை தவிர்ப்பதுடன் கொதித்த தேறிய நீரையே பருகுதல் வேண்டும்.

கே : எனக்கு வயது 53. கடந்த 5 வருடங்களாக எனக்கு Low Pressure நோய் இருந்து வருகின்றது. குருதி அமுக்கம் 110/60 இற்கு குறைவடைந்து விட்டது. மருந்து பாவித்தும் எந்தவித சுகமும் ஏற்படவில்லை. வரவர நோய் கூடிக்கொண்டே செல்கிறது. தற்போது ஏற்பட்டுள்ள இந்த பொருளாதார சுமைகளுடன் மருந்துக்கான செலவுகளையும் சமாளித்துக் கொள்வது கஷ்டமாக இருக்கிறது. இதனை நிரந்தரமாகக் குணப்படுத்த உங்கள் ஆலோசனையை எதிர்பார்த்து நிற்கின்றேன்.

ப : **Low Pressure** (குருதி அமுக்கக் குறைவு) சம்பந்தமாக ஏற்கனவே சுடர் ஒளியில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. **Low Pressure** என்று ஒரு நோய் இல்லை. தயவு செய்து அதற்காக மருந்து சாப்பிட்டு நோயை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம். நீங்கள் மருந்துப் பாவனையை நிறுத்திக் கொள்வதுடன் வேறுயாராவது இந்த நோய்க்காக மருந்து சாப்பிட்டு வந்தால் அவர்களுக்கும் அறிவுரை சொல்லி அதற்கான மருந்துப் பாவனையை நிறுத்தச் சொல்லுங்கள்.

பலர் **Low Pressure** சம்பந்தமாக கேட்டு எழுதியிருக்கிறார்கள். உங்கள் குருதியமுக்கம் 90/50 இற்கு குறைந்தால் கூட நீங்கள் கவலைப் பட வேண்டிய அவசியமில்லை. உங்களுக்கு ஏதாவது அறிகுறிகள் இருந்தால் அது வேறு ஏதாவது நோயின் காரணமாகவே ஏற்பட்டிருக்க வேண்டும்.

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 10.00–10.30 | சாட் ஷோ | ஆனந்தபவன் | ஆலோசனை நேரம் | பஞ்சவர்ணம் | இப்படிக்கு நீங்கள் | | |
| 10.30–11.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | | |
| 11.00–11.30 | சின்னத்திரை | சனிதபதனி | புஷ்பாஞ்சலி | சீமான்களே சீமாட்டி... | இப்படிக்கு தென்றல் | குட்டிச் சுட்டி | காலைக்கதிர் குட்டிச் சுட்டி |
| 11.30–12.00 | தேனிசை சங்கமம் | தேனிசை சங்கமம் | தேனமுது | சப்தஸ்வரங்கள் | திரை இசை | | |
| 12.00–12.30 | கொண்டாட்டம் | பில்லர் | நம்ம நேரம் | பில்லர் | திரை விமர்சனம் | சின்னச் சின்ன ஆசைகள் | |
| 12.30–13.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | | |
| 13.00–13.15 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கெண்ட் மெட்னி | சக்தி வீக்கெண்ட் மெட்னி |
| 13.15–13.30 | | | | | | | |
| 13:30–14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00–14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14:30–15.00 | | | | | | | |
| 15.30–16.00 | | | | | | இளையகானம் | ரிலாக்ஸ் |
| 16.00–16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | டைம் |
| 16.30–17.00 | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | செம்பருத்தி | ஜனனி |
| 17.00–17.30 | பூஞ்சோலை | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டு | தமிழ் கார்ட்டூன் | இயந்திரப் பறவை | சனிதபதனி |
| 17.30–18.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | தேனிசை சங்கமம் | தேனிசை சங்கமம் |
| 18.00–18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | பெப்ஸி உங்கள்... | தந்திர பூமி | ஆலோசனை நேரம் | இப்படிக்கு நீங்கள் |
| 18.30–19.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | சாட் ஷோ | ஆனந்தபவன் |
| 19.00–19.30 | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | செம்பருத்தி | சப்தஸ்வரம் |
| 19.30–20.00 | சின்னத்திரை | சனிதபதனி | புஷ்பாஞ்சலி | சீமான்களே சீமாட்டி ... | இப்படிக்கு தென்றல் | இளையகானம் | பஞ்சவர்ணம் |
| 20.00–20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30–21.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | இயந்திரப்பறவை | ஜன்னல் |

# சரியான வயதில் தெளிவாக இருப்போம்



ஒரு பெண்ணின் வாழ்வில் இருபது முதல் முப்பது வயதிற்கு இடைப்பட்ட காலம் மிக முக்கியமானது. இக்காலத்தில்தான் அவர்களின் வாழ்க்கையில் திருப்புமுனை ஏற்படுகிறது.

இக்காலத்தில் டீன் ஏஜ் குறும்புகள் எல்லாம் இல்லாமல் போய் பெண்களுக்கு பொறுப்புமிக்க வாழ்க்கை ஆரம்பமாகிறது. இக்காலத்தை மிக எளிதாகக் கடந்து விட முடியாது. தமது வாழ்க்கையைத் தீர்மானிக்க வேண்டிய கட்டாயம் இருபதுக்கும் முப்பதிற்கும் இடைப்பட்ட வயதில்தான் பெண்களுக்கு ஏற்படுகிறது.

மேற்படிப்பா அல்லது திருமணமா என்ற முடிவை பெண்கள் எடுக்க வேண்டிய காலகட்டமும் இதுதான். இந்த வயதில் வாழ்க்கையில் நல்லவற்றையும் தீயவற்றையும் பிரித்து அறியும் மனப்பக்குவம் பெண்களுக்கு ஏற்படும்.

தமது சொந்த விடயங்களில் யாருடைய தலையீட்டையும் விரும்பாத பருவம் இது—

இருபது முதல் முப்பது வயது பெண்களின் மனம் ஓரளவிற்கு பக்குவப்பட்டிருக்கும். அவர்களிடம் உள்ள திறமைகள் இந்த வயதில் தான் வெளிக் கொணரப்படல் வேண்டும்.

அதே போன்று பெற்றோர் தந்துள்ள சுதந்திரத்தை பொறுப்புணர்ச்சியுடன் பயன்படுத்திக் கொள்வது அவசியம்.

பல பெண்கள் இந்த வயதில் படிப்பதற்காக அல்லது தொழிலுக்காக தனித்து வாழ ஆரம்பிக்கிறார்கள். அறிவுரைகள் சொல்லவோ, ஆறுதல் தேடும் போது அணைக்கவோ பொதுவாக எவரும் இருக்க மாட்டார்கள். ஆனால் இதில் தான் தனி உற்சாகம் இருக்கிறது.

இருபது வயதை அடைந்த உடனேயே சில பெண்களைத் திருமணம் செய்து கொள்ளும்படி பெற்றோர் வற்புறுத்துகின்றனர். ஆனால், மனம் பக்குவமடைந்து வெளி உலகத்தை எதிர்த்து முகம் கொடுக்கக்கூடிய திறமை எல்லோருக்கும் உடனேயே வந்து விடுவதில்லை. அவ்வாறான பெண்கள் தமது பெற்றோருடன் கலந்தாலோசித்து திருமணத்தைச் சற்று தள்ளிப்போடுவது நல்லது.

வாழ்க்கையில் ஒரு முடிவை எடுக்க முன் தெளிவாகச் சிந்தித்து எடுக்க வேண்டும். வாழ வாய்ப்புக் கிடைப்பது ஒரு முறைதான். எனவே கிடைத்த சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தி திறமையைக் காட்ட வேண்டும். இது தான் ஒரு பெண்ணுக்கு புத்திசாலித்தனம்.

இருபதுக்கும் முப்பதுக்கும் இடைப்பட்ட வயதில் எடுக்கும் முடிவுகளும் செய்யும் செயல்களும் பெண்களின் வாழ்க்கையில் அதிக ஆதிக்கம் செலுத்தக் கூடியவை. இந்த வயதுள்ள பெண்கள் புத்தி சாதுரியத்துடன் நடந்து கொண்டால் வாழ்க்கை சிறப்பாக அமையும்.

# உங்கள் மகளுக்கு தைரியம் தேவை

அவள் பாடசாலையில் படிக்கும் ஓர் இளம்பெண். தினமும் அந்தப் பெண்ணைப் பின் தொடரும் ஓர் இளைஞன், தன்னைக் காதலிக்கும் படி கூறி வற்புறுத்துவான்.

உடனே அப்பெண் பயந்து விடுகிறாள். அவளுக்கு இந்தப் பயம் ஏன் ஏற்படுகிறது? விடலைப் பருவத்தில் இருக்கும் சில பெண் பிள்ளைகள், பிற ஆண்களுடன் பேசுவதை பெரிய குற்றமாக நினைக்கிறார்கள். பெரியவர்கள் எவரும் கண்டுவிட்டால் என்ன நடக்குமோ என்ற அச்சம் இவர்களை ஆட்கொள்கிறது.

தன்னைக் காதலிக்கும்படி ஒருவன் வற்புறுத்துவதை அப்பெண் அவமானமாக நினைக்கிறாள். ஏதோ தான் குற்றம் செய்து விட்டதாக நினைத்து வேதனைப்படுகிறாள்.

ஒரு பெண்ணிடம் பிற ஆண் ஒருவர் பேசுவது தவறு, அல்லது காதலிக்கும்படி கேட்டால் அது பெரும் தவறு என்ற பிற்போக்கான சிந்தனை இன்றும் பலரிடம் காணப்படுவது தான் இதற்கு முக்கிய காரணம்.

இவையெல்லாம் பெரிய விடயங்களல்ல, ஓர் ஆண் தன்னை காதலிக்கும்படி கேட்பது குற்றமல்ல என்பதை பெண்ணிற்கு உணர்த்த வேண்டும். இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தை தைரியமாக எதிர்கொள்வது எப்படி என்று பெண் குழந்தைகளை வளர்க்கும் போதே பெற்றோர் கற்றுக் கொடுக்கத் தவறக் கூடாது.



ஆண்களின் முரட்டுத்தனமான வார்த்தைகளை எதிர்கொள்வது எப்படி என்ற தைரியம் அவர்களிடம் வளர்க்கப்படுவது அவசியம்.

விடலைப் பருவ பெண்களின் மனதில் பயம் ஏற்பட மற்றொரு முக்கியக் காரணம், தங்கள் பிரச்சினைகளைப் பகிர்ந்து கொள்ள எவரும் இல்லாததுதான். இந் நிலைமையிலிருந்து விடுபட மிகப் பொருத்தமான வழி ஒன்றுதான் இருக்கிறது.

பெற்றோரிடம் எதையும் பேசலாம். அவர்கள் நம்மைப் பற்றி தவறாக நினைத்துக் கொள்ள மாட்டார்கள் என்ற நம்பிக்கையை ஒவ்வொரு பெண் பிள்ளையின் மனதிலும் பெற்றோர் ஏற்படுத்தி விட வேண்டும்.

# அன்பாகப் பழகி உறவை வளர்க்கலாம்

ஊடல், கோபம் போன்றவை இல்லாத வாழ்க்கை இருக்காது. நாம் நெருக்கமாக உறவு வைத்திருக்கும் பலரிடம் எமக்கு இந்த உணர்வுகள் ஏற்படுகின்றன.

அதிகமாக உரிமை கொண்டு பழகுபவர்களுடன் தான் ஊடலும் கோபமும் அதிகமாக ஏற்படுகின்றன. இவ்வாறான சமயங்களில் அன்பான சமாளிப்புகள் உறவுகளை மெருகூட்டக் கூடியவை.

மற்றவர் செய்த தவறுகளை திரும்பத் திரும்பச் சொல்லிக் காட்டக் கூடாது. சரியான சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூறி தவறை திருத்திவிட வேண்டும்.

மற்றவர்களின் திறமைகளை தாராள மனதுடன் பாராட்டப் பழகிக் கொள்வோம். அப்போது அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். நம் மனமும் புத்துணர்வைப் பெறும்.

விட்டுக் கொடுத்தல் என்பது பல சந்தர்ப்பங்களில் அத்தியாவசியமாகிறது. எவ்வளவு தூரம் விட்டுக் கொடுத்து வாழ்கிறோமோ அந்தளவுக்கு நிம்மதி கிடைக்கும்.

வேலை செய்யும் இடத்தில் அல்லது வெளிஇடங்களில் பல அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் நெருக்கமாகப் பழகுபவர்களிடம் மன நிம்மதியைத் தேடுவது வழமை. இவற்றை நாமும் புரிந்து கொள்ள வேண்டும்.

மற்றவர்களின் விருப்பத்தை நாமும் எமது விருப்பத்தை மற்றவர்களும் மதிக்கும்



போது ஏற்படக் கூடிய மகிழ்ச்சிக்கு வரையறை ஏது?

உறவுகள் விரிசலடைய பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் அவை மீண்டும் ஏற்பட அன்பு என்ற ஓர் உணர்வு போதுமானது. அன்பாகப் பழகி மகிழ்ச்சியுடன் வாழ்வோம்!

# ஆண்கள் தீர்மானித்த உலகில் பெண்கள் வாழ்கிறார்கள்

ஆண்கள் தீர்மானித்த உலகில் பெண்கள் வாழ்கிறார்கள் என்ற கட்டுரை தொடர்பான கருத்துக்களம் இவ்வாரமும் தொடர்கிறது.

எமது மண்ணில் செய்கின்ற காரியங்கள், விதிக்கின்ற கட்டுப்பாடுகள் அனைத்தும் அவசியமானவை. அவை தேவையானவை.

ஒரு பெண், தான் விரும்பும் ஆணிடம் தனது காதலை வெளிப்படுத்தி அவன் அதனை ஏற்க மறுத்தால் அதைத் தாங்கிக் கொள்ளும் இயல்பு பெண்களிடம் இல்லை. தன் தோல்வியால் வேதனை கொண்டு வாழ்வின் எல்லைக்குக் கூடச் சென்று விடுவாள்.



ஆண் அப்படி அல்ல, தனது தோல்வியை தாங்கிக் கொள்ளும் இயல்பை உடையவன். எனவேதான் ஒரு பெண் தன் காதலை வெளிப்படுத்துவதை சமூகம் கிரிமினல் குற்றமாகக் கருதுகிறது.

ஆண் பிள்ளைகள் சிரித்துக் கும்மாளம் அடிப்பதை ரசிக்கும் தாய், பெண் பிள்ளைகள் அப்படிச் செய்யும் போது கண்டிப்பதற்குக் காரணம் இருக்கிறது. ஒரு பெண் பிள்ளை வளர்ந்து வரும் போது இதனால் பலரின் அவதானத்தைப் பெறுவாள். தேவையற்ற பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புகள் ஏற்படும்.

ஆடை அலங்காரங்கள் என்று வரும் போதும் இதே விடயத்தைத் தான் மனதில் கொள்ள வேண்டும். ஒரு பெண் சுதந்திரமாக வாழ்வதற்கும் கணவனின் கட்டுப்பாடு இல்லாமல் இருப்பதற்கும் சீதனம் அவசியமாகிறது.

எது எப்படி இருப்பினும் ஒரு பெண் ஆண்கள் தீர்மானித்த உலகில் வாழும் போது தான் பாதுகாப்பாகவும் சுயகௌரவத்துடனும் மனச் சுமைகள் இன்றியும் வாழ முடியும்.

க..வாசுதேவன், வட்டுக்கோட்டை.

**கருத்துக்களம்**



# பெண்

பசீனா

# வங்கிக்குப் போகும் போது...

தற்போது அதிகமான வங்கிகள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. பணத்தை வைப்புச் செய்தல், மீளப் பெறல் போன்ற தேவைகளை ஏ.டி.எம் மூலமே செய்து கொள்ளலாம். அதேபோன்று இரவு நேர வங்கிச் சேவையும் அறிமுகமாகியுள்ளது.

ஆனால் சில தேவைகளுக்காக வங்கி ஊழியர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் நேரிடுகிறது. இவ்வாறான எந்த ஒரு தேவைக்காகவாவது வங்கிக்குச் செல்லும் நீங்கள் சில விடயங்களை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்:



* பேனா இல்லாமல் வங்கிக்குச் செல்லாதீர்கள்.
* பணம் பெறும் அட்டையில் உள்ள பின் (Pin) இலக்கத்தை ஞாபகம் வைத்திருங்கள்.
* பணத்தை வைப்புச் செய்யப் போகும் போது பணத்தாள்களைச் சரியாக எண்ணி, பெறுமதிக்கு ஏற்ப வேறாக வைத்து எடுத்துச் செல்லவும். மீளப்பெறும் போதும் எண்ணி எடுக்கவும்.
* மீளப்பெறும் அல்லது வைப்புச் செய்யும் போது அதற்குரிய படிவங்களில் தெளிவாக எழுதவும்.
* வங்கிக்குச் செல்லும் போது உங்கள் வைப்புப் புத்தகத்தை 'அப்டேட்' (Update) செய்யவும்.
* புதிய சலுகைகளை அல்லது சேவைகளை வங்கி அறிமுகப் படுத்தி இருந்தால் அவை தொடர்பான விவரங்களை தெரிந்து வைத்திருங்கள்.
* நீங்கள் கணக்கு வைத்திருக்கும் வங்கியின் தொலைபேசி இலக்கம், முகாமையாளரின் பெயர் விவரங்கள் என்பவற்றைத் தெரிந்து வைத்திருங்கள். அவசரத் தேவைகளுக்கு இவை உதவியாக இருக்கக் கூடியவை.

# வேட்பாளர் பட்டியலோடு ஐக்கியம் ஓயக்கூடாது

## தொடர்ந்து நிலைப்பதே சமுதாயத்துக்கு நன்மை

மலையக ஐக்கியம், வேட்பாளர் பட்டியலோடு நின்று விடக்கூடாது என்கிறார் செங்கொடிச் சங்கத்தின் உபதலைவரும் அம்பேகமுவ பிரதேச சபை முன்னாள் உறுப்பினருமான செல்லையா சிவசுந்தரம்.

மலையகத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தேசிய தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகியவற்றிக்கு இடையில் ஏற்பட்டுள்ள கூட்டணி குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது:

நடைபெறவிருக்கும் தேர்தலில் தமிழ் அமைப்புக்கள் ஒன்றுபட்டு ஓர் அணியில் போட்டியிடுவதை நாம் வரவேற்கின்றோம். இதன் மூலமாகவே எமது ஐக்கியத்தைப் பேணிக்காக்க முடியும்.

சிறுபான்மை மக்களின் உரிமைகளை போராட்டம் மூலமே பெற முடியும். அவற்றை தங்கத் தட்டில் வைத்து எவரும் எமக்குத் தரமாட்டார்கள். அண்மையில் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வுகூட தொழிலாளர் வர்க்கத்துக்குக் கிடைக்கவில்லை.

ஐக்கியம் என்பது மலையத்தைப் பொறுத்த வரை வேட்பாளர் பட்டியலைத் தயாரிப்பதற்காக மாத்திரம் இருந்து விடக்கூடாது.

கூட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுவிட்டு தத்தமது கட்சிகளின் பலத்தை அதிகரிக்க முயற்சிப்பதும் தமது அலுவலகங்களில் இரகசியமாகக் கூட்டங்களை நடத்துவதும் தமது கட்சி உறுப்பினர்களுக்கு மாத்திரம் வாக்களிக்கும்படி இரகசிய பிரசாரங்களில் ஈடுபடுவதும் கூட்டமைப்புக்கு வேட்டு வைத்து விடும்.

ஆகவே தேர்தல் தொடர்பாக செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்களை மீறாமல் ஐக்கியத்தைப் பேணவேண்டும். மலையக மக்களின் வளர்ச்சிக்காக அனைவரும் பாடுபட வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலமே மலையக மக்களின் உரிமைகளை எதிர்காலத்தில் போராடிப் பெறமுடியும். தவறினால் ஏற்கனவே உள்ள நாடாளுமன்ற அங்கத்துவத்தையும் இழக்க வேண்டிய நிலையே ஏற்படும்.

இப்படி அவர் கூறினார்.

— மஸ்கெலியா செய்தியாளர்.

**மலையகக் கண்ணோட்டம்**
இரா. புத்திரசிகாமணி

# சமத்துவம், சமவுரிமை வெறும் பம்மாத்து

## ஐ.தே.கவைச் சாடுகிறார் புத்திரசிகாமணி

திறமையும், புரட்சிகர முற்போக்கு வாதமும் கொண்டவர்கள் சிறுபான்மை இனத்தவர்களாக — குறிப்பாக இந்திய வம்சாவளியினராக — இருந்து விட்டால் அவர்களைத் திட்டமிட்டு ஓரங்கட்டுவதில் கை தேர்ந்த சூத்திரதாரிகள் ஐ.தே.க தலைவர்களே. இது அனுபவத்தால் கண்ட உண்மை என்று புத்திரசிகாமணி கூறினார்.

ஐ.தே.க வின் சிரேஷ்ட தலைவர்களுள் ஒருவரான காமினி திஸநாயக்காவினால் அரசியலுக்கு அறிமுகமானவர் வி. புத்திரசிகாமணி. ஆரம்பகாலம் முதலே தனது திறமையால் அவர் நுவரெலியா மாவட்டத்தில் தனது முத்திரையைப் பதித்தவர்.

மலையக வம்சாவளி மக்கள் தனி ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என மாகாண சபையிலும் நாடாளுமன்றத்திலும் குரல் எழுப்பி நாட்டின் பல பாகங்களிலும் வாழும் தமிழர்களின் பாராட்டுக்களைப் பெற்றவர்.

மலையகத்தில் இ.தொ.கா. மட்டுமே ஏகபோக இராஜ்யம் நடத்திக் கொண்டிருந்த வேளையில் ஐ.தே.கவின் கட்டுப்பாட்டில் இயங்கிய இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் மத்திய மாகாண தொழில் உறவு அதிகாரியாகவும், பின்பு பிரதம அமைப் பாளராகவும், சங்கத்தின் உப செயலாளராகவும், பிரதி பொதுச் செயலாளராகவும் கடமையாற்றி மலையகத்திலேயே இரண்டாவது பெரிய தொழிற் சங்கம் எனும் அளவுக்கு இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தை வளர்த்ததில் பெரும் பங்கு வி. புத்திரசிகாமணிக்கு உண்டு எனலாம்.

ஜே. ஆர். ஜெயவர்த்தன, காமினி திஸாநாயக்க, பிரேமதாச ஆகிய மூத்த தலைவர்கள் மத்தியில் பாராட்டுகளையும் நன் மதிப்பையும் பெற்ற புத்திரசிகாமணி ஐ.தே. கட்சியின் அதி உயர் பீடமான நிர்வாகக் குழுவின் ஒரே ஒரு இளம் மலையகப் பிரதிநிதியாகவும் தெரிவு செய்யப்பட்டவர்.

''தலைவர்களின் மறைவுக்குப் பின் கட்சியிலும், தொழிற் சங்கத்திலும் இந்திய வம்சாவளியினர் படிப்படியாக ஓரம் கட்டப்பட்டனர்.

''இந்திய வம்சாவளி தொழிலாளர்களின் சந்தாப் பணம் லட்சம் லட்சமாக இவர்களுக்குத் தேவை. ஆனால் இந்திய வம்சாவளித் தலைவர்கள் மட்டும் உருவாகக் கூடாது.

''இதுவே இன்று ஐ.தே.கட்சியினதும் அதன் கட்டுப்பாட்டில் உள்ள இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தினதும் தலைமை பீடங்களின் ஒரே லட்சியம்'' என்கிறார் வி.புத்திரசிகாமணி.

''மத்திய மாகாணத்தில் நானும் ஊவா மாகாணத்தில் கே.வேலாயுதமும் கட்சியின் வளர்ச்சிக்காக பெரும் பங்காற்றியவர்கள். எங்களையே கட்சியின் தலைமைப் பீடம் உதாசீனப்படுத்துகின்றது. இந்த நிலையில் எங்களை நம்பி உள்ள மலையக தொழிலாளர்களுக்கு எப்படி பாதுகாப்பளிப்பார்கள் என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது.

''கைகள் கட்டப்பட்ட நிலையில் கூண்டுக்குள் இருப்பதைவிட, கட்டவிழ்த்துக் கொண்டு சுதந்திரமாக செயல்படவே விரும்புகின்றேன். கட்சிக்குள் ஓரம் கட்டப்பட்டு வரும் இந்திய வம்சாவளி மக்களின் அதிருப்தியை வெளிப்படுத்தும் நோக்குடனேயே கட்சியை விட்டு வெளியேறினேன்'' இப்படி வி. புத்திரசிகாமணி குறிப்பிட்டார்.

''அதே வேளை இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்திற்குப் பல கோடி ரூபாய் பெறுமதியான சொத்துகள் உண்டு. பல கோடி ரூபாய்கள் வங்கிக் கணக்கில் இருக்கின்றன. ஆனால் எவரும் கணக்கு கட்கக் கூடாது. துடிப்பானவர்கள் கணக்குக் கேட்டால் அடியாட்களை வைத்து மிரட்டுவர்.

''தொழிற் சங்கத்தின் தலைவராகவோ பொதுச் செயலாளராகவோ ஓர் இந்தியத் தமிழர் வந்து விடக் கூடாது என்ற ஒரே காரணத்தால் சங்கத்தின் வருடாந்த மாநாடுகளும், பொதுக்குழு தெரிவும் திட்டமிட்டே பின் போடப்பட்டு வருகின்றன'' என்றும் அவர் கூறினார். தனது அரசியல் பயணத்தை நாம் பின் போட முடியாது என்றும் அவர் சொன்னார்.

# டேஸ்ட் கடை தணிகாசலம்

தணிகாசலம் கடை வாசலில் அன்றைய பேப்பரை வாசித்துக் கொண்டிருந்தார். அவ்வழியே சிலர் கூட்டமாகப் போய்க் கொண்டிருந்தனர். அவர்களுள் நால்வர் தணிகாசலத்தின் கடைப்பக்கம் வந்தனர்.

''என்னங்க தணி அண்ணே இன்னைக்கு நேரத்தோட கடையை மூடிட்டீங்க?''

''யாரு நடேசன் தலைவரா! இப்ப ஒங்க காட்டுல மழை பெய்யுது. எலக்‌ஷன் காரனுங்க அடிக்கடி வந்து போறாங்க கையிலயும் நாலு காசு புழங்குது''

''அப்புடி நீங்க பிரிச்சி பேசக் கூடாது தணி அண்ணே நாம எல்லாம் ஒன்னா இருக்கனும்''

''இப்ப தானே பார்த்தேன் நம்ப சிவசாமி தலைவரும் கூட வந்ததை''

''சிவசாமி மட்டும் இல்லீங்க, கருப்பையா தலைவர், முத்துராமன் தலைவர் எல்லாருமே சேர்ந்து வந்திருக்காங்க''



''ரொம்ப சந்தோஷம் இப்படி எல்லாரும் ஒன்னா இருந்தாத் தானே நமக்கு வேணுங்கிறதை கேட்டு பெத்துக்க முடியும். அது சரி நேத்து வரைக்கும் ஒங்க கூடவே சுத்திக் கிட்டிருந்த அப்பாவு தலைவர எங்க காணம்''

''அப்படி ஒன்னும் இல்லீங்க தணி அண்ணே, அப்பாவு தலைவருக்கு மனசில தான் கொஞ்சம் சங்கடம். இந்த தோட்டத்துல மொத்தம் 2000 பேர் இருக்கோம். அதுலயும் ஐஞ்சி கச்சி பெரிய தலைவருங்க ஏட்டிக்கு போட்டியா இருந்தாலும் நாங்க ஒன்னாத்தான் இருக்கோம். ஒரு போத்தல் தண்ணி எடுத்தாலும் ஐஞ்சி கிலாசுக்கு ஊர்த்தித்தான் அடிப்போம். எந்தப் பிரச்சினை வந்தாலும் ஐஞ்சி பேரும் ஒன்னாப் பேசி தான் முடிவு எடுப்போம்''

''என்னப்பா இது ஒரே தோட்டத்துல ஒன்னா இருக்கீங்க. பெரிய தலைவர் மாருங்க எல்லாம் ஒன்னா சேந்திட்டாங் கனு பட்டாசு போட்டு சந்தோஷம் கொண்டாடினீங்க. இப்ப என்னா திடீன்னு மனசங்கடம்''

''அன்னக்கி ரேடியோவுல தலைவர் மாருங்க ஒன்று சோத்துட்டாங்கனு சொன்னதும் மொதல்ல வெடி கொளுத்தியதே அப்பாவு தலைவர்தானே''

''ஆமாம் தணி அண்ணே! நேத்து திடீர்னு அப்பாவு தலைவரோட கச்சிக்காரவுங்க மறுபக்கம் போயிட்டாங்கலாம். அதுனால இப்ப கூட, இருக்கவுங்க கூட சேர்ந்து வேலை செய்ய வேண்டாம்னு கடுதாசி வந்திருக்கு. இன்னொரு சங்கதி தெரியுங்களா நேத்து ராத்திரி மட்டும் டிக்கட் கேட்டு கச்சி தலைவர் கிட்ட பேசிக் கிட்டு இருந்தாங்க. இப்ப டிக்கட் கெடைக்கலன்னு புட்டுக் கிட்டாங்க''

''இந்த பேப்ரலயும் இவுங்கலப் பற்றித்தான் கிழி கிழின்னு கிழிச்சிருக்காங்க அதைதான் இன்ட்ரஸ்ட்டா பாத்துக்கிட்டிருந்தேன்''

''இவங்களோட நாத்தம் பேப்பர்லயும் வந்திருச்சிங்களா?''

நீங்க ஒன்னாத் தானே இருந்தீங்க. ஒன்னா வேலை செஞ்சீங்க ஒங்க மத்தியில எந்த சண்டையும் இல்லை தானே?''

''என்ன தணி அண்ணே அப்பாவு தலைவர் வீட்டில இருந்துதான் வாரம். அந்த மவராசி கொடுத்த பால் தேத்தண்ணியையும் வாய் நெறைய போட்ட வெத்திலையையும் மறக்க முடியுங்களா''

''நீங்க சொல்றத பார்த்தா ஒங்க ஐஞ்சி தலைவர் மாருக்குள்ளயும் எந்த குரோதமும் இல்ல. ஆளுநங்களும் ஒத்துமையா இருக்காங்க. எல்லா வேலையும் ஒழுங்கா நடக்குது''

''ஆமாங்க தணி அண்ணே, நாங்க ஒன்னாத்தான் இருக்கோம், ஒன்னாத்தான் இருப்போம். இதுல சந்தேகமே இல்ல. மேலே உள்ள தலைவர் மாருங்க ஒங்கல காட்டி யாவாரம் பன்னுராங்க. அவுங்களுக்கு எம்.பி. சீட்வேனும் மந்திரி பதவி வேனும். இது எல்லாம் கிடைச்சா ஒன்றுபடுவோம், வென்று வருவோம் என்று கோஷம் போடுவாங்க. நாங்களும் சேர்ந்து தலவர் வாழ்க, சங்கம் வாழ்கவென்று சத்தம் போட்டு கொடி புடிச்சி ஆட்டம் போடுவம்''

''கடைசியா தலைவரும் சங்கமும் வளரும் நாங்க மம்பட்டியா தேஞ்சது தான் மிச்சம்''

''இப்பவாவது ஒங்களுக்கு உண்மை தெரிஞ்சு வெவரம் புரிஞ்சு போச்சி இல்லையா?''

இப்படி நடேசன் தலைவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அங்கு வந்து விட்டார் அப்பாவு தலைவரும்.

''தணி அண்ணே இந்த நாலு தலைவர் மாரும் வந்து பேசினாங்க. அது எனக்கு சந்தோஷம். பெரிய தலவருங்க நாற்காலிக்காக சண்டை போட்டாலும், பதவிக்காக போட்டி போட்டாலும் நாங்க பிரிய போவதில்லை. இது தான் என்னோட முடிவு இப்படி அழுத்தம் திருத்தமாக கூறினார் அப்பாவு தலைவர்''

ரொம்ப ரொம்ப சந்தோஷம் கரும்பு கட்டோட இருந்தா எறும்புக்கு என்ன வேலை. நாம ஏற்கனவே சேர்ந்து பேசி முடிவு செஞ்ச மாதிரி எல்லாரும் ஒட்டு மொத்தமா ஒரே கச்சிக்கு ஓட்டு போடுவோம். நமக்கு சேவை செய்றவுங்கள தெரிவு செய்வோம்''

''ஆமாங்க அண்ணே நீங்க சொல்றதுதான் சரி. நேரமும் ஆகிவிட்டது. சொன்னபடியே செய்வோம்'' எனக் கூறி கிளம்பிவிட்டார்கள் ஐந்து தலைவர்மாரும்.

இவர்கள் ஐந்து பேரும் ஒத்துமையாகப் போவதைப் பார்த்த தணிகாசலம் கண்களைத் துடைத்துக்கொண்டார்.

— இராசிகா

# மலையகத்தின் பாதுகாப்பை இளைஞர் ஏற்கவேண்டும்?

மலையக தமிழ்கட்சிகளைக் கொச்சைப்படுத்தும் ஜே.வி.பி இன வாதத்தை தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்க முனைகின்றது. எனவே மலையக மக்கள் வதந்திகளுக்கு செவிசாய்க்காமல் நிதானத்துடன் செயல்பட வேண்டும். நமது பாதுகாப்பை நாமே உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

''ஆரம்ப காலம் முதலே படுகொலை கலாசாரத்தையும் தீவிர இந்திய விரோதப் போக்கையும் தமிழர்களுக்கு எதையுமே கொடுக்கக் கூடாது என்ற லட்சியத்தையுமே நோக்காகக் கொண்டது ஜே.வி.பி.

''இன்று சில தமிழர்களையும் முஸ்லிம்களையும் வாடகைக்கு அமர்த்திக்கொண்டு வடக்கு கிழக்கு தமிழ் கட்சிகளையும் மலையக தமிழ் அமைப்புகளையும் இழிவு படுத்துகின்றனர்.

''வெட்கம் கெட்ட இந்த சிறுபான்மை இனத்துரோகிகள் வாய்மூடி வாழா வெட்டிகளாக கைகட்டி நிற்கின்றனர். காரணம் இவர்கள் வெறும் கைக் கூலிகள் மட்டுமே. இவர்களுக்கு இன உணர்வு இல்லை. ரோஷமும் இல்லை'' எனவும் சந்திரசேகரன் சாடியுள்ளார்.

''ஜே.வி.பியினரின் கடந்த கால தேர்தல் வரலாற்றை எடுத்துப்பார்த்தால் இவர்கள் மலையகத்தில் முற்றாகவே நிராகரிக்கப் பட்டவர்கள் என்பது புரியும். ஜே.வி.பிக்கு நிரந்தரமான ஒரு கொள்கை இல்லை. ஜனாதிபதி சந்திரிக்கா தான் நேர்மையான ஒரே தலைவி என தலையில் தூக்கிக் கொண்டு ஆடினார்கள். ஐ.தே.க ஊழல் நிறைந்தது என்று வசை பாடினார்கள்.

''இவர்களுடைய ஒருவருட தகுதி காண் ஆட்சி ஒரே மாதத்தில் கவிழ்ந்தது இவர்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி விட்டது. இப்பொழுது பாட்டை மாற்றிக் கொண்டனர்.

''ஏழு வருடங்கள் அராஜகம் நடத்திய ஜனாதிபதியை தோற்கடிப்போம். ஐ.தே.க வை விரட்டி அடிப்போம் என காட்டுக் கூச்சல் போடுகின்றனர்.

''வடக்கு — கிழக்கில் தமிழ்க் கட்சிகள் இணைந்து விட்டன. அதே போன்று கொழும்பிலும் மலையகத்திலும் தமிழர்கள் ஒரே குடையின் கீழ் கூடி விட்டனர்.

''தமிழ் அமைப்புகளின் ஐக்கியம் இந்த இனவாத கட்சிகளுக்கு வயிற்றெரிச்சலை ஏற்படுத்தி விட்டது.

''வடக்கு — கிழக்கு வாழ் தமிழர்களைப் புலிகள் என்கின்றனர். மலையகத்தவர்களைப் பிச்சைக்காரர்கள் என்கிறார்கள். முஸ்லிம்களைப் பச்சோந்திகள் என்கின்றனர். இவர்களுடைய தலைமையில் நம்மவர்கள் சிலரும் தலையாட்டிப் பொம்மை களாக இருப்பது தான் வேதனைக்குரியது.

''வடக்கு — கிழக்கில் வாலாட்ட முடியாது என்பதை அறிந்து கொண்ட ஜே.வி.பியினர் இப்பொழுது மலையகம் நோக்கி காயை நகர்த்துகின்றனர். தவறான வதந்திகளை தீவிரமாகப் பரப்புவதில் அவர்கள் கை தேர்ந்தவர்கள்.

''அவர்களுடைய தவறான பிரசாரங்களுக்கும் வதந்திகளுக்கும் இடமளிக்கக் கூடாது. பேரினவாதம் பேசுபவர்கள் கூட இப்பொழுது மலையகத்தில் தளம் அமைக்க முனைகின்றனர். அவர்களுக்கு மலையகத்தவர்கள் மீது அக்கறை இல்லை. அவர்களின் வாக்கு சீட்டில் தான் ஆர்வமும் ஆசையும். தற்காலிக கூடாரம் அடித்துள்ள இப்பேரினவாதிகளை இனம் கண்டு மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

''அரசாங்கமோ பொலிஸாரோ நமக்குப் பூரண பாதுகாப்பை அளிப்பார்கள் என்று எதிர் பார்க்க முடியாது. எனவே தோட்டங்கள் தோறும் நமது இளைஞர்கள் பாதுகாப்பு குழுக்களையும், அவதானிப்புக் குழுக்களையும் அமைத்து தோட்டங்களில் அமைதி காக்க வேண்டும். நமது பாதுகாப்பை நாமே உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்'' என்றும் சந்திரசேகரன் கூறினார்.

மலையக இளைஞர் யுவதிகள் அனைத்து தொழிற்சங்கங்களையும் பிரதிநிதித்து வப்படுத்தும் மூத்த உறுப்பினர்களையும் இணைத்து தோட்டங்கள் தோறும் விழிப்புக் குழுக்களை அமைத்து செயல்பட வேண்டும். இந்த விழிப்புக் குழுக்கள் தேர்தல்களோடு ஓய்ந்து விடக் கூடாது. அவை நிரந்தரமானவையாக இருக்க வேண்டும். இதன் மூலம் மலையகத்தில் ஐக்கியத்தையும் அமைதியும் நிரந்தரமாக்கிக் கொள்ள முடியும் என்றும் அவர் சொன்னார்.

# திணறடிக்கும் வேட்பாளர்கள் திக்குமுக்காடும் வாக்காளர்கள்

## மலையகத்தில் இம்முறை ஏட்டிக்குப் போட்டியாக கட்சித் தாவல்கள்


செல்லச்சாமி

இலங்கைச் சரித்திரத்தில் 12 ஆவது நாடாளுமன்றத்துக்கான தேர்தல் வரலாற்று முக்கியத்துவம் பெற்று விட்டது.

பதவிப் பறிப்புகள், பதவி இறக்கங்கள், கட்சித் தாவல்கள் என்பன என்றுமே இல்லாதவாறு இடம் பெற்றுள்ளன.


இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல் பல்வேறு தேர்தல் கூட்டணிகள் சமுதாய ரீதியாகவும் வர்க்க ரீதியாகவும் உருவெடுத்துள்ளன.

நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு வடக்கு, கிழக்கிலும் கொழும்பிலும் போட்டியிடுகிறது. அதே போன்று மலையகத்திலும் ஒரு பலமான கூட்டமைப்பு உருவாகி இருக்கிறது.


யோகராஜன்

மலையகக் கட்சிகளின் கூட்டமைப்பு ஒட்டு மொத்தமாக எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு பக்கபலமாக இருக்கின்றது. நான்கு தமிழ்க்கட்சிகள் கூட்டமைப்பின் ஆதரவு நிச்சயமாக பொதுஜன ஐக்கிய முன்னணிக்குக் கிடையாது. எதிர்வரும் தேர்தலிலும் சிறுபான்மைக் கட்சிகளே ஆட்சியை நிர்ணயிக்கப் போகின்றன.

இதனால் தான் வடக்கு—கிழக்கு தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பும் மலையகக் கூட்டமைப்பும் பெரும்பான்மை இனக் கட்சிகளுக்கும், இனவாத கட்சிகளுக்கும் வயிற்றெரிச்சலைக் கிளப்பிவிட்டுள்ளன.


ராஜன்

சிறுபான்மைக் கட்சிகளின் கூட்டமைப்பை முறிக்க பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டது அரசாங்கம். மலையகத்தைப் பொறுத்த வரையில் கட்சித் தாவல்களினால் மலையகக் கூட்டணியில் சலசலப்பு ஏற்பட்டுள்ளது. கட்சித்தாவல்கள் மலையக வாக்காளர்களைப் பெருமளவு குழப்பி விட்டுள்ளன.

எதிர்வரும் தேர்தலில் வடக்கு—கிழக்கு மாகாணம், மேல்மாகாணம், மத்திய மாகாணம் என்பனவற்றிலேயே எல்லா அரசியல்வாதிகளும் குறிவைத்துள்ளனர்.


ஆறுமுகம்

வடக்கு கிழக்கிலும் கொழும்பிலும் தமிழர் விடுதலை கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ. (சுரேஷ் அணி) ஆகியன கூட்டாக உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுகின்றன.

கொழும்பிலும் மலையகத்திலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தேசிய தொழிலாயர் காங்கிரஸ் என்பன கூட்டமைப்பை ஏற்படுத்தி உள்ளன.

கொழும்பில் ஐ.தே.க. சார்பில் இராமையா யோகராஜன். எம்.எஸ். செல்லச்சாமி, மனோ கணேசன் ஆகிய மூவரும் போட்டியிடுகின்றனர். மனோ கணேசன் ஜன நாயக தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்தவர்.

கொழும்பில் ஒரு லட்சத்து 35 ஆயிரம் தமிழ் வாக்காளர்கள் இருக்கின்றனர்.



இங்கு வாழும் தமிழர்கள் அனைவரும் இன உணர்வுடனும் சமுதாயப்பற்றுடனும் சிந்தித்து தமது வாக்குகளைப் பயன்படுத்தினால் கொழும்பு மாவட்டத்தில் மூன்று தமிழ் எம்.பிக்கள் தெரிவாவது உறுதி. எனவே கொழும்பு வாழ் தமிழர்கள் மிகவும் நிதானத்துடன் செயல்பட வேண்டும்.

அடுத்ததாக எல்லோருடைய கவனத்தையும் ஈர்ப்பது மத்திய மாகாணம். குறிப்பாக நுவரெலியா மாவட்டம்.

இம்மாவட்டத்தில் மலையகத் தமிழ் கூட்டமைப்பை பலமிழக்கச் செய்ய அரசாங்கம் பல்வேறு யுக்திகளையும் கையாண்டிருக்கிறது. கூட்டமைப்புக் கட்சிகளின் அதிருப்தியாளர்களுக்கு அரசு வலை விரித்தது. அவர்களும் கூட இலேசில் மசியவில்லை. கடைசிவரை ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் இடம் பிடிக்கவே முயன்றனர். எனினும் இடம் கிடைக்கவில்லை. தருணம் பார்த்திருந்து இவர்களை பொது ஜனஐக்கிய முன்னணி தன் வசம் இழுத்துக் கொண்டது.

இ.தொ.கா அதிருப்தியாளர்களான எஸ்.சதாசிவம், இராஜரட்ணம், தேவராஜ், ஏ.எம்.ராஜன், சென்னன் ஆகியோரும் மலையக மக்கள் முன்னணி அதிருப்த்தியாளரான கணபதி கனகராஜ் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் அதிருப்தியாளரான வீரையா புத்திரசிகாமணி ஆகியோரும் அரசு பக்கம் தாவி விட்டனர். நேற்று வரை ஜனாதிபதியை விமர்சனம் செய்தவர்கள் இப்பொழுது புகழ்பாட ஆரம்பித்து விட்டனர்.

ஐ.தே.க. பட்டியலில் கண்டியில் டி. மதியுகராஜா, மாத்தளை மாவட்டத்தில் மாததளை வடிவேலன், இரத்தினபுரியில் கணபதி இராமச்சந்திரன், பதுளையில், சச்சிதானந்தன், கே. வேலாயுதம். நுவரெலியா மாவட்டத்தில் ஆறுமுகம் தொண்டமான், பெரியசாமி சந்திரசேகரன், முத்து சிவலிங்கம், எம். உலகராஜ், ரவீந்திரன் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.


இவர்களுக்குப் போட்டியாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாற்காலி சின்னத்தில், நுவரெலியாவில் கணபதி கனகராஜ், சுப்பையா ராஜரட்ணம், வீரையா புத்திர சிகாமணி, கணபதிப்பிள்ளை ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

கண்டியில் இராஜரட்ணம் போட்டியிடுகிறார். இரத்தினபுரியில் இராஜன் போட்டியிடுகின்றார்.

இவர்களின் தலைவரான சென்னன் பதுளையில் தனியாக ஒரு குழுவை அமைத்து சுயேச்சையாகப் போட்டியிடுகின்றார். உப தலைவர் தேவராஜ் ஒதுங்கிக் கொண்டார். இவர் தொடர்ந்தும் ஐ.தே.கவை ஆதரிக்கின்றார். சதாசிவம் தேசியபட்டியலில் இடம் பெறுகின்றார்.

மூன்றாவது அணியாக நுவரெலியா மாவட்டத்தில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் அரசியல் கட்சியான தேசிய ஜனநாயகக் கட்சி அதன் பொதுச் செயலாளர் எஸ்.ஏ.கந்தசாமி நாயுடு தலைமையில் தனித்துப் போட்டியிடுகின்றது. இவர்கள் ஆரம்பம் முதலே ஆறுமுகம், சந்திரசேகரன் அணியுடனோ, ஐ.தே.க வுடனோ இணையப் போவதில்லை என்று திட்ட வட்டமாக அறிவித்தவர்கள்.

இப்பொழுது அத்தனை தமிழ் வேட்பாளர்களும் மலையகத்தில் தேர்தல் களம் இறங்கி விட்டனர். இவர்கள் வாக்கு வேட்டை ஆடுகின்றனரா? அல்லது இந்திய வம்சாவளி தமிழர்களின் வாக்குகளை பிரித்து சிதைத்து தமது இனத்தையே வேட்டையாடப் போகின்றனரா? பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.


சந்திரசேகரன்

இந்த மலையகத் தமிழ் வேட்பாளர்கள் மலையக வாக்காளர்களை திணறடிக்கின்றனர். வாக்காளர்களோ திக்கு முக்காடிப் போய் இருக்கின்றனர். யாரை ஆதரிப்பது, யாருக்கு வாக்களிப்பது என்று தெரியாது தடுமாற்றம் அடைந்துள்ளனர்.

குடிசன மதிப்பீட்டு திணைக்கள விவரப்படி நுவரெலியா மாவட்ட சனத்தொகையில் 51 சதவீதமானவர்கள் தமிழர்கள். பெரும்பான்மை வாக்குகளை உடையவர்களும் தமிழர்களே. இவ்வளவு பலத்தையும் தம் கைகளில் வைத்துக் கொண்டு சுயநலவாதிகளின் சூழ்ச்சியால் சின்னாபின்னப்பட வேண்டுமா?


மனோ கணேசன்

நுவரெலியா மாவட்டத்தில் வாழும் தமிழ் வாக்காளர் இன உணர்வுடனும் சமுதாயப் பற்றுடனும் ஐக்கியப்பட்டு வாக்களித்தால் இங்கிருந்து ஐந்து பிரதிநிதிகளை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப முடியும்.

இதே போன்று கொழும்பில் இருவரையும், பதுளையில் இருவரையும், இரத்தினபுரி, கண்டி, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவரையும் தெரிவு செய்ய முடியும்.


சதாசிவம்

அதற்கான வாக்குப் பலத்தை மலையக மக்கள் தம்வசம் வைத்துள்ளனர். எனவே தமிழ் வாக்காளர்கள் சிந்தித்து செயல்பட்டால் அதுவே நம் விடிவுக்கு வழி.

# கொட்டும் மழையிலும் குடி தண்ணீர் இல்லை

மலையகத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது. எனினும் குடி தண்ணீர் தட்டுப்பாடு நீடித்து வருவது வேடிக்கையாக இருக்கிறது. மாவுசாகல நீர்த்தேக்கம் அமைந்துள்ள பிரதேசத்தில் கடந்த ஒரு மாத கால மாக கடும் மழை பெய்கிறது. இதனால் மாவுசாகல நீர்த்தேக்கம் 90 சதவீதம் நிறைந்துள்ளது.

இதில் ஒரு பகுதியில் இருந்தே மஸ்கெலியா புதிய நகருக்கு நீர் விநியோகிக்கப் படுகிறது. பல கோடி ரூபா செலவில் குடி தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்தில் இருந்து பம்ப் மூலம் நீர் விநியோகம் நடைபெறுகின்றது.

இங்கு இரவு பகலாக மாற்று முறையில் ஊழியர்கள் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர். எனினும் அந்த ஊழியர்களின் அசட்டையால் அடிக்கடி நீர் விநியோகத்தடை ஏற்படுகின்றது.

அண்மையில் பல லட்சம் ரூபா செலவில் புதிய நீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்று பொருத்தப்பட்டது. நீர் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வாரத்தில் மீண்டும் நீர் விநியோகம் தடைப்பட்டது.

காரணம் இங்கு இரவு நேரத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் கடமையை உணர்ந்து செய்வதில்லை.

இயந்திரத்தை இயக்கிவிட்டு தமது சொந்தத் தேவைகளுக்காக நகரத்துக்கு வந்துவிடுகின்றனர். இதனால் தேவைக்கும் மேலாக (Over heat) இயந்திரம் சூடாகி பழுதடைந்துவிட்டது.

மீண்டும் இந்த இயந்திரத்தைத் திருத்தி அமைக்க ஒன்றரை லட்சம் ரூபா தேவைப்படுவதாக நிலைய பொறியிலாளர்கள் கூறுகின்றனர்.



"என்னாங்க ஐயா, போன முறை தேர்தல் வந்தபோது இந்த சின்னத்துக்கு போடச் சொன்னீங்க..... இந்த முறை வந்து வேறொரு சின்னத்துக்கு போடச் சொல்றீங்க.... அப்போ..... அடுத்த முறை.....?"

# வன்முறைகள் ஓய்ந்தாலும் வடுக்கள் மாறவில்லை



1998 ஆம் ஆண்டு இரத்தினபுரி வேவல்வத்தை தோட்டம் இன விரோதிகளால் அழித்தொழிக்கப்பட்டது. வீடுகள், கடைகள், சிறுவர் பராமரிப்பு நிலையம் என்பவற்றை அவர்கள் தீ வைத்துக் கொளுத்தினர். அத்துடன் தோட்டப்பிள்ளைகள் படித்துக் கொண்டிருந்த தமிழ் பாடசாலையையும் தீ வைத்து நாசப்படுத்தினர்.

இதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு முன்னாள் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் முயற்சியால் புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. ஆறுமுகம் தொண்டமானும் ஏ.எம். டி. இராஜனும் போட்டி போட்டுக் கொண்டு இந்த வீடுகளைக் கையளித்தனர்.

நாசமாக்கப்பட்ட தமிழ் பாடசாலையை மீளமைக்க ஆறுமுகம் தொண்டமான் சில லட்சம் ரூபாய்களை ஒதுக்கினார்.

சப்ரகமுவ மாகாணசபையின் பிரதித் தலைவர் கணபதி இராமச்சந்திரன் 1998 ஆம் ஆண்டு பாடசாலைக் கட்டடத்துக்கான அடிக்கலையும் நட்டார்.

ஆனால் இன்று வரை கட்டடம் கட்டப்படவில்லை. இதனால் இப்பாடசாலையில் கல்வி கற்கும் 150 மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வன்முறைகள் ஓய்ந்து விட்டாலும் அதன் வடுக்கள் மாறவில்லை என பெற்றோரும் மாணவரும் கவலை தெரிவிக்கின்றனர்.

இரத்தினபுரி நிருபர்

# சட்டிக்குத் தப்பி நெருப்பில் வீழ்ந்த கதை மறுமுறையும் வேண்டுமா?

''வல்லவன் வகுத்ததே சட்டம் என்று ஆகிப் போச்சு, வல்லவனுக்கு வால் பிடிச்சு வாழ்ந்தால் போதும், அநீதி நடந்தாலும் கண்மூடிக் கொள்வோம் என்று தான் கனபேர் நினைக்கினம்'' அரட்டையை ஆரம்பித்தார் விநாசியர்.

''அண்ணை, சொல்வதை விளங்கச் சொல்லுங்கோ. பேரினவாதக் கட்சிகள் தமிழர் தீர்வுக்கு வழி சொல்வதைப் போல், அடியும் புரியாமல், தலையும் புரியாமல் கதைக்காதையுங்கோ'' சீண்டினான் டானியல்.

''வேறு ஏதாவது ஒரு நாடு செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் பண்டசாலை மீது தாக்குதல் நடத்தியிருந்தால் அமெரிக்கா என்ன குதி குதிச்சிருக்கும்? ஆனால் ஆப்கானிஸ்தானில் இருந்த செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவின் பண்டசாலை மீது, செஞ்சிலுவைச் சின்னம் துலாம்பரமாகத் தெரியும்படி பொறிக்கப்பட்டிருந்தும், அதன் மீது குண்டு வீசி தாக்கிவிட்டு, 'தவறுதலாக நடந்தது' என்று அமெரிக்கா சர்வ சாதாரணமாக கூறியுள்ளது.

''சர்வதேச சமூகமும், ஏன் ஐ.நாவும் கூட அதனை ஏற்றுக் கொண்டு, விஷயத்தை பெரிதுபடுத்தாமல் விட்டு விட்டது. ஆக அதிகாரத்தரப்பு எது செய்தாலும் சரி, தட்டிக் கேட்க ஆளில்லை என்ற நிலையை மாற்றினாலேயே, பயங்கரவாதத்தை ஒழித்ததாக உண்மையான அர்த்தமாகும்'' கூறி முடித்தார் விநாசியர்.

''நானும் அண்ணை தொடங்கின கதையைப் பார்த்து உள்ளூர் விஷயமாக்கும் என்று நினைத்தனான். அது வெளிநாட்டு விஷயமாகிப் போச்சுது'' என்று உசுப்பினான் லோகன்.

''ஏன் உள்நாட்டிலேயும் இதே கதை தான் நடக்குது. தங்களை ஏதோ தர்ம தேவதையாக சித்தரித்து, அனைவருக்கும் சம உரிமை தந்து, தாயாகக் காப்பேன் என்று சத்தியம் செய்தவை பிறகு பேயாக மாறி எங்கடை இரத்தத்தைக குடித்ததும்,

''ஆனால் அதைப் பெரிதுபடுத்தாமல், அவை செய்கிறதெல்லாம் சரி என்று புளுகவும் இனியும் அவை எங்களுக்கு நல்லது செய்வினம் என்று நம்பச் சொல்லவும் தலைவர்கள் இருக்கும்போது, அமெரிக்காவுக்கு அடிபணியும் நாடுகள் இருப்பது ஆச்சரியமில்லையே'' வழக்கத்துக்கு விரோதமாக உணர்ச்சியுடனும், துணிவுடனும் பேசினார் மாஸ்டர்.



## தேரடி அரட்டை

''ஒரு மாதிரி மாஸ்டருக்கும் நீதி, நியாயத்தை எடுத்துச் சொல்லும் துணிவு வந்திட்டுது போல'' பாராட்டினாள் சின்னாச்சி.

''ஏன் வீண் பிரச்சினை என்று சில விஷயங்களைக் கதைக்கிறதற்கு தயங்கினது உண்மைதான் சின்னாச்சி, ஆனால் இந்தத் தேர்தலிலும் 'பெண்ணென்றால் பேயும் இரங்கும் என்று பழம்பஞ்சாங்கம் படித்துக் கொண்டு இருந்தால் மிச்சம் மீதி இருக்கிற இலங்கைத் தமிழரும் அவலச்சாவடைந்து பேயாக அலைய வேண்டிவரும் என்று உணர்ந்திட்டன்.'' தன்னிலை விளக்கமளித்தார் மாஸ்டர்.

''மாஸ்டருக்கு இந்த உணர்வு தொடர்ந்தால் நல்லது. வேதாளம் திருப்பியும் முருங்கை மரத்தில் ஏறாமல் இருந்தால் சரி'' மாஸ்டரின் மனமாற்றத்தில் நம்பிக்கையின்றி சொன்னாள் சின்னாச்சி.

''கிழவியிடம் நம்பிக்கையைப் பெறுவதென்பது கஷ்டமான காரியம் தான்'' சிலாகித்தார் விநாசியர்.

''கூட்டிக் கழிச்சுப் பார்த்தால், நாட்டிலை எங்களை விற்றுப்பிழைப்பு நடத்தின கன பேருக்கு, எங்கடை பிள்ளைகள் செத்துக் கொண்டிருந்தாலும் காட்டுக்குள்ளை மழையிலும், வெய்யிலிலும் எங்களுக்காக உயிரைக் கொடுக்கிறவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாலும் கவலை இல்லை. தாங்கள் சொகுசுடன், உயிராபத்து என்ற சாட்டை வைத்து கட்டுக்காவலுடன் தேர்தல் குதிரைகளில் ஏறி நாடாளுமன்றக் கோட்டையை பிடித்தால் போதும் என்று தான் நினைக்கினம்.''

''போராட்டம் முடிவுக்கு வரக்கூடாது என்பதில் இரு இனத்தையும் சேர்ந்த வாக்குப் பொறுக்கிகள் அக்கறையாகத்தான் இருக்கினம்'' அனைவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்த, மாஸ்டர் இப்படிக் கூறினார்.

''அரசியல்வாதிகள் மட்டுமில்லை மாஸ்டர், உயர் பதவிகளிலை இருக்கிற அதிகாரிகள் சிலரும், போராட்டம் முடிவுக்கு வந்தால் சட்டம், விதிகள் போன்ற எல்லாம் கடுமையாக நடைமுறைக்கு வந்து விடும், இப்போது போல தங்கள் இஷ்டப்படி ஆட்டம் போட முடியாது. என்று தானே நினைக்கினம்'' தெரிந்ததைச் சொன்னான் லோகன்.

''எல்லாவற்றையும் கேட்டால் யாரை நம்பி வாக்குப் போடுவது என்று விளங்கவில்லை'' குழம்பினார் விநாசியர்.

''இதிலை குழம்பிறதுக்கு ஒன்றுமில்லை அண்ணை, முதலில் யாருக்குப் பின்னாலை நின்றால், நிரந்தரமாக உரிமைகள் பெற்று தன்மானத்துடன், தலைநிமிர்ந்து வாழும் பொற்காலம் தமிழர்களுக்கு கிடைக்குமோ அவர்களுக்குப் பின்னால் மனதால் ஒன்றுபட்டு நின்றால் போதும்.

''அதற்கிடையில் இடையிடையே வந்து போகும் தேர்தல் பூச்சாண்டிகளில், எங்களுக்காகப் போராடுபவர்களை யார் ஆதரிக்கினமோ, அவைக்கு முத்திரை குத்தி விடுவம். அவை கோட்டையில போய் கதைக்கினமோ இல்லாட்டி நித்திரை கொள்ளுவினமோ எங்களுக்கென்ன கவலை? இவை போய் கதைச்ச உடனை எங்கடை உரிமைகளை அவை தரப் போவதில்லை.

''குறைந்தது, அடக்கி ஆள்பவர்களுக்கு எதிராக தமிழர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்திருக்கினம் என்று வெளிநாடுகளுக்காவது காட்டலாம்'' ஆலோசனையாக தனது கருத்தை முன்வைத்தான் லோகன்.

''லோகன் சொல்லுவதும் சரிதான் அதேநேரம், அவையிலை யார் வந்தாலும் எங்களுக்கு பாலும் தேனுமாகச் சொரியப் போவதில்லை என்று தான் நினைக்கிறன். ஆனால் அம்மா வரேக்கை இந்தாநான் வந்த உடனே தமிழரின் பிரச்சினையைத் தீர்த்துப் போடுவன் என்று சொன்னவ. அப்ப நாங்களும் அதை நம்பி அவவுக்கு குத்தினம். பிறகு நடந்ததுதான் எல்லோருக்கும் தெரியுமே? கதை கருத்தைச் சொன்னான் டானியல்.

உவை ஒருத்தரையும் நம்பாமல் கடவுளை நம்பினவைக்கும் வாக்குப் போட ஓர் 'ஐடியா' இருக்கு. பேசாமல் எந்தத் தரப்பு வெல்லும் என்று நினைக் கினமோ, 'அவைக்கு குத்துங்கோ' சிரித்த படி சொன்னாள் சின்னாச்சி.

'அது எப்படி சின்னாச்சி வெல்லுற வையை தீர்மானிக்கிறது?'' கேட்டார் மாஸ்டர்.

'சிரித்தபடியே, தொடர்ந்தாள் சின்னாச்சி.

'ஆமை நுழைந்த வீடு உருப்படாது, என்று பழமொழி இருக்கு. ''அம்மாவின் செத்த வீட்டிலை அக்காவை கட்டிப் பிடிச்சு அழுது போட்டு, இப்ப நம்பினவையை கழுத்தறுத்து அக்காவுடனேயே போன தம்பிமுத்து எங்கடை பக்கம் இருந்தானா.?

''நாங்கள் எதிர்க் கட்சியாக இருக்கும் இப்ப அவா அக்காவிடம் போய்ச் சேர்ந்ததால அவை எதிர்க்கட்சியாகவும் நாங்கள் ஆளும் கட்சியாகவும் வரப்போறம்'' என்ற அய்யா தரப்பு குதூகலிக்குதாம்''

கூறி முடித்த சின்னாச்சி கடலைக் கடையைக் கட்டினாள்.

— ஏகலைவன்

# பித்தன் பதில்கள்

ம. கஜேந்திரன், புதுக்குடியிருப்பு.
கே : கடன் வாங்குபவர்கள் கடனைத் திரும்பித்தர ஏன் தயங்குகின்றார்கள்?
ப : *கடனைத் திருப்பித்தர வேண்டுமென்றால் கடனே வாங்கி இருக்க மாட்டார்களே!*

வனஜா, புத்தளம்.
கே : பெண்களின் ஆயுதம் கண்ணீர், ஆண்களின் ஆயுதம்.
ப : *ஆண்களின் ஆயுதம் கை. வழிகின்ற கண்ணீரை துடைத்து விடுவதற்கு.*



மரியசீலி, குப்புளான்.
கே : பெண்கள் இல்லாத உலகம் எப்படி இருக்கும்.
ப : *காற்று இல்லாத நரகம் போல இருக்கும்.*

ஆதவன், குருமண்காடு.
கே : பித்தா!... காதலிக்காவிட்டால் வாழ்க்கையே இல்லையா?
ப : *தலையைக் கோதிக் கொள்ளாவிட்டால் தலையே இல்லை என்று அர்த்தப்பட்டு விடுமா?*

சுமதி, திருநெல்வேலி.
கே : ஆண் ஆதிக்கம் பெண் ஆதிக்கம் இரண்டுக்கும் இடையில் என்ன வித்தியாசம்?
ப : *தேள் கொட்டுவதற்கும், நாய் கடிப்பதற்கும் இடையில் உள்ள வித்தியாசம்.*

பிரகாஷ், பம்பலப்பிட்டி.
கே : நாகரிகம் என்று தறிகெட்டு அலையும் பெண்களின் முடிவென்ன?
ப : *அவர்களுக்கென்ன? அனாதை மடங்களில் குழந்தைகள் பெருகும்.*

கரன், கொழும்பு.
கே : சகோதரத்துவம் எப்படி இருக்க வேண்டும்.
ப : *தோள் மீது கை போடலாம். ஆனால் அந்தக் கை பைக்குள் போய்விடக் கூடாது.*

வேலன், மட்டக்களப்பு.
கே : திருமணத்துக்கு எப்படிப்பட்ட பெண்ணைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
ப : *அத்திப் பழத்தைப் பிட்டுப் பார்த்தால் அத்தனையும் சொத்தை தான்.*

சண்முகலிங்கம், கொக்குவில்.
கே : கீரியும் பாம்புமாக வாழும் தம்பதிகள் கூட அடுத்த பிறவியிலும் சேர்ந்து வாழ விரும்புகிறார்களே ஏன்?
ப : *சண்டை முடிந்திருக்காது போல...*

செல்வநாயகம், வவுனியா.
கே : மனைவியை முத்தமிடுவதை விட காதலியை முத்தமிடுவது சுகமாக இருக்கிறதே எப்படி?
ப : *திருட்டு மாங்காயின் சுவையே தனிச் சுவை...!*

ஜெயந்தி, மருதனார்மடம்.
கே : முதல் இரவில் கணவனுக்கு பால் கொடுப்பது ஏன்?
ப : *பழகப் பழக பாலும் புளிக்கும் என்பதை நினைவுபடுத்த.*



அருள்நேசன், கண்டி.
கே : பெண்களின் புன்னகைக்கு என்ன பொருள்.
ப : *பால் தேவை என்றால் குழந்தை அழுவதில்லையா?*



ராகவன், களுத்துறை.
கே : அழகு இல்லாத பெண்கள் பற்றி?
ப : *அவர்கள் இனிப்புப் போடாத அல்வா போன்றவர்கள்.*

கோபி, வவுனியா.
கே : கழுத்து நிறைய நகைகள் அணிந்து நள்ளிரவில் ஒரு பெண் தெருவில் நடந்து போகும் காலம் வருமா?
ப : *அந்தக் காலத்துக்காகத்தான் காத்திருக்கிறீரா?*

பிரமிளா, வெள்ளவத்தை.
கே : காதலுக்கு கண் உண்டா?
ப : *நிச்சயமாக உண்டு. ஒருத்தியை அல்லது ஒருவனை காதலிக்கும் போதே இன்னொருத்தி அல்லது இன்னொருவன் மீது கண் எறிகிறார்களே.*

சுமதி, இரத்மலானை.
கே : அழகாக 'டிரஸ்' செய்து கொண்டு செருப்பு இல்லாமல் போகும் பெண்கள் குறித்து?
ப : *கல்யாண வீட்டுக்குப் போகிறவர்களாக இருக்கலாம்.*

வசீகரன், சாவகச்சேரி.
கே : இம்முறை பொதுத் தேர்தலில் பொ.ஐ.முன்னணி, ஐ.தே. கட்சி இரண்டில் எதற்கு வெற்றி கிடைக்கும்.
ப : *அது மக்களின் இதயத்தில் இருக்கும் இடத்தைப் பொறுத்தது.*


பைறோஸ், சாய்ந்த மருது—11.
கே : பித்தா...! ஜோக் ஒன்று சொல்லுங்களேன்.
ப : *சின்னப் பையன் ஒருவன் திண்ணையில் உட்கார்ந்து தேவித் தேவி அழுது கொண்டிருந்தான். அவ்வழியே கிழவர் ஒருவர் வந்தார். "தம்பி ஏன் அழுது கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டார். நான் ரொம்பச் சின்னப் பையனாக இருக்கிறேன். பெரியவர்கள் செய்கிற காரியத்தை என்னால் செய்ய முடியவில்லையே என்று நினைத்தால் அழுகை அழுகையாக வருகிறது என்று சொல்லி மீண்டும் அழத் தொடங்கினான் சிறுவன். கிழவரும் அவன் பக்கத்தில் அமர்ந்து அழ ஆரம்பித்துவிட்டார்.*

சுமித்திரன், மானிப்பாய்.
கே : இம்முறை தேசிய மட்டப் போட்டி களில் வடக்கு கிழக்குப் பாடசாலை களும் திறமை காட்டியுள்ளனவே?
ப : *திறமையானவர்கள் எங்குமிருக்கலாம். அவர்களை ஊக்குவித்து வளர்க்க வேண்டியது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பொறுப்பு.*

முரளி, கல்கிசை.
கே : காதலியை ஹோட்டலுக்கு அழைத்துச் செல்லலாமா?
ப : *செல்லலாம்!... ஹோட்டலில் அறை எடுத்து தங்குவது தான் ஆபத்து.*




ரஜீவன், வத்தளை.
கே : கிரிக்கெட்டில் போன்று அரசியலிலும் வெற்றிகளைக் குவிப்பாரா அர்ஜுன் ரணதுங்க?
ப : *கிரிக்கெட்டில் சாதனை புரிந்த இம்ரான்கான், மனோஜ் பிரபாகர் போன்றோர் அரசியலில் மண்கவ்வினர்? ஆனால் அர்ஜுன் தேர்தல் ஆட்டத்தில் நாயகனாகக் கூடும். ஆனால் அவரது அணி...?*




குமார் தனது பூந்தோட்டத்திற்குப் போகும் பாதையைத் தவறவிட்டு விட்டான். எங்கே நீங்கள் வழி காட்டுங்கள் பார்ப்போம்!





கப்பல்கள் கடலில் இருக்கும் இடத்தை அறிவதற்கு செயற்கைக் கோள்கள் உதவுகின்றன. அமெரிக்க டிரான்சிட் – 1பி செயற்கைக் கோள் இந்த வகையில் முதலாவதாக இருக்கின்றது. உலோகங்களை விண் வெளியில் உருக்குவது, விண்வெளியில் தாவரங்களை வளர்த்துப் பரிசோதிப்பது நுண்ணுயிர்களை வளர்ப்பது போன்ற பரிசோதனைகளுக்கும் செயற்கைக் கோளானது பறக்கும் ஆராய்ச்சிக் கூடமாகச் செயற்படுகின்றது.

## கப்பலைக் கண்காணிப்பதற்கு செயற்கைக் கோள்கள்

## தெரிந்து கொள்ளுங்கள்

1. இந்தியாவின் தேசிய பறவை.
   மயில்.
2. உலகிலே அதிக நூல்களை எழுதியவர்.
   அலெக்சாண்டர்டுமாஸ்.
3. இடைச் சங்க நூலாக இன்று முழுவடிவில் இருக்கும் நூல்? தொல்காப்பியம்.

அ. ரோகிணி, தரம் – 7, வட்டு/ மத்திய கல்லூரி.



ஷர்மிலா

### நாடுகள் பற்றி நாமறிவோம்

- *உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு – இந்தியா.
- *உலகில் மிகப்பெரிய கம்யூனிச நாடு – சீனா.
- *உலகின் மிகப்பெரிய இஸ்லாமிய நாடு – இந்தோனேசியா.
- *உலகில் கூடிய தீவுகள் (7,100 தீவுகள்) உள்ளநாடு – பிலிப்பைன்ஸ்.
- *உலகில் ஒரேயொரு இந்துமத நாடு – நேபாளம்.
- *உலகில் குறைந்த சனத்தொகை கொண்டநாடு – வத்திக்கான்.
- *உலகில் ஆறுகளே இல்லாத நாடு – சவூதி அரேபியா.
- *உலகில் சீனியை அதிகம் உற்பத்தி செய்யும் நாடு – கியூபா.
- *உலகில் செப்பு அதிகமாகக் கிடைக்கும் நாடு – சிலி.
- *உலகில்பெண்களுக்குகட்டாய இராணுவப்பயிற்சி அளிப்பது – இஸ்ரேல்.

விஜயா பிரான்சிஸ், யாழ்/ திருக்குடும்பக் கன்னியர் மடம்.

## சிறுவர் கைவண்ணம்



கோ. கஜேந்திரன், ஆண்டு – 9, கிளி/ பூநகரி மகா வித்தியாலயம், ஜெயபுரம், பூநகரி.

K: கேசராஜன், தரம் 9, திருகோணமலை/ உவர்மலை, விவேகானந்தா கல்லூரி.



### மின்னல் செய்தி

மின்னல் வேகமாகப்பயணம் செய்யும் என்று கேள்விப்பட்டு இருப்பீர்கள். ஆனால் அது எவ்வளவு என்று தெரியுமா? மின்னல் விநாடிக்கு 160 கிலோ மீட்டர் முதல் 1 லட்சத்து 60 ஆயிரம் கிலோ மீட்டர் வரையிலான வேகத்தில் பயணம் செய்கிறது.

### தொகைப் பெயர்கள்

இருசுடர்.........................சூரியன், சந்திரன்
இருகுரவர்.........................தாய், தந்தை
முத்தமிழ்.........................இயல், இசை, நாடகம்
முச்சுடர்.........................சூரியன், சந்திரன், அக்கினி
ஐவகை நிலங்கள்...........குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், பாலை
நால்வகைப்பூ...........................கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ
ஆறறிவு..........பார்வை, கேள்வி, நுகர்தல், சுவைத்தல், தொடுகை, பகுத்தறிதல்
ஆறுகுணம்....ஐஸ்வரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம்.
ஏழுஸ்வரங்கள்...........................ஸ, ரி, க, ம, ப, த, நி
ஏழுமலை..............கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி
எண்டிசை........................ வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு.
நவக்கிரகம்...........................சூரியன், இராகு, கேது, சந்திரன், சனி, சுக்கிரன், செவ்வாய், புதன், வியாழன்.
நவமணி...............கோமேதகம், நீலம், பவளம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைரம், வைடூரியம்.
தசாவதாரம்..............மச்சம் (மீன்), கூர்மம் (ஆமை), வராகம்(பன்றி), நரசிம்மன், வாமனன், பலராமர், பரசுராமர், இராமர், கிருஷ்ணர், கல்கி.

நிகர்சினி— தெய்வேந்திரம், கிளிநொச்சி.

கடற்கரையோரமாக வாழும் மீன்களில் 'சன் பிஷ்' எனப்படும் மீனும் அடங்குகின்றது. இதன் உருவம் மிகப் பெரியது. நீந்தும் போது இதன் பின் பகுதி தெரியாது. இதற்கு விருப்பமான உணவு ஜெல்லிபிஷ். இதன் உடலின் மீது குட்டி உயிரினங்களான லீகல் போன்றவை வசிக்கின்றன.

**

இந்தோனேஷிய நாட்டின் தலைநகர் ஜகார்த்தாவில் இருந்து 40 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள போகர் எனுமிடத்தில் மாநில அரண்மனை ஒன்று உள்ளது. இங்கு முன்பு அதிக அளவில் புள்ளிமான்கள் வசித்து வந்தன. பின்னர் படிப்படியாக அதன் எண்ணிக்கை குறைந்து போனதனால் அரண்மனை அதிகாரிகள் மான்களைப் பாதுகாக்க முடிவெடுத்துள்ளனர்..

### நான்

எனது பெயல் சாந்திராஜ் யோஷிகா. எனது வயது பன்னிரண்டு. நான் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்கின்றேன். எனது குடும்ப அங்கத்தவர்கள் தாத்தா, அம்மம்மா, அம்மா, அண்ணா (நான்) ஆகியோர். எனது பொழுது போக்குகள் ஆவன: கதைப்புத்தகம் வாசித்தல், சித்திரம் வரைதல் எனது நண்பிதி. சுயந்தா. எனக்குப் பிடித்த விளையாட்டு வலைப் பந்தாட்டம் ஆகும்.

ச. யோஷிகா தரம் – 7D, யாழ். இந்து மகளிர் கல்லூரி.



## உங்களுக்குத் தெரியுமா?

### முட்டாள் கழுதை

ஒரு ஊரில் முல்லா வாழ்ந்து வந்தார். அவர் எல்லோரிடமும் விகடமாக பேசுவதில் வல்லவர். அதனால் அவர் எல்லோரையும் விட நன்றாக வாதாடுவார். அதனால் அவரைக் கண்டால் அவ்வூரில் அனைவருக்கும் பயம். இந்தச்செய்தி அரசனின் காதிற்கு எட்டியது. அதனால் அரசன் சந்தோசப்பட்டான் என் ஊரில் அனைவரையும் விட நன்றாக வாதாடக் கூடியவன் இருக்கிறான் என்ற பெருமையில் முல்லாவை அழைத்து உம்மிடம் போட்டியிட வெளியூரிலிருந்து சிறந்த வாதாளரை அழைத்து வந்திருக்கிறேன். அவருடன் எப்போது போட்டியிடப் போகிறீர் எனக் கேட்டார். அதற்கு முல்லா சர்வ சாதாரணமாக நாளை என் வீட்டிற்கு வாருங்கள் என்று கூறினார். அடுத்தநாட் காலை வந்தது. வாதிடுபவர் முல்லா வீட்டிற்கு வந்தார். ஆனால் அங்கே முல்லா இல்லை. அவருக்கு அதிக கோபம் வந்தது. முல்லா வீட்டின் கதவில் "முட்டாள் கழுதை" என எழுதி விட்டுப் போய் விட்டார். முல்லா வீடு வந்ததும் கதவைப் பார்த்தார். அவருக்குப் புரிந்தது. வாதிட வந்தவர்தான் இதை எழுதியிருக்க வேண்டும் என்று உணர்ந்து கொண்டார்.

உடனே வாதிடுபவர் தங்கி இருந்த இடத்திற்கு சென்றார். அவரைக் கண்ட வாதிடுபவருக்கு பயம் ஏற்பட்டது. தன்னை ஏசப் போகிறாரோ என்று நினைத்தார். ஆனால் முல்லாவோ சாதாரணமாக என் கதவில் முட்டாள் கழுதை என்று உங்கள் பெயரை எழுதி விட்டு வந்து விட்டீர்கள். அப்போதுதான் நீங்கள் வந்ததை அறிந்து கொண்டேன் என்றார்.

யோ. அருண், ஆண்டு –9, பரியோவான் கல்லூரி

### கல்வி

தம்பி தம்பி மறவாதே
தக்க வயதிற் கல்லாது
வெம்பி வெம்பி வீழாதே
வீணே காலம் போக்காதே

தங்காய் உனக்குத்தான்
தக்க புத்தி சொல்வேன் கேள்

மங்கை ஆகும் நீ கல்வி
மாண்பாய்க் கற்றல் நன்றாமே

இளமை கல்வி கற்றற்கே
இனிய காலம் என்பார்கள்
மழலை பேசும் மழலைகளும்
மாண்பு பெறுமே கல்வியினால்.

ஞா. அபிராமி, ஆண்டு – 10A, யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

## நீரைத் தேக்கி வைக்கும் காக்டஸ் தாவரம்

காக்டஸ் எனப்படும் வறள் நிலத்தாவரமொன்று தென்னமெரிக்காவின் ஆர்ஜெந்தீனக் காட்டில் வளர்கின்றது.

நீரைத் தேக்கி வைத்துப் பயன்படுத்தக் கூடியவாறான தோற்றத்தைக் கொண்டவை. இவற்றுக்கு இலைகள் கிடையாது. நீண்ட தடித்த தண்டுகள் அமைந்துள்ளன. அத்துடன் நீரிழப்பைத்தடுப்பதற்காக முட்கள் காணப்படுகின்றன.



### நான் கண்டது

நித்தமும் நாட்டில் யுத்தத்தைக் கண்டேன்
நிஜமும் மண்ணில் அழியக் கண்டேன்
மானிடம் மண்ணில் தூங்கிடக் கண்டேன்
மற்றவர் கண்ணில் மதவெறி கண்டேன்
யுத்தமும் சத்தியமே பத்தும் பறந்திடக் கண்டேன்
யுக்தியும் கத்தியும் கண்களில் கண்டேன்
யுத்த சாக்கடையில் சமாதானம் கண்டேன்
யுத்த நேசம் இசைத்திடக் கண்டேன்
பெற்றவர் கண்ணில் பிரிவு கண்டேன்
பெரியவர் கண்ணில் இனவெறி கண்டேன்
பிள்ளைகள் கண்ணில் ஏக்கம் கண்டேன்
பிஞ்சுகள் கண்ணில் பீதியைக் கண்டேன்
கண்கள் மூடவே கனவுகள் கண்டேன்
கதவுகள் திறந்த நேர்வே கண்டேன்
எம்மவர் கண்ணில் ஏழ்மை கண்டேன்
எட்டாக் கனியாய் சமாதானம் கண்டேன்.

சி. சதீஸ்குமார், தரம் – 10B, வ/இ.நி.த.க. பாடசாலை



## விண்வெளி அதிசயம்

விண்வெளியில் பயங்கர வெப்பம், கடும் குளிர் இரண்டையும் எதிர் கொள்ள வேண்டியிருக்கும். பூமியில் காற்றானது வெப்பத்தை நாலா பக்கங்களிலும் பரப்புகின்றது. விண்வெளியிலோ காற்று இல்லை. இதனால் சூரிய ஒளிபடும் பரப்பில் பயங்கர வெப்பம் இருக்கிறது. மறுபுறத்தில் கடுங்குளிர் நிலவுகிறது. செயற்கைக் கோளின் உறுப்புகளைக் கடும் குளிருக்கும் கடும் வெப்பத்திற்கும் உள்ளாக்கி பரிசோதனை நடத்திய பின்னர்தான் அவை செ கைக்கோளில் பொருத்தப்படுகின்றன.

# கண்ணதாசன் நினைவுதினத்தில் இளம் கலைஞர்களுக்கு பாராட்டு

கவியரசு கண்ணதாசனின் 20ஆவது நினைவு தினத்தை அகில இலங்கை கண்ணதாசன் மன்றம் பெருவிழாவாக ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்வு கடந்த 21ஆம் திகதி கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

சிறப்பு நிகழ்ச்சியாக செல்வி சண்முகநாதன் ஜெகனியின் பக்திப் பாடல்கள் ஒலிவெட்டு ஒலிநாடா வெளியீடு அமைந்தது.

ஆசியுரை வழங்கிய தவத்திரு சிவகுருநாதன் அடிகள், ''கண்ணதாசன் தோல்விகளையும், துன்பங்களையும் கண்டவர் வாழ்க்கையின் இரு பக்கங்களான இன்பத்திலும் துன்பத்திலும் நன்கு தோய்ந்தவர். அவர் தான் பெற்ற அனுபவங்களையே தனது படைப்பினூடாக மக்களுக்கு வெளிப்படுத்தினார்'' என்றார்.

''தெய்வம் இல்லை என்று நாத்திகம் பேசிய கண்ணதாசன் பின்னர் உண்மையை உணர்ந்து கருத்துக்களை வெளிப்படுத்தினார். கண்ணதாசனையும் நான் ஒரு சித்தனாகவே காணுகிறேன் என்றும் அவர் சொன்னார்.

ஆசியுரை வழங்கிய அடிகளாருக்கு வேட்டி ஒன்றைப் பரிசளித்து அவர்காலில் சாஸ்டாங்கமாய் வீழ்ந்து கௌரவம் செலுத்தினார் அகில இலங்கை கண்ணதாசன் மன்றத் தலைவர் கவிஞர் வேலணை வேணியன்.

''செந்தமிழ் நாடெனும் போதினிலே... என்று தொடங்கி தமிழ்நாடு, தமிழ் இனம் என்று வரும் பாடல் வரிகளைக் கேட்கும் போதெல்லாம் குருதியில் புதுத் தெம்பு ஊடறுத்து ஓடுவது போன்ற உணர்வுகள் ஏற்படுகின்றன.

''இப்படியாக உணர்ச்சி பொங்கும் கவிதைகளின் தோற்றத்துக்கு தமிழ்க் கவிஞர்கள்தானே காரணம்'' என்றார் நிகழ்வுக்கு தலைமை வகித்துப் பேசிய கலாசூரி இ. சிவகுருநாதன்.

அதிசயன் பாடிய கவிதை அனைவரின் மனதுகளையும் ஆழத்தொட்டது. அது அதிசயனின் சொந்தக் கதை. சோகக் கதை. கவிதை உருக்கமாக இருந்ததுதான் — ஆனால் குடும்பக் கதை மேடையில் தேவையா?... அழுது வடித்தார் கமலினி.

அதிசயனின் கவிதை வயதுக்கு ஏற்ற சிந்தனை என்று கூறத் தோன்றினாலும், சின்ன வயதிலேயே கஷ்டங்கள், துன்பங்களைச் சுமந்த சோகம் குரலில் ஒலித்தது.

கண்ணதாசனின் வாழ்க்கை, சினிமா பங்களிப்பு,




கண்ணதாசன் நினைவுதின விழாவில் தவத்திரு சிவகுருநாதன் அடிகள், பி.பி.தேவராஜ், கலாசூரி இ.சிவகுருநாதன், கவிஞர் வேலணை வேணியன்.

சினிமா வினூடாக இலக்கியம் வளர்த்த பாங்கு என இன்னோரன்ன பல விடயங்களை உள்ளடக்கிய பேச்சொன்றை நிகழ்த்தினார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பி.பி. தேவராஜ்.

செல்வி சண்முகநாதன் ஜெகனியின் பக்திப் பாடல் கள் பாராட்டுக்குரியவை. இனிமையான குரல். ஒளிமயமான எதிர் காலம் அவர் குரலுக்கு உண்டு.

இவர் பாடிய பக்திப் பாடல்கள் அடங்கிய ஒலி வட்டு ஒலிநாடாவின் முதல் ஒலி நாடாவை தவத்திரு சிவகுருநாதன் அடிகளிடமிருந்து லயன் எஸ். ஜெய வத்சலன் பெற்றுக் கொண்டார்.

இதனை அடுத்து இளங்கலைஞர்கள் அதிசயன், அற்புதன், செல்வி ஜெகனி ஆகியோர் பொன்னாடை போர்த்தி, தங்கப் பதக்கம் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். சிறுவர்களோடு சிறுவனாக கம்பவாரிதி இ.ஜெயராஜுக்கும் பொன்னாடை போர்த்தப்பட்டது.

பலரையும் பொன்னாடை போர்த்திக் கௌரவித்த வேலணை வேணியனுக்கும் பொன்னாடை போர்த்தப்பட்டது.

மேடையில் வீற்றிருந்த பலரின் பாதங்களிலும் வீழ்ந்து வணங்கிய வேலணை வேணியன் அதன் மூலம் அவர்களை கௌரவப்படுத்தினாரா? இல்லை அவர்களை வணங்கி ஆசி பெற்றுக்கொண்டாரா என்பதுதான் அன்றைய புரியாத புதிராக இருந்தது.

புதிரை அவிழ்ப்பதாய் இருந்தது கம்பவாரிதியின் பேச்சு.

என்னை சிறுவர்களோடு சேர்த்து கௌரவித்தது, பல ரின் பாதங்களை சாஸ்டாங்கமாய் விழுந்து வணங்கியது போன்றவை எல்லாம் பித்தின் உச்ச நிலை. வேலணை வேணியனுக்கு பித்துப் பிடித்து விட்டது என்றார் கம்ப வாரிதி. இதன் உண்மைப் பொருளை விளக்க பல இலக்கிய சான்றுகளை எடுத்துப்போட்டார்.

பின்னர் இன்று முதல் வேலணை வேணியன் ''கண்ணதாசன் அடிப்பொடி'' என்றே அழைக்கப்படட்டும் என்று பட்டமும் வழங்கினார் கம்பவாரிதி.

பலரும் பல மாதிரிப் பேசிக் கொண்டாலும், கவிஞர் வேலணை வேணியன் போன்றோர் இருப்பதனால் தான் மறைந்தும் மறையாது வாழ்கிறான் கண்ணதாசன் என்று சிலர் பேசிக் கொண்டார்கள்.

இலைமறை காயாகவும் மண்ணடி வேராகவும் இருக்கும் திறமைகளைக் கண்டறிந்து, யாழ இளைஞர்களை கௌரவித்த பெருமை அகில இலங்கை கண்ணதாசன் மன்றத் தலைவர் கவிஞர் வேலணை வேணியனையே சாரும்.

— கருடன்

# நாடகப் போட்டியில் முதலிடம்

இலங்கையில் உள்ள 17 தேசிய கல்வியற் கல்லூரிக ளுக்கிடையில் கடந்த 20 ஆம் 21ஆம் திகதிகளில் மகரகம இளைஞர் சேவைமன்றத்தில் தேசிய ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிப் பிரிவினரால் நாடகப் போட்டி நடத்தப்பட்டது.

இதில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் ''பொய்யாய் பழம் கதையாய்'' என்னும் தமிழ் மொழி மூல நாடகம் முதலாம் இடத்தைப் பெற்று ரூ. 10,000 பணப் பரிசைத் தட்டிக் கொண்டது.

இந்நாடகம் க. கமலநாதனால் பிரதியாக்கம் செய்யப்பட்டு நெறிப்படுத்தப்பட்டது.

இதில் பிரதான பாத்திரத்தில் நடித்தவர் செல்வி சி. சிவதர்சினி. சிறந்த நடிகைக்கான பரிசும் அவருக்கே கிடைத்தது.

வ. சசிகுமார் சிறந்த நடிகருக்கான பரிசைப் பெற்றார்.

த. சித்ரா, த. ஜீன் நிலுஜா, ப. கேசவன் ஆகியோர் சிறந்த இசைக்கலைஞர்களுக்கான பரிசைப் பெற்றனர். சிறந்த நடனக் கலைஞருக்கான பரிசு க. குமாரியசிந்தினிக்குக் கிடைத்தது.

சிறந்த நாடகப் பிரதியாகத்துக்கான பரிசை க.கமலநாதன் பெற்றுக் கொண்டார்.

யாழ். தேசிய கல்வியற் கல்லூரியின் ''பொய்யாய் பழம் கதையாய்'' ''யாரொடு நோவேன்'' ''கூடி விளையாடு பாப்பா'' போன்ற மூன்று நாடகங்களும் கடந்த 22ஆம் திகதி கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் மேடையேற்றப்பட்டன.

கல்வியிற் கல்லூரிகளில் கட்டாயமாக நாடகத்துறை ஊக்கு விக்கப்பட வேண்டிய ஒன்று என்றார் நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய யாழ் கல்வியற் கல்லூரி பீடாதிபதி தி. கமலநாதன்.

சிறுபான்மை இனத்தவர்கள் படும் துன்ப துயரங்களை, அவர்களுக்கு ஏற்படும் அநீதிகளை வெறுமனே வார்த்தைகளாலோ அல்லது தர்க்கத்தினாலோ பெரும்பான்மை இனத்துக்கு புரிய வைத்து விட முடியாது. கருத்தியல் ரீதியான நாடகங்களை உணர்ச்சி பூர்வமாக வெளிக் காட்டும் போதே புரிந்து கொள்ளக் கூடியதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமான மனோபக்குவ நிலை ஏற்படுகிறது. இது நாங்கள் கண்ட அண்மைக்கால அனுபவம் என்றார் வவுனியா கல்வியற்கல்லூரி போதனா ஆசிரியர் எஸ். ரவீந்திரன்.

இவர்களின் உரைகளை அடுத்து யாழ்ப்பாணம் கல்வியற் கல்லூரி தயாரித்து வழங்கிய மூன்று நாடகங்களும் மேடையேறின.

இவைகளில் நடித்த நாடகக் கலைஞர்கள் அற்புதமான முறையில் தமது பாத்திரப் படைப்புக்களை வெளிப்படுத்தி னார்கள். அனைவரையும் நிச்சயம் பாராட்டியாக வேண்டும். முறையான நெறிப்படுத்தலின் கீழ் இவர்கள் பயிற்றுவிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பது புலனாகிறது.

நாடகங்களுக்கு பின்னணி இசையமைத்த கலைஞர்களின் திறமையை அனைத்துப் பார்வையாளர்களாலும் பருகிக் கொள்ள முடியவில்லை.

போதுமான முறையில் ஒலி வாங்கிகள், ஒலிபெருக்கிகள் இல்லாமல் இருந்தமையே இதற்குக் காரணம்.

மேடையேறிய நாடகங்கள் அனைத்தும் ரசிகர்களைக் கவர்ந்தன.

— இலக்கியன்



ஆசிரியர்கள் படைத்தளித்த நாடகத்தில் ஒரு காட்சி

# பொன்விழா ஆண்டில் இந்துக் கல்லூரியின் ஆசிரிய தினவிழா

கொழும்பு இந்துக் கல்லூரியின் ஆசிரியர் தின விழா கடந்த 6ஆம் திகதி கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கல்லூரி முன்றலில் உள்ள வித்தக விநாயகர் பூசை வழிபாட்டைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின.

ஆசிரியர்களைக் கௌரவிக்கும் முகமாக மாணவர்கள் ஆசிரியர்களுக்கு வெற்றிலை கொடுத்து வணங்கி அவர்களின் ஆசியைப் பெற்றனர்.

ஆசிரிய சேவையின் மகத்துவத்தையும், வேத உபநிடத கால கல்வி முறையினையும், குரு, சிஷ்ய உறவு முறையினையும் எடுத்துக் கூறி ஆசியுரை வழங்கினார் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஆத்மகணானந்தஜி மகராஜி அவர்கள்.

அவரைத் தொடர்ந்து...மாதா, பிதா, குரு, தெய்வம் என்னும் வரிசையில் குருவைத் தெய்வமாகப் போற்ற வேண்டும் என ஆரம்பப் பிரிவு மாணவர்கள் அழகுறப் பேசிச் சென்றார்கள்.

கல்லூரி ஆசிரியர்கள் வழங்கிய இசை நிகழ்ச்சி, நாட கம் என்பன பலரதும் ஏகோபித்த பாராட்டுக்களைப் பெற்றன.

இடையிடையே மாணவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் வழங்கிய கரகோஷம் மூலம் இதனை அறிந்து கொள்ள முடிந்தது.

பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் வி. கந்தசாமி உரையாற்றும்போது அதிபரினதும் ஆசிரியர்களினதும் திறமைகளைப் பாராட்டினார். அதிபரின் முயற்சியால் கல்லூரி பல்வேறு துறைகளிலும் அடைந்த முன்னேற்றத்தினை எடுத்துக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் பழைய மாணவர் சங்கத்தினரும் இணைந்து பொன்விழா நினைவுச் சின்னம் வழங்கி ஆசிரியர்களைக் கௌரவித்தார்கள்.

கல்லூரி அதிபர் முத்துக் குமாரசாமி உரையாற்றும் போது எந்த ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கும் முக்கிய காரணிகளாக விளங்குபவர்கள் ஆசிரியர்களே என்றார்.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தத்துவப் பேரா சிரியர் வே. இராமகிருஷ்ணன், ஆசிரியத் தொழிலில் தனக் குள்ள சொந்த அனுபவங்களைக் பகிர்ந்து கொண்டார்.

உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் தொழில்க ளில் ஆசிரியத் தொழில் ஒன்றே கௌரவிக்கப்படுகின்ற தொழில் என்று குறிப்பிட்டார் திருமதி கௌரி சித்தார்த்தன்.

நிகழ்வின் இறுதியாக பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. செல்வரட்ணம் நன்றியுரை வழங்கினார்.

— ஏ.கே.சிவா

# சம்பந்தன் விருது பெற்றார் தெளிவத்தை ஜோசப்

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கண பதிபிள்ளை நினைவாக வழங்கப்படும் சம்பந்தன் விருது இந்த ஆண்டு மலையக சிறுகதை வரலாறு' என்ற இலக்கியத்தை படைத்த தெளிவத்தை ஜோசப்புக்கு கிடைத்தது.

விருது வழங்கும் வைபவம், பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் வெள்ளவத்தையிலுள்ள பெண்கள் கல்வி ஆய்வு மையத்தில் நடைபெற்றது. மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா தெளிவத்தை ஜோசப்புக்கு விருதை வழங்கினார்.

புரவலர் ஹாஷிம் உமரும் கல்வி அமைச்சின் செயலாளர் தில்லைநாதனும் தெளிவத்தை ஜோசப்பிற்கு பொன்னாடை போர்த்தி மலர் மாலை அணிவித்தனர்.

மலையக எழுத்தாளர்கள் சார்பாக கே. கோவிந்தராஜன் தெளிவத்தை ஜோசப்புக்கு மலர் மலை அணிவித்து கௌரவித்தார்.




சம்பந்தன் விருது வழங்கும் வைபவத்தில் புரவலர் ஹாஷிம் உமர், தெளிவத்தை ஜோசப், எஸ். தில்லைநாதன், பேராசிரியர் அ.சண்முகதாஸ், டொமினிக் ஜீவா.

விருது வழங்கும் வைபவத் தில் பேராசிரியர் அ.சண்முக தாஸ் தலைமையுரை நிகழ்த்தினார்.

''தெளிவத்தை ஜோசப்பின் மலையகச் சிறுகதை வரலாறு என்ற நூலை மொழி பெயர்த்து வெளிநாட்டு பல்கலைக் கழகம் ஒன்றுக்கு அனுப்பி இருந்தால் படைப்பா ளிக்கு கலாநிதிப் பட்டம் கிடைத்திருக்கும். அந்தளவுக்கு இந்நூல் சிறப்பாக இருக்கிறது'' என அவர் கூறினார்.

வாழ்த்துரையை மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா வழங்கினார்.

இம்முறை சம்பந்தன் விருது முதல் முறையாக யாழ்ப்பா ணத்துக்கு வெளியே ஒரு படைப்பாளிக்கு வழங்கப்பட்டிருப் பதை எண்ணி மகிழ்ச்சி அடைவதாக டொமினிக் ஜீவா கூறினார்.

இது ஒரு படைப்பாளிக்கு கிடைத்த வெற்றி என்றும் டொமினிக் ஜீவா சொன்னார்.

நிகழ்வின் இறுதியில் தெளிவத்தை ஜோசப் ஏற்புரை நிகழ்த்தினார்.

—றாலியா

கலையமுதம்

# ஸ்ரீவ்வோவுக்கு இனி சொக்லெட் கசக்கும்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி தலைவர் ஸ்ரீவ்வோ தமது அபிமானத் துக்குரிய இரு உணவுப் பொருட்களை உட்கொள்வதை நிறுத்தியுள்ளார்.

எதிர்வரும் நியூஸிலாந்துடனான டெஸ்ட் தொடருக்கு தயாராவதற்காக புதிய உணவுக் கட்டுப்பாட்டைக் கடைப் பிடிக்கிறார் ஸ்ரீவ்வோ. இதன் ஒரு பகுதியாகவே இரு பதார்த்தங்களைக் கைவிட்டுள்ளார் அவர்.


ஸ்ரீவ்வோ

36 வயதான ஸ்ரீவ்வோ அவரது கெண்டைக் காலில் ஏற்பட்ட 'பீப்வெயன் நிரம்போசிஸ்' எனும் நோயிலிருந்து குணமடைந்து வருகிறார். தற்போது குறைவான கொழுப்புள்ள உணவுகளையே அவர் உட்கொள்கிறார்.

"நான் கிரிக்கெட் விளையாடும் போது உடல் பலத்தில் கவனம் செலுத்தும் ஒருவன். ஆனால் உணவுதான் எனது பலவீனம்" இவ்வாறு 'ஹெரால்ட் சன்' பத்திரிகையில் கூறியுள்ளார் ஸ்ரீவ்வோ.

"எனக்கு ஒரு வழிகாட்டி தேவைப் பட்டது. ஆகவே எனது மனைவிக்காக தயாரிக்கப்படும் உணவையே உட்கொள் கிறேன்.

டீப்வெய்ன் திரம்போசிஸ் (டிவிரி) நோய் காரணமாக நான் உடற்பயிற்சிகளில் ஈடுபட முடியவில்லை. இதனால் ஆஷஸ் தொடருக்குப் பின்னர் 4-6 வாரங்களில் நான் சிறிதளவு கொழுத்துவிட்டேன்.

இப்போது 1.5 கிலோகிராம் எடை குறைந்திருக்கிறேன். அவுஸ் திரேலிய கோடைக்கால போட்டிகளுக்காக உணவுக் கட்டுப் பாட்டைத் தொடர்ந்தும் கடைப் பிடிப்பேன். இவ்வாறு ஸ்ரீவ்வோ கூறியுள்ளார்.

உலகின் முன்னணி கிரிக்கெட் அணிக்குத் தலைமை தாங்கும் ஸ்ரீவ்வோ இம்முறை உள்ளூர் போட்டிகளில் குறைவாகவே பங்குபற்று கிறார். நவம்பர் 3-4ம் திகதிகளில் நடைபெறவுள்ள போட்டியொன்றில் போர்வஸ்டவுன் அணியில் அவர் விளையாடவுள்ளார்.

நியூஸிலாந்துடனான டெஸ்ட் போட்டி களுக்கு முன்னர் அவர் விளையாடவுள்ள ஒரேயொரு போட்டி இதுவாகும். நியூஸிலாந்து அணிக்கெதிரான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நவம்பர் 8 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

# ஆத்திரமூட்டல்கள் தொடர்ந்தால் சிங்கப்பூர் பயிற்றுநர் ஆகிவிடுவேன்

## இலங்கை வலைப்பந்தாட்டப் பயிற்றுநர் கூறுகிறார்

"இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனத்தின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறுமானால் நான் சிங்கப்பூர் தேசிய வலைப்பந்தாட்ட அணியின் பயிற்றுநர் பதவியை ஏற்றுக்கொள்வேன்" இவ்வாறு தற்போது சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள இலங்கை வலைப் பந்தாட்ட அணியின் பயிற்றுநர் ஹய்சிந்தி விஜேசிங்க கூறியுள்ளார்.


ஹய்சிந்தி

சிங்கப்பூரில் நடைபெற்ற சர்வதேச சுற்றுப் போட்டியொன்றில் பங்குபற்றிய பின்னர் நாடு திரும்பியுள்ளார் விஜேசிங்க.

"சிங்கப்பூர் வலைப் பந்தாட்ட அணியின் பயிற் றுநராக கடமையாற்றும்படி அந்நாட்டு வலைப்பந்தாட்டச் சம்மேளனம் எனக்கு அழைப்பு விடுத்துள்ளது. இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவை சந்தித்த பின்பே இது பற்றி இறுதி முடிவெடுக்கவுள்ளேன்." இவ்வாறு விஜேசிங்க கூறினார்.

சிங்கப்பூர் வலைப்பந்தாட்ட சம்மேளனத்தினதும் ஆசிய வலைப்பந்தாட்ட சம்மேளனத்தினதும் தலைவியான ஐ சிங்க் லீ சிங்கப்பூர் அணியின் பயிற்றுநராகக் கடமையாற்றுமாறு விஜேசிங்கவுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இச்சம்மேளனத்தினால் ஆசியாவின் 'ஓல் ஸ்டார்ஸ் ஏஸியா' அணிக்கு விஜே சிங்க பயிற்றுநராக நியமிக்கப்பட்டார். இவ்வணி வேல்ஸ் அணியுடனான போட்டியில் 46-38 விகிதத்தில் வெற்றியீட்டியது. ஐந்து அணிகள் பங்குபற்றிய இப் போட்டிகளில் ஓல் ஸ்டார்ஸ் ஏஸியா அணிக்கு 4ஆவது இடம் கிடைத்தது.

இலங்கை வீராங்கனைகளான ஜயந்தி ஜயதிலக்க, சசிகா சமரசிங்க ஆகியோரும் இவ்வணியில் விளையாடினர்.

சிங்கப்பூர் அணியின் பயிற்றுநராக விஜேசிங்க பொறுப்பேற்பதற்கு கால அவகாசம் தேவையானால் அது பற்றி பரிசீலிக்கவும் தயார். இவ்வாறு ஐ. சிங்க் லீ தெரிவித்துள்ளார்.

பல்வேறு வசதிகள், ஊதியம் உட்பட ஒப்பந்தமொன்றை செய்து கொண்டு விஜேசிங்கவின் சேவையைப் பெற்றுக் கொள்ள சிங்கப்பூர் முயற்சிக்கிறது.

## விளையாட்டுச் செய்திகள்!

ஆர். சேதுராமன்

# டென்மார்க்கில் குடியேற மைக் டைசன் திட்டம்?

முன்னாள் அதிபார குத்துச் சண்டைச் சாம்பியன் மைக்டைசன் டென்மார்க் தலைநகர் கொபன்ஹேகனில் பாரிய வீடொன்றை வாங்கியிருக்கிறார்.


டைசன்

டென்மார்க்கையே தனது நிரந்தர வசிப்பிடமாகவும் மாற்றுவதற்கும் அவர் திட்டமிட்டுள்ளார். இவ்வாறு டென்மார்க் சஞ்சிகை யொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் 13ஆம் திகதி டென்மார்க்கில் நடந்த பிரையன் நெல்சனுடனான போட்டியொன்றில் டைசன் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த செப்டெம்பர் மாதம் நடைபெற்ற நியூயோர்க், வாஷிங்டன் நகரங்கள் மீதான தாக்குதல்களையடுத்து, அமெரிக்கா பாதுகாப்பான இடம் அல்லவென மைக் டைசன் கருதுகிறார் எனக் கூறப்படுகிறது.

அழகிய டென்மார்க் யுவதிகள் மத்தியில் தனது 'பரி சோதனைகளைத் தொடர டைசன் விரும்புகிறார். இவ்வாறு 'ஸீ ஹோர்' எனும் டென்மார்க் சஞ்சிகை கூறுகிறது.

# மெய்வல்லுநர் தலைமையகம் சுவீகரிக்கப்படுமென அச்சம்

இலங்கை மெய்வல்லுநர் சம்மேளனத்தின் தலைமையக கட்டடத்தை சமுர்த்தி அமைச்சு சுவீகரிக்கவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. இக்கட்டடமும் காணியும் சமுர்த்தி அமைச்சுக்கு சொந்தமானதாகும்.

மெய்வல்லுநர் சங்கத்தின் தலைவருடன் விளையாட்டுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர கோபம் கொண்டுள்ளார். இதனால் மெய் வல்லுநர் சங்கம் கலைக்கப்படுமென எச்சரிக்கை விடுக் கப்பட்டது.

அப்படிச் செய்தால் நாம் நீதிமன்றத் திற்குச் செல்வோம். இவ்வாறு மெய்வல்லுநர் சங்க நிர்வாகிகள் கூறினர். இந்நிலையிலேயே சங்கத்தின் கட்டடமும் காணியும் சமுர்த்தி அமைச்சின் உடைமைகள் எனத் தெரிவித்து சுவீகரிப்பதற்கு முயற்சிக் கப்படுவதாக கூறப்படுகிறது.

டொரிங்டன் பிளேஸிலுள்ள இக்கட்டடம் கடந்த வருடம் ஒக்டோபர் 6ஆம் திகதி மெய்வல்லுநர் சம்மேளனத்தின் தலைமையக மாக மாற்றப்பட்டது.

இக்கட்டடத்தை புனரமைப்பதற்கும், தளவாடங்கள் கொள்வனவுக்கும் சுமார் 30 லட்சம் ரூபா செலவிடப்பட்டது. சமுர்த்தி, கிராமிய அபிவிருத்தி விளையாட்டுத்துறை அமைச்சராகவிருந்த எஸ்.பி. திஸாநாயக்கவினால் இக்கட்டிடம் மெய்வல்லுநர் சங்கத்திற்குக் கையளிக்கப்பட்டது.

அப்போது சுனில் குணவர்தன அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்காவின் இணைப்புச் செயலாளராகப் பணிபுரிந்தமை குறிப்பிடத் தக்கது.

அடுத்த வருடம் ஒகஸ்ட் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள ஆசிய மெய்வல்லுநர் போட்டிகளைக் கருத்திற்கொண்டு மெய் வல்லுநர் சம்மேளனத் தலைமையகத்திற்குப் பூரண வசதிகள் அளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறெனினும் இக்கட்டடம் சட்ட ரீதியாக மெய்வல்லுநர் சம்மேளனத்திற்கு மாற்றப்படவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.

இந்நிலையில் தற்போதைய பிரதி சமுர்த்தி விவகார அமைச்சர் சாலிந்த திஸாநாயக்க இக் கட்டடத்தை இலங்கை மல்யுத்த சம்மேளனத்திற்கு கையளிக்க விரும்புவதாக தெரிவிக்கப்படுகிறது. இவர் இலங்கை மல்யுத்த சம்மேளனத்தின் தலைவரும் ஆவார்.

இதேவேளை மெய்வல்லுநர் சம்மேளனத்தைக் கலைக்கும் தீர்மானத்தை விளையாட்டுத்துறை அமைச்சர் மாற்றிக் கொள்ளவில்லை எனவும் செய்திகள் கூறுகின்றன. சம்மேளனத்தின் செயற்பாடுகள் பற்றி கடுமையாக விமர்சனம் செய்து வருகிறார் அமைச்சர் மங்கள சமரவீர.

# ஹொங்கொங் போட்டிக்கு ஆஸி. முதியோர் அணி

அணிக்கு அறுவர் கொண்ட சர்வதேச கிரிக்கெட் போட்டி நவம்பர் 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. ஹொங்கொங்கில் நடைபெறவுள்ள இப்போட்டிக்காக பல நாடுகள் இளம் அதிரடி வீரர்களைத் தெரிவு செய்துள்ளன.

ஆனால் அவுஸ்திரேலியா இப்போட்டி களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வில்லை. ஏறத்தாழ 'முதியோர்' அணியொன்றையே இப்போட்டிகளுக்கு அவுஸ்திரேலியா அனுப்பவுள்ளது.

47 வயதான கிம் ஹியூகஸ்உம் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளார். ஆஸி அணியின் முன்னாள் தலைவரான இவர் ஒரு தசாப்த காலத்திற்கு முன்னர் முதல் தரப்போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார்.

ஓய்வு பெற்ற வீரர்களான டீன் ஜோன்ஸ், கிரேக் மெக்டெமர்ட் ஆகியோரும் இவ்வணியில் இடம்பெறுகின்றனர்.

இதேவேளை பாகிஸ்தான் பலமான அணியொன்றைத் தெரிவு செய்துள்ளது. விக்கெட் காப்பாளர் ரஷீட் லத்திப் இவ்வணிக்கு தலைமை தாங்குகிறார். வஸிம் அக்ரம், சஹீட் அப்ரிடி, அப்துல் ரஸாக், அஸார் மஹ்மூத், சௌஹைல் மலிக் ஆகியோர் இவ்வணியில் இடம் பெற்றுள்ளனர்.

"இறுதியாக 1997இல் இச்சுற்றுப் போட்டி நடத்தப்பட்டது. அதில் பாகிஸ்தான் அணியே சாம்பியனானது. இம்முறையும் பாக் அணியே சாம்பியனாகும் வாய்ப்புள்ளது." இவ்வாறு ஹொங்கொங் கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் மைக் வேல்ஸ் கூறியுள்ளார்.

'இது மிகவும் பலமானதும் திறமையானதுமான அணி. இதிலுள்ள 6 வீரர்களும் சார்ஜா சுற்றுப்போட்டிகளில் பங்கு பற்றவுள்ளனர். இச்சுற்றுப் போட்டியில் வெற்றிபெறக் கூடிய அணி இது. இவ்வாறு மைக் வேல்ஸ் கூறியுள்ளார்.

இங்கிலாந்து அணியில் அதிரடி வீரர் களான மத்தியூ மேனாரிட், பென் ஹோலியொக், அன்ரூ பிலின்டொவ் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இந்திய அணிக்கு ரொபின் சிங் தலைமை தாங்குகிறார். அஜித் அகர்கர், ஹேமாங் பதானி, சுனில் ஜோசி, ரீடிந்தர் சிங்சோதி ஆகியோர் இந்திய அணியில் இடம்பெற்றுள்ள ஏனைய வீரர்களாவர்.

தென்னாபிரிக்க அணிக்கு ஜொண்டி ரோட்ஸ் தலைமை தாங்குகிறார். ஆட்ட நிர்ணய சதியில் சம்பந்தப்பட்ட ஹென்ரி வில்லியம்ஸ் இப்போட்டியின் மூலம் மீண்டும் சர்வதேச களத்தில் காலடி வைக் கிறார்.

இலங்கை அணிக்கு சந்திக ஹத்துருசிங்க தலைமை தாங்குகிறார். சகலதுறை ஆட்டக்காரரான உபுல் சந்தன, துலிப் லியனகே ஆகியோரும் இவ்வணியில் இடம் பெற்றுள்ளனர்.

# பிரையன் லாராவுக்கு விசேட சலுகையில்லை

## மேற்கிந்திய கிரிக்கெட் சபை கூறுகிறது

இலங்கைக்குச் சுற்றுலா மேற்கொள்ளும் விடயத்தில் பிரையன் லாராவுக்கு விசேட சலுகை வழங்கப்படவில்லை. இவ்வாறு மேற்கிந்திய கிரிக்கெட் சபை கூறியுள்ளது.


லாரா

அதிக சலுகை வழங்கப்படுவதால் லாராவுக்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக ஊடகங்களில் குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டிருந்தன. இதை மேற்கிந்திய தேர்வுக் குழு தலைவர் மைக் பின்ட்லே மறுத்துள்ளார்.

"மேற்கிந்திய கிரிக்கெட்டில் பிரையனுக்கு சிறந்த எதிர்காலம் உள்ளது. இன்னும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்றக் கூடியவர் அவர். ஆகவே தேர்வாளர்கள் என்ற வகையில் அவர் பங்குபற்றுவதற்கான கல சாத்தியக்கூறுகளையும் நாம் ஆராய்கிறோம்" இவ்வாறு பின்ட்லே தெரிவித்துள்ளார்.

"அவரை நாம் பின் தள்ள விரும்பவில்லை. எனினும் அவருக்கு நிச்சயமான பிரச்சினைகள் ஏதுமிருப்பின் அவற்றை நீக்குவதற்கு நாம் முயற்சிக் கிறோம்.

உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவருக்கு அவரது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய பூரண ஒத்துழைப்பை நாம் வழங்க வில்லையென வரலாறு எம்மைக் குறைகூற இடமளிக்க மாட்டோம்." இவ்வாறு பின்ட்லே கூறுகிறார்.

நீண்ட காலமாக காயத்திற்குள்ளாகியிருந்தார் லாரா. எனினும் இலங்கையில் நடைபெறவுள்ள போட்டிகளுக்கான 16 பேர் அணியில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவ்வருட ஆரம்பத்தில் இடம்பெற்ற ஸிம்பாப்வே சுற்றுலாவிலிருந்து இடை நடுவில் நாடு திரும்பினார் லாரா. அத்துடன் ஜமைக்காவில் நடைபெற்ற பயிற்சி முகாமிலும் அவர் பங்குபற்றவில்லை.

# படையினரின் போரியல் யுக்தி கிழக்கில் சீரழியும் சமுதாயம்

கடந்த ஒரு தசாப்தகாலமாக படையினரின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி இருக்கும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல பிரதேசங்கள், படிப்படியாக கலாசாரச் சீரழிவுக்கு உள்ளாகி வருகின்றன. தமிழர்களுக்கே உரித்தான பல பண்பாட்டு விழுமியங்கள் இப்பிர தேசங்களில் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்றன.

1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட பிரதேசங்களில் பலவிதமான அத்துமீறல் சம்பவங்கள் இடம்பெற, படைமுகாம்கள் காரணமாக இருந்து வருகின்றன.

கொலைகள், கொள்ளைகள், கைதுகள், சித்திரவதைகள், பாலியல் வல்லுறவுகள் போன்றவை ஒருபுறம் இருக்க, இப்பிரதேசங்களில் தற்பொழுது அதிகரித்துவரும் கலாசார சீர்கேடுகள், இன்று எமது சமுகம் எதிர்நோக்கும் ஒரு பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளன.

1994 ஆம் ஆண்டுக்குப் பின்னர் படையினர் தமது கட்டுப்பாட்டுக்குள் வாழும் தமிழ்மக்களுடன் சுமுகமான உறவைப் பேணும் முயற்சியில் ஓரளவு வெற்றிகண்டே வந்திருக்கின்றனர். சமீபகாலங்களாக அவர்கள் ஆரம்பித்துள்ள 'counter insurgency' என்கின்ற புதிய போரியல் யுக்தியின் ஓர் அம்சமாக, படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பொதுமக்களுடன் மிகவும் நெருக்கமான உறவினை வைத்துக் கொள்ள ஊக்குவிக்கப்பட்டு வருகின்றார்கள்.

தமிழ்மக்களுடன் படையினர் நட்புடன் பழகுவதன் மூலம் ஸ்ரீலங்கா இராணுவம் பற்றி நல்ல அபிப்பிராயத்தை தமிழ் மக்களிடம் உருவாக்கவும் புலிகளிடம் இருந்து பொதுமக்களை பிரித்தெடுத்து வேறுபடுத்தவும், பொதுமக்களிடம் இருந்து புலிகளின் நடமாட்டம் பற்றிய தகவல்களை பெற்றுக் கொள்ளவும் முடியும் என்று படைத்தரப்பு நம்புகிறது.

பொதுமக்களுடன் சுமுகமான உறவுகளை வைத்திருக்க படையினருக்கு வழங்கப்பட்டுள்ள மிதமிஞ்சிய சுதந்திரம், படையினர் இங்குள்ள இளம் பெண்களுடன் நெருக்கமான உறவுகளை வைத்திருக்க அனுமதி வழங்கியுள்ளது.

இப்பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள ஒருவித மாற்றுநிலையானது, இங்குள்ள சில தமிழ்ப் பெண்கள் காதல், திருமணத் தொடர்புகள் என்று மாற்றானுடன் ஒரு எல்லைக்கப்பாலான உறவுகளைப் பேணுவதற்கு அடிகோலுகிறது.

மட்டக்களப்பு நகரிலுள்ள சில பெண்கள் படையினரைத் திருமணம் முடித்து மட்டக்களப்பிலும், தென் பகுதிகளிலும் குடும்பம் நடத்தி வருகின்றனர்.

மட்டக்களப்பில் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் வசித்துவரும் சில இளம் பெண்கள் காதல் என்ற பெயரில் படையினருடன் தொடர்புகளை வைத்திருப்பது அதிகரித்து வருகின்றது.

ஒரு பெண்ணுக்கு தனது காதலனையும், கணவனையும் தேர்ந்தெடுக்கும் உரிமை உண்டு. ஆனால் ஒரு போரியல் யுக்திக்கான ஆயுதமாக இந்த 'உறவு' படையினரால் பயன்படுத்தப்படுகின்றது.

மட்டக்களப்புப் பகுதியில் உள்ள ஒரு பெண்கள் பாடசாலையில் கல்விகற்கும் மாணவிகள், "இராணுவ வீரர்கள் எங்களைக் காதலிக்கிறார்கள்" என்று தமக்குள் பெருமையுடன் பேசிக்கொள்ளும் அளவுக்கு இந்த விடயம் ஓர் அபாயகரமான கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

மட்டக்களப்பில் படையினர் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளுக்கு மாணவிகள் விருப்பத்துக்கு மாறாக பாடசாலை நிர்வாகத்தால் அனுப்பி வைக்கப்படுவதால், பலதரப்பட்ட வரம்பு மீறல்கள் இங்கு இடம்பெற வழி ஏற்படுகிறது என்றும் சொல்லப்படுகிறது.

இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் மாணவிகளைப் புகைப்படம் எடுக்கும் படையினர் அவர்களை அணுகுவதற்கு அந்தப் புகைப்படங்களை பயன்படுத்துகின்றனர். இளமையின் தடுமாற்றம் காரணமாக சில இளம் பெண்கள் இவர்களின் வலையில் வீழ்ந்துவிடுவதும் உண்டு.

மட்டக்களப்பு நகரிலுள்ள சினிமாப் படமாளிகைகளில் படையினருடன் தமிழ் பெண்கள் திரைப்படம் பார்க்க வருவது ஒரு சாதாரண நிகழ்வாக மாறி வருகின்றது.

பாதுகாப்பு ஏற்பாட்டுக்காக மட்டக்களப்பில் உள்ள வீடுகளில் வசிக்கும் ஆட்களைப் பதிவு செய்யும் போது, வீடுகளிலுள்ள இளம் பெண்கள், விதவைகள் போன்றவர்களின் விவரங்கள் பாதுகாப்புப் படையினருக்கு தெரிய வருகின்றன. அண்மையில் கொழும்பு மனித உரிமைகள் இல்லத்தில் நடைபெற்ற செயலமர்வு ஒன்றில் இது பலத்த விமர்சனத்திற்கு உள்ளானது.

படையினருக்கும் மட்டக்களப்பிலுள்ள ஒருசில பெண்களுக்கும் இடையிலான அநாகரீக உறவுகள், சில சமயங்களில் எமது சமூகத்துக்கெதிரான வன்முறைகளாக வந்துசேர்ந்துவிடுகின்றன. நீண்ட வரலாறு கொண்ட எமது சமூகத்தைப்பற்றிய ஒரு தவறான அபிப்பிராயத்தை மாற்றுச்சமூகங்களிடம் ஏற்படுத்திவிடுகின்றன.

மட்டக்களப்பில் ஒரு குற்றப்புலனாய்வுப் பொலிஸ் அதிகாரியை காதல் செய்த, மட்டக்களப்பு நகரில் வசிக்கின்ற ஒரு பெண், ஒருநாள் அந்த அதிகாரியினாலும், அவரது நண்பர்களாலும் கண்டி நகருக்கு கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் ஒன்றும் அண்மையில் இடம்பெற்றது.

"தமிழ்ப் பெண்கள் அடக்கமானவர்கள்", "மிகவும் கட்டுப்பாடானவர்கள்", பண்பாடுகளை இலகுவில் மீறாதவர்கள்" என்று முன்னர் கூறிவந்த சிங்கள இளைஞர்கள், இன்று தமிழ்ப் பெண்கள் இலகுவில் அணுகப்படக்கூடியவர்கள்" என்ற எண்ணத்தில் செயற்படும் அளவிற்கு எமது பண்பாடுகளின் அத்திபாரங்கள், ஒரு சில பெண்களால் சிதைக்கப்பட்டு வருகின்றன. அதேவேளை, எமது சமுதாயமும் இந்த விடயத்தில் ஒருவித பாராமுகப்போக்கை கடைப்பிடித்து வருகின்றது.

— சாத்வீகன்

# அம்பாறையில் வெற்றி யாருக்கு?

எதிர்வரும் பொதுத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஏழு தொகுதிகளிலும் 280 பேர் போட்டியிடுகின்றனர். 14 அரசியல் கட்சிகளும் 14 சுயேச்சைக் குழுக்களும் களத்தில் குதித்துள்ளன.

முதலில் 16 அரசியல் கட்சிகளும் 17 சுயேச்சைக் குழுக்களும் அம்பாறைக் கச்சேரியில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தன. எனினும் அவற்றில் 2 கட்சிகளும் 3 சுயேச்சைக் குழுக்களும் அம்பாறை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் அரசாங்க அதிபருமான எல்.எஸ்.ஸி சிறிவர்த்தனாவால் நிராகரிக்கப்பட்டன.

அவர்களது வேட்பு மனுக்கள் தேர்தல் சட்ட விதிகளுக்கு அமைய பூரணப்படுத்தப்படவில்லை என்று காரணம் தெரிவிக்கப்பட்டது.

## நௌஷாட்

1983 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த தமிழ் முஸ்லிம் ஐக்கியத்தை மீண்டும் அம்பாறை மாவட்டத்தில் கட்டியெழுப்புவதே தமது நோக்கம் என்றார் சுயேச்சை அணியில் போட்டியிடும் தலைமை வேட்பாளர் ஏ.எம்.எம். நௌஷாட்.

ஐ.தே.க தலைவர் ரணில் அம்பாறை மாவட்ட தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளை ஏற்க மறுத்துவிட்டார். நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எனவே 61 ஆயிரம் தமிழ் பேசும் மக்கள் சார்பில் போட்டியிட முன்வந்துள்ளோம். எமது சமுதாய உரிமைகளை நாம் எவருக்கும் விட்டுக் கொடுக்கத் தயாரில்லை என்றும் இவர் கூறினார்.

ஏ.எம்.எம் நௌஷாட் சட்டத்தரணி ஏ.எம்.ஹக்கீப், ஜப்பார் ஹாஜியார் ஜுனைடீன், இஸ்மாயில், வர்த்தகப் பிரமுகர் வைஷால் காசிம், ஏ. நஸீர், ஜோன் ஜெயசிங்க, நசீர் ஹாஜியார் ஆகியோர் இந்த சுயேச்சைக் குழு சார்பில் போட்டியிடுகின்றனர்.

## சந்திரநேரு

"தொடரும் வடக்கு—கிழக்கு யுத்தத்தை நிறுத்துவதுடன் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசைத் தூண்டுவது தமது நோக்கம் என்கிறார் அம்பாறை மாவட்ட தமிழர் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் அ. சந்திரநேரு.

"எனது தந்தையார் அரப்போர் அரிய நாயகம். அவரது விடுதலைப் போராட்டப் பாதையை தந்தை செல்வா முதல் சகல தமிழ்த் தலைவர்களும் அங்கீகரித்திருந்தார்கள். அவரது கொள்கையை அவரது பாதையில் தனயனான நான் முன்னெடுத்துச் செல்லவிருக்கிறேன். தமிழ்ச் சமுதாயம் நிம்மதியாக வாழ வேண்டும். தமிழ் இளைஞர்கள் சுதந்திரமாக நாட்டில் நடமாடும் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்றார் அவர்.

அ. சந்திரநேரு, பி. வெங்கடாசலம், ரி. ஏகாம்பரம், ரஞ்சன் பிரான்சிஸ், க. பத்மநாதன், ரி. திராவிடத்தம்பி, ஆர். ரகுபதி, ரி. ஸ்ரீஸ்கந்தராஜா, ரெமோ ஆர். ஸ்ரீஸ்கந்தராஜா, எஸ். அருணகிரி ஆகியோர் இந்த அணியின் வேட்பாளர்கள்.

## சங்கர்

அம்பாறை மாவட்ட தமிழ்ப் பிரதிநிதித்துவம் வெறுமனே பெயரளவில் இருப்பதில் பிரயோசனமில்லை. தமிழ் மக்களுக்கு உரிய தொழில் வாய்ப்பு, அபிவிருத்திகளை வழங்கும் ஒரு பிரதிநிதி அவசியம் என்கிறார் ஈ.பி.டி.பி. சார்பில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடும் குணசேகரம் சங்கர்.

"யுத்தத்தை நிறுத்தும் முயற்சியை துரிதப்படுத்துவோம் அத்துடன் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வழிசமைப்போம். அதே வேளை, பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் இடைக்காலத் தீர்வான தொழில் வாய்ப்பு, அபிவிருத்தி என்பவற்றை வழங்க உரிய ஏற்பாட்டைச் செய்வோம் என்றார் அவர்.

குணசேகரம் சங்கர், பி. கணேசன், சொலமன் கற்பிரசாதநாதன், ஆர். யூவேந்திரா, பி. சுரேந்திரன், ஏ.எல். ஜெமீல், ஏ.எம். சலீம், வி.ரவீந்திரன், கே. ஞானரத்ன நெல்சன் எதிரிசிங்க, ஆகியோர் இந்த அணியின் வேட்பாளர்கள்.

## றசாக்

'முஸ்லிம்கள் மத்தியில் ஒற்றுமையைச் சீர்குலைத்துவிட்டது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப்பீடம் என்கிறார். பொதுஜன ஐக்கிய முன்னணியில் போட்டியிடும் வேட்பாளரும், கல்முனை பிரதேச சபையின் முன்னாள் உபதலைவருமான கே.எம்.ஏ. றசாக் (ஜவாத்).

"முன்பிருந்த தலைவர் அஷ்ரப் மக்களை அணைத்து ஒற்றுமைப்படுத்தினார். தற்போதைய தலைவர் ஹக்கீம் ஒற்றுமையைச் சீர்குலைத்து ஒருசிலரை மட்டுமே அணைத்து வருகிறார் என்றார்.

பேரியல் அஷ்ரப், எச்.எம். வீரசிங்கம், கே.எம்.ஏ.றசாக், விமலவீர திசாநாயக, டி சில்வா, ஏ.சி.ஏ. பதுறுதீன், தேவாரப் பெருமகுலதுங்க, யூ.எல்.எம். மொகைதீன், ஏ. விநாயகமூர்த்தி ஆகியோர் இந்த அணியின் வேட்பாளர்கள். இவர்களில் 5 சிங்களவர், 4 முஸ்லிம்கள், ஒரு தமிழர் அடங்குவர்.

## அன்வர் இஸ்மாயில்

முஸ்லிம்களின் இதயம் என வர்ணிக்கப்படும் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்களின் தனித்துவம் காக்கப்பட வேண்டும் என்பதால் இங்கு நாம் தனித்துப் போட்டியிடுகிறோம் என்கிறார் ஸ்ரீ ல.மு.கா சார்பில் போட்டியிடும் சட்டத்தரணி அன்வர் இஸ்மாயில்.

"முஸ்லிம் சமூகத்தின் தனித்துவக் குரல் எப்போதும் தனித்து அடையாளம் காணப்படும் இயக்கம் மூலமாகவே பேசப்பட வேண்டும்.

எவ்வாறு தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகள் பேச்சாளர்களாக உள்ளனரோ, அதே போன்று முஸ்லிம் மக்களின் அடையாளம் காணப்பட்ட பேச்சாளர்களாக ஸ்ரீ.ல.மு.கா. இருக்கும் என்றார் அவர்.

ஏ.எல். அதாவுல்லா, அன்வர் இஸ்மாயில், ஹசன் அலி, ஹரீஸ், நிஜாமுதீன், அசீஸ், றஷீட், எம்.எச்.எம். சுபைர், ஐ. மஜீத், ஏ. ஆரிவ் ஆகியோர் இந்த அணியில் போட்டியிடுகின்றனர்.

(காரைதீவு செய்தியாளர்)

## பயிற்சி வகுப்புகள்

திருகோமலை நகர்ப்புற சமுர்த்தி செயலணியினர், சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் தொழில் வாய்ப்புக் கருதி தட்டச்சு, தையல் பயிற்சி வகுப்புக்களை நடத்துகிறார்கள். அவற்றிற்கான சான்றிதழ்களையும் வழங்குகிறார்கள். வேலை வாய்ப்புக்களையும் பிரதேச செயலாளரின் உதவியுடன் பெற்றுக் கொடுக்கின்றனர்.

சோனகவாடி, அரசடி, தில்லைநகர் ஆகிய மூன்று கிராம சேவகர் பிரிவுகளையும் சேர்ந்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூவரும் இணைந்து தட்டச்சு பயிற்சி வகுப்புகளை நடத்தினர். பயிற்சி பெற்ற 20 மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. கடந்த வருடம் 13 பேர் மேற்படி பயிற்சி நெறியைப் பயின்று இவர்களிடம் சான்றிதழும் பெற்றுள்ளனர்.

இம்முறை, சான்றிதழ் வழங்கும் வைபவம் சமுர்த்தி உதவி ஆணையாளர் எஸ்.கமகே தலைமையில் சமுர்த்தி அலுவலகத்தில் நடைபெற்றது.

"மேற்படி செயலணியினர் சமுர்த்தியின் இலக்கை முன்னெடுத்துச் செல்வது போற்றுதற்குரியது. அதிகார சபையின் எவ்வித உதவியுமின்றி தமது சொந்தச் செலவில் இவ்வாறான பயிற்சிகளை நடத்தும் உத்தியோகத்தர்களின் முயற்சி பாராட்டுக்குரியது" என்று உதவி ஆணையாளர் கூறினார்.

— சுஜா

# வீதிவிபத்துக்களை ஏற்படுத்தும் தெருவோர கல், மண் குவியல்கள்

திருகோணமலை நகரில் காலை முதல் மாலைவரை ஒரே போக்குவரத்து நெருக்கடிதான். இந்த நெருக்கடிகள் காரணமாக வீதி விபத்துகள் நடப்பதும் அதிகரித்திருக்கிறது.

வீதி விபத்துக்கள் நடப்பதற்கு வீதியோரங்களில் குவித்து வைக்கப்பட்டுள்ள கல், மண் குவியல்களே முக்கிய காரணங்களாகும்.

வீடுகளை நிர்மாணிப்பவர்களும், பழைய வீடுகளைப் புதுப்பித்துக் கொள்பவர்களும் வீதியோரங்களைத் தங்களுடைய வளவுகளாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

புதிய வீடுகளை நிர்மாணிப்பவர்கள் தமது கட்டட நிர்மாணத்திற்குத் தேவையான கல், மண் ஆகியவற்றை தருவிக்கிறார்கள். லொறி வண்டிகளில் வந்து சேரும் கல், மண் ஆகியவற்றைக் குவியல்களாகத் தமது வீட்டு வாசல்களில் வீதியோரமாகவே குவித்து வைக்கிறார்கள்.

பழைய வீடுகளைப் புதுப்பிப்பவர்கள் வீட்டை இடித்து வீழ்த்தும் போது சேரும் கழிவுகளை வீதியோரங்களிலேயே குவித்து வைக்கிறார்கள். இதனால் கல், மண் குவியல்கள் இல்லாத வீதியோரமே இல்லை என்று கூறும் அளவுக்கு நிலைமை மோசமாக இருக்கிறது.

வீடு கட்டுவதற்குத் தேவையான சீமெந்துக் கலவை தயாரிப்பதற்கும் அநேகமானோர் தார் வீதியையே பயன்படுத்துகிறார்கள். இதனால் வீதிகள் பழுதடைகின்றன. அதே நேரத்தில் வீதியில் வாகனங்கள் செல்வதற்கும் இடையூறு ஏற்படுகிறது.

கடந்த வருடம் வீதியில் ஒரு சிறுவன் சைக்கிளில் வந்து கொண்டிருந்த போது ஒரு லொறியினால் மோதுண்டு உயிரிழந்தான். அந்த விபத்து நடைபெறுவதற்கு வீதியோரம் கொட்டப்பட்டிருந்த மண் குவியல் தான் காரணம் என்று முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

ஆயினும் இந்தக் கல், மண் குவியல்களின் ஆபத்துப் பற்றி எவருமே ஆராய்ந்து பார்த்ததாகத் தெரியவில்லை.

நகர சபை அதிகாரிகள் இந்தக் குறையை உடனடியாகக் களைய வேண்டும். இல்லையேல் மேலும் வீதி விபத்துக்கள் நடைபெறுவது தவிர்க்கமுடியாமல் போய்விடும்.

-- சுதன்

## சட்டவிரோத மரம் கடத்தல்

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள வல்கஸ்கந்த காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக மரம் வெட்டும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

பெருமளவு மரங்கள் கிண்ணியாவுக்கே கடத்தப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

கடத்தல்காரர்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.



"என்ன தலைவரே... முகத்தில் காயம் அடிச்சிட்டாங்களா?"

"ஆமாப்பா நான் ஜெயிச்சா ஊர்ல பட்டினியில்லாம செய்வேன்னு சொல்லும் போது வார்த்தை தடுமாறி பத்தினியில்லாம செய்வேன்னு சொன்னதால வந்த வினை"

# பல்கலை பட்டம் பெறும் தகுதி மல்லிகை ஜீவாவுக்கு உண்டா?

**கொள்கை வேறு செய்கை வேறாக இருக்கக்கூடாது. இரண்டும் ஒன்றாகவே இருக்கவேண்டும். அதுதான் உண்மையான எழுத்துக்கும் நேர்மையான எழுத்தாளனுக்கும் அழகு. ஜீவாவுக்கு பட்டம் வழங்க யாழ் பல்கலைக்கழகம் தீர்மானிப்பதற்கு முன்னர் ஜீவாவின் தகைமைகள் நியாயத் தராசில் போட்டுப்பார்க்கப்பட்டனவா?**

யாழ். பல்கலைக்கழகம் டொமினிக் ஜீவாவுக்கு பட்டமளிப்பது என்று எடுத்த தீர்மானம் சரியானதா, டொமினிக் ஜீவா பட்டத்தை ஏற்க மறுத்தது சரியானதா? இவையல்ல இந்தக் கட்டுரையின் நோக்கம். இலக்கியத்தின் நியாயத் தராசு கவிழ்ந்து விடாமல் இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும். அதுதான் குறிக்கோள். வேறொன்றுமில்லை.

யாழ். பல்கலைக்கழகத்தின் பட்டத்தினை ஏற்க மறுத்து டொமினிக் ஜீவா கூறிய கருத்துக்களிலிருந்தும் இந்த விஷயம் பற்றி பத்திரிகையில் எழுதிய கட்டுரையாளர்களின் கருத்துக்களிலிருந்தும் பெறப்படுபவை இவை:—

* பல்கலைக்கழகத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவுவதற்கு அரும்பாடுபட்டு உழைத்தவர் ஜீவா.

* முதுமாணிப்பட்டம் பொருத்தமற்றது அல்லது குறைவானது, கலாநிதிப் பட்டமே தகுதியானது.

* முதுமாணிப் பட்டம் என்பது கௌரவப்பட்டம் அல்ல, கல்விசார் பட்டமே. தாழ்ந்த சாதிக்காரனுக்கு கலாநிதிப் பட்டம் வழங்குவதற்கு பல்கலைக்கழகம் தயங்குகிறது.

* விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் மல்லிகையில் எழுதியமையினால் பதவி உயர்வு பெற்றார்கள்.

இப்படித்தான் அந்தக் கருத்துக்கள் தெரிவிக்கின்றன.

ஒரு பல்கலைக்கழகத்தினால் அல்லது ஓர் அமைப்பினால் வழங்கப்படும் கௌரவப் பட்டங்களைத் தீர்மானிப்பதும், யார் பட்டங்களைப் பெறுவதற்குத் தகுதியானவர் என்பதனை முடிவு செய்வதும் பல்கலைக்கழகக் குழுவே ஆகும்.

பட்டத்தினை ஏற்றுக் கொள்ளுவது அல்லது ஏற்றுக் கொள்ளாமல் விடுவது பட்டத்தைப் பெறுபவரின் உரிமை ஆகும்.

இதனை விடுத்து இந்தப் பட்டம்தான் வேண்டும் என்று அடம் பிடிப்பது நாகரிகமாகாது. பட்டம், தானே தேடி வரவேண்டுமேயொழிய, பட்டத்தை நாம் தேடிச் செல்லக் கூடாது.

இதனால்தானோ என்னவோ முன்னாளில், உயிருடன் இருக்கும் போது இப்படிப் பட்டங்கள் வழங்கப்படுவதில்லை. இது போதாது அது போதாது என்று கூறுவார்கள் என்பதற்காகவோ என்னவோ இறந்த பின்பே கௌரவப் பட்டங்கள் வழங்கப்பட்டன.

ஒரு பட்டத்தினை வழங்கும் பொழுது அதுவும் பல்கலைக்கழகப் பட்டத்தினை வழங்கும் பொழுது அந்தப் பட்டத்தினைப் பெறுபவரின் தகைமைகளை — பணியினால் கிடைத்த நன்மை தீமைகளை நியாயத் தராசில் போட்டுப் பார்க்க வேண்டியது அவசியம்.

இந்த நியாயத் தராசில் ஜீவாவின் தகைமைகள் போட்டுப் பார்க்கப்பட்டனவா? சிந்திக்க வேண்டி உள்ளது.

யாழ்ப்பாணத்தில் யாழ். பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் என்று அரும்பாடுபட்டவர் ஜீவா என்பது உண்மைதான். அந்த உண்மைக்கும் கசப்பான ஒரு வரலாறு உண்டு.

இந்தப் பல்கலைக்கழகத்தை திருகோணமலையில் அமைக்கும் முயற்சியில் பலர் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் பல்கலைக்கழகம் திருகோணமலையில் அமையக் கூடாது யாழ்ப்பாணத்து மண்ணிலேதான் அமைய வேண்டுமென டொமினிக் ஜீவா உட்படப் பல கொம்யூனிஸ்ட்டுகள் அப்பொழுது கூறினார்கள்.

யாழ்ப்பாண மண் மட்டுந்தான் தமிழ் மண், யாழ்ப்பாணத்திலிருந்து மட்டுந்தான் கல்விமான்கள் முளைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பல்கலைக்கழகத்தை யாழ்ப்பாணத்தில் அமைத்தார்கள்.

இந்தப் பல்கலைக்கழகத்தை அறிவுஜீவிகள் திட்டமிட்டபடி திருகோணமலையில் நிறுவியிருந்தால் திருகோணமலையை அண்டிய பகுதிகளில் அறிவு ஜீவிகளும் தமிழர்களும் கூடுதலாக குடியேறியிருப்பார்கள். இதனால் திருகோணமலை மாவட்டத்தில் அரசாங்கம் திட்டமிட்டு நடத்திய சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்திருக்க முடியும். திருமலை மண்ணைப் பறி கொடுத்து விட்டு பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் நிலை இன்று ஏற்பட்டிருக்காது.

மொத்தத்தில் பார்க்கும் பொழுது இந்தப் பல்கலைகழகத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவியமை ஏனைய பிரதேச மக்களுக்கு செய்த 'பச்சைத் துரோகம்' ஆகும்.

அன்று யாழ்ப்பாணச் செம்பாட்டு மண்ணையும் மக்களையும் நேசித்த ஜீவா இன்று அந்த மக்களை மறந்து, அந்த மண்ணிலேயே காலடி வைக்க முடியாமல் கொழும்பில் சீவியம் நடத்துவதும் நியாயந்தானா?

கொள்கை வேறு செய்கை வேறாக இருக்கக் கூடாது. கொள்கையும் செய்கையும் ஒன்றாகவே இருக்க வேண்டும். அதுதான் உண்மையான எழுத்தாளனுக்கு அழகு.

ஜீவா நீண்ட காலம் ''மல்லிகை'' என்ற சஞ்சிகையை நடத்துகிறார் என்பது உண்மைதான். இதனை எவராலும் மறுக்க முடியாது. ஆனால், முதலாளி எதிர்ப்புக் கொள்கை கொண்ட கொம்யூனிஸ்ட்டான ஜீவா முதலாளிகளைத் திட்டித் திட்டி முதலாளிகளைக் கொண்டே பத்திரிகை நடத்தியதே வேடிக்கைதான்! வர்த்தக விளம்பரத்தில்தான் மல்லிகை ஓடியது. அந்த விளம்பரங்களுக்கு சொந்தக்காரர்கள் யார்? எல்லோரும் முதலாளிகளே!

சிரித்திரன் சஞ்சிகையின் மூலம் அமரர் சி. சிவஞானசுந்தரம் பிரபல எழுத்தாளர்கள் என்று பெயர் குறிப்பிட்டுச் சொல்லுமளவிற்கு செங்கை ஆழியான், சுதாராஜ், கனகசுகுமார், இரத்தினவேலோன், அகளங்கன், பொன். பூலோகசிங்கம், சுபாசர்மா, திக்கவயல் தர்மகுலசிங்கம் போன்றவர்களை உருவாக்கினார். ஜீவாவினால் உருவாகிய பிரபல எழுத்தாளர்கள் எத்தனை பேர்?

**ஜீவாவுக்கு யாழ் பல்கலை கௌரவப் பட்ட சர்ச்சை**

தொழிலாளர்களுக்கான சஞ்சிகை என்று கூறிக் கொள்ளும் இந்தச் சஞ்சிகை எந்தப் பாமரனைச் சென்றடைந்தது? எத்தனை பாமர எழுத்தாளர்களை உருவாக்கியது? கைலாசபதி, சிவத்தம்பி, மௌனகுரு என்று பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்குக் களமமைத்துக் கொடுத்ததே தவிர பாமர எழுத்தாளர்களுக்குக் களமமைத்துக் கொடுக்கவில்லை என்பது தான் உண்மை. படித்தவர்களால் கூட வாசித்து விளங்கிக் கொள்ள முடியாத பேராசிரியர்களின் கட்டுரைகளை பாமர மக்கள் வாசித்து விளங்கியிருப்பார்களா என்பது கேள்விக்குறியே!

மல்லிகையில் எழுதிய கட்டுரைகளின் நறுக்குகளைக் கொண்டு விரிவுரையாளர்கள் பதவி யுயர்வு பெற்றிருக்கலாம். அதில் தப்பு ஒன்றுமில்லையே. கட்டுரைக்கு சொந்தக்காரர்கள் அவர்கள்தானே!

மல்லிகையில் எழுதிய கட்டுரைகளை வைத்து பதவியுயர்வு பெற்றிருந்தாலும், நன்றிக் கடனாக ஒரு பட்டத்தை அவர்களிடமிருந்து எதிர்பார்ப்பதில் என்ன நியாயம் இருக்கிறது?

சரி, போனால் போகுது என்று ஒரு முதுமாணிப்பட்டத்தைத் தந்தாலும் அதனை ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை? முதுமாணிப் பட்டம் கல்விசார் பட்டமா? கல்விசார் பட்டம் என்று யார் சொன்னது? அப்படியென்றால் இந்திய பல்கலைக்கழகம் நடிகர் பாகவதர்களுக்கு கௌரவ முதுமாணிப்பட்டம் கொடுத்தது தெரியவில்லை போலும்!

இன்று மலையகத்தைப் பற்றி மலையக எழுத்தாளரைப் பற்றி ஓகோ என்று கதைக்கிறார் ஜீவா.

80 களுக்கு முதல் சிரித்திரனில் 'ஒய்யப்பன் கங்காணி', லயத்தில கேட்டேனுங்க; போன்ற தொடர்கள் வந்து போல எத்தனை பிரபல மலையக எழுத்தாளர்களின் ஆக்கங்களுக்கு மல்லிகையில் களமமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது?

இவை எல்லாவற்றையும் விட இந்திய அமைதி காக்கும் படை ஈழ மண்ணில் நிலை கொண்டிருந்த வேளையில், ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம் குண்டு போட்டுத் தகர்க்கப்பட்டது. முரசொலி பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டார்கள். உதயன் காரியாலயம் செல்லடிக்கு இரையானது.

அப்பொழுது எல்லா பத்திரிகையாளர்களையும் இந்திய அமைதி காக்கும் படை அதிகாரிகள் அழைத்து வட்ட மேசை மாநாடு நடத்தினார்கள். எங்களின் உடன்படிக்கைக்கு அடி பணிந்து தான் பத்திரிகை நடத்த வேண்டும் என்று கேட்டனர். அப்போது, சிரித்திரன் சுந்தர் போன்றவர்கள் அடிமையாகப் பத்திரிகை நடத்த மாட்டோம் என்று கூறி மாநாட்டிலிருந்து வெளி நடப்புச் செய்தனர். அடிமைச் சாசனத்தை ஏற்றுக் கொண்டு பத்திரிகைத் தர்மத்தையே விலைபேசி விற்று சஞ்சிகை அடித்து விற்றவர்தான் ஜீவா. அவருக்கு கலாநிதிப் பட்டம் தேவைதான்!

தமிழ் பிரதேசத்திலே முதன் முதலாக 1974 இல் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா மலரை தமிழை மறந்து ஆங்கிலத்தில் கொண்டுவந்த போது மாணிக்கன் குமார் பொன்னம்பலத்தின் குரலுக்குப் பயந்து அதனைக் கடலோடு அமிழ விட்ட பல்கலைக்கழகம், யாருக்கு என்ன பட்டத்தைக் கொடுத்தாலும் எங்களுக்கென்ன!

—க. குனா

முறக்கொட்டான்சேனை.

## வாசகர் இதயம் பேசுகிறது

சுடர் ஒளியே!

உன் அட்டைப் படங்களிலேயே... நீ சுமந்து வரும் அத்தனை செய்திகளையும் அறிந்து கொள்ள முடிகிறது. அட்டைப் படங்கள் அத்தனையும் சூப்பர். இருந்தும் சிலவேளைகளில் அட்டைபடச் செய்திகள் விரிவாக இல்லாதது வேதனை தருகிறது.

முஸ்ரப், மருதங்கேணி.

சுடர் ஒளியே உன் அனைத்து அம்சங்களும் அற்புதம்! இப்போது நீ தரும் ஓயாத அலைகளின் உள்ளடக்கம் எப்போது நீ வருவாய் என வாசல் பார்க்க வைக்கிறது.

ரவிஷங்கர், ஆறுமுகத்தான் குடியிருப்பு.

வாரம் தோறும் தேன் சுவையான செய்திகளை அள்ளித் தரும் சுடர் ஒளிக்கு எனது பலகோடி நல்வாழ்த்துக்கள். ஒக்டோபர் 21 சுடர் ஒளியில் வெளியாகி இருந்த ''கலாசார, விழுமியங்களுக்கு ஓர் அச்சுறுத்தல்'' எனும் கட்டுரை வரவேற்கத்தக்கது. ''சுடர் ஒளி'' நல்ல ஆலோசனைகள் வழங்க வேண்டும். தொடர்ந்து ஒரு சிலரின் ஆக்கங்கள் மட்டுமே பிரசுரிக்கப்படுவதை தவிர்த்து, எமக்கும் இடம் தர வேண்டும்.



பே. ஹர்ஷனா, கந்தளாய்.

சுடர் ஒளிக்கு எனது வாழ்த்துக்கள்... என் இதயத்தில் இடம் பிடித்துக் கொண்ட சுடர் ஒளியே வாழ்க.

ப. பரிசோதன், கொழும்பு— 14.

சுடர் ஒளியே நீ தாங்கி வரும் அரசியல் கட்டுரைகள் அனைத்தும் தரமானவை மற்றும் சிறுகதை, கவிதைப் புனல், இளஞ்சுடர், பித்தன் பதில்கள் அனைத்தும் நன்று.

குறைந்த காலத்திலேயே நிறைந்த சேவையைத் தரும் சுடர் ஒளியே, எத்தனை எத்தனை இடர் வந்தாலும் உன்பணி தொடர வாழ்த்தும்

த. அஜந்தகுமார், வதிரி.

ஒளிச் சுடராய் எம் மனதில் பதிந்த சுடர் ஒளியே உன் சுவைமிக்க அரசியல், சினிமா, விளையாட்டு அனைத்தும் மனதை கவர்கின்றன. உன் சேவை வளர வாழ்த்துக்கள்.

கவிப்பிரியன் நசூர்தீன், தெல்தோட்ட.

எட்டுத்திக்கும் சுடர் விடும் சுடர் ஒளியே பல்லாண்டு காலம் சுடர் குன்றாது ஒளியரப்புக. நீ தாங்கி வரும் அத்தனை ஆக்கங்களும் தரமானவை. பெறுமதியானவை. எம் இனத்தின் துயர் நிறைந்த வாழ்வினை படம் பிடித்துக் காட்டும் பெட்டகம் நீ.

உருத்திரசிவன், உருத்திரபுரம்.

சுடச் சுடச் செய்திகளை சுமந்துவந்து வாசகரின் மனதில் இடம் பிடித்துக் கொள்ளும் சுடர் ஒளி தொடர்ந்தும் நிலைத்திருக்க எனது வாழ்த்துக்கள்.

க. பிஸ்றுல் ஹாபி, நிந்தவூர்.

நீ சுமந்து வரும் அனைத்து ஆக்கங்களும் சுவையாக உள்ளன. ஒவ்வொரு வாரத்திலும் ஒவ்வொரு விதமாக எம்மை வந்து மகிழ்விக்கும் உனக்கு எனது பாராட்டுக்கள். தற்போது வெளிவருவது போலவே தொடர்ந்து துணிகரமாக உண்மைச் செய்திகளைத் தந்து தமிழ்ச் சமுதாயத்தின் எழுத்தாற்றலை சுடர் ஒளி வளம் பெறச் செய்ய வேண்டும்.

க. நிரேஷ், கோண்டாவில்.

அன்பின் சுடர் ஒளியே வன்னியில் உன்னை ஆரம்பத்தில் இருந்து இடைவிடாது பார்த்து வருகிறேன். சுடர் ஒளி தொடர்பாக எனது அபிப்பிராயம் ஒன்றையும் சொல்ல வேண்டி உள்ளது. வார வெளியீட்டை இலக்கவிசைப் படுத்தினால் எமக்கு உதவியாக இருக்கும். செப்டெம்பர் 30 இதழில் கூட்டணி தலைமைப் பதவியை டக்ளஸுக்கு வழங்க வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கையைப் படித்த போது அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

பொ. விஜந்தன், முள்ளியவளை.

நீ தாங்கி வரும் அனைத்து படைப்புக்களும் தரமானவையாக உள்ளன. அதிலும் களநிலைமை எப்படி, வடபுலத்து நிகழ்வுகள் போன்ற பகுதிகள் வாசிக்கத் தூண்டுகின்றன. பாராட்டுக்கள்.

ம.கஜேந்திரன், புதுக்குடியிருப்பு.

''கள நிலைமைகள் எப்படி?'' பகுதி மீண்டும் மீண்டும் வாசிக்கத் தூண்டுகின்றது மற்றும் அட்டைப் படத்தின் வர்ண ஜாலங்களைப் பார்த்தவுடன் சுடர் ஒளி மனதை கவர்ந்து விடுகிறது.

மிஸ்ஹான், மடவளை பஸார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஒழுக்கக் கேடுகள் நாடாளுமன்றக் கலைப்புகள், மலையக அரசியல் நிலைமைகள் என்பன மிகவும் வரவேற்கத்தக்கவை.

அ. ராஜேஸ்வரி, அக்கரப்பத்தனை.

# பலகோடி இலாபம் பெறும் கம்பெனிகள் சிந்திக்குமா?




சீடர் ஒளி அலுவலகம் களைகட்டிவிட்டது. நாளிதழ் வெளியாகி விட்டதால் எல்லோரும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர். மிஸ்டர் க்றோ வழமை போல் கடிதக் குவியலை கிண்டிக் கொண்டிருந்தார். மேசையில் இருந்த தொலை பேசி சிணுங்கியது "இயெஸ் க்றோ ஹியர்!" என்றார் மிஸ்டர் க்றோ. மறு முனையில் அப்புத்தளை செய்தியாளர் துரைராஜ் "வணக்கம் மிஸ்டர் க்றோ" என்றார்.

"வணக்கம் வணக்கம் என்ன காலை வேளையிலேயே ஏதாவது விசேஷமா?"



இதலகஸ்ஹின்ன தோட்டத் தொழிலாளர்களுக்கு இயற்தேயிலை நிறுவனம் அமைத்துக் கொடுத்த நவீன வீடுகள்.

"விசேஷம் தான் மிஸ்டர் க்றோ, எப்போதும் குற்றம் குறைகளை மட்டுமே கிண்டுகிறீர்கள். நன்மை செய்வதை திரும்பியும் பார்க்க மாட்டீர்கள்" என நேரடியாக விஷயத்திற்கு வந்துவிட்டார் செய்தியாளர்.

"மிகவும் சந்தோஷம் விவரமாக சொல்லுங்கள்" என்றார் மிஸ்டர் க்றோ.

"தோட்டத் தொழிலாளர்கள் என்றால் கொத்தடிமைகள், அவர்களின் உழைப்பு மட்டும் தான் நமக்குத் தேவை. அவர்களுக்கு எந்த வசதியும் தேவை இல்லை என கம்பெனிக்காரர்களும், அரசாங்கமும் நினைக்கும் போது அதற்கு மாறாக ஒரு நிறுவனம் தொழிலாளர்களுக்குப் பல்வேறு வசதிகளைச் செய்து கொடுத்துள்ளது. இதையும் நீங்கள் வெளிப்படுத்த வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார் செய்தியாளர்.



தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகள் மொண்டிசூரி விளையாட்டுத் திடலில்.

"எதற்கும் ஆசிரியரிடம் ஒரு வார்த்தை கேட்க வேண்டும் அதன் பின் தொடர்பு கொள்கிறேன்" என போனை வைத்த மிஸ்டர் க்றோ ஆசிரியரின் அறைக்குத் தாவினார்.

என்ன விடயம் என்பது போல் நிமிர்ந்து பார்த்தார் ஆசிரியர். எல்லா விவரங்களையும் கூறினார் மிஸ்டர் க்றோ.

"ஐசே! இது நல்ல விடயம் இல்லையா. தோட்ட முதலாளிமாரும், கம்பெனிக்காரர்களும், இந்த மலையக அரசியல் வாதிகளும் செய்ய நினைக்காத ஒன்றை தனியார் நிறுவனம் ஒன்று செய்துள்ளது. இதை அம்பலப்படுத்த வேண்டும். அப்போதாவது இவர்களுக்கு சூடுசொரணை வருகிறதா என்று பார்ப்போம். உடனே புறப்படுங்கள்" என்றார் ஆசிரியர்.

இதற்கு மேல் நிற்பாரா மிஸ்டர் க்றோ. சிறகடிக்கத் தயாரானார். மீண்டும் டெலிபோன் மணி. அதற்குள் செய்தியாளருக்கு அவசரம் பொறுக்க முடியவில்லை.

"கவலைப்படாதீர்கள் ஆசிரியர் ஓக்கே, இன்னும் சில மணி நேரங்களில் உங்கள் முன் நிற்பேன்" என்று கூறிய மிஸ்டர் க்றோ ஊவா நோக்கிச் சிறகடித்தார்.

வளைந்து நெளிந்து செல்லும் பாதைகள், இடைக்கிடை குதித்தோடும் சிற்றருவிகள், செங்குத்தான கற்பாறைகள், பச்சைப் பசேலென தேயிலை செடிகள் பாய் விரித்தது போன்று ரம்மியமான காட்சி.

இவை எல்லாவற்றையும் ரசித்துக் கொண்டே பறந்த மிஸ்டர் க்றோ பெறகல்லை சந்தியில் பஸ்ஹோல்டில் அமர்ந்தார். சில விநாடிகளில் ஒரு மோட்டார் சைக்கிள் அங்கு வந்து நின்றது. "குட்மோனிங் மிஸ்டர் க்றோ" என்று கூறிக் கொண்டே இறங்கினார் நமது அப்புத்தளை செய்தியாளர் துரைராஜ்.

"குட்மோனிங் உங்களைத் தான் பார்த்துக் கொண்டிருந்தேன் புறப்படுவோமா?" என்று அவசரப்படுத்தினார் மிஸ்டர் க்றோ.

செய்தியாளர் மோட்டார் சைக்கிளை உதைத்து ஸ்டார்ட் செய்ய மிஸ்டர் க்றோவும் பின் சீட்டில் தாவிக் குந்திக் கொண்டார்.

மலைப் பாதையில் வளைந்து வளைந்து சென்ற சைக்கிள் ஓரிடத்தில் நின்றது. மலைச்சரிவில் அழகான ஒரு வீடு, வீட்டு முற்றத்தில் சிலர் நின்று கொண்டிருந்தனர். மேசையில் ஒரு பூரணகும்பம். சில பூஜைச்சாமான்கள்.

"என்ன மிஸ்டர் துரைராஜ் தோட்டத் தொழிலாளர்களின் வீட்டிற்கு அழைத்துப் போவதாகக் கூறி இங்கே கொண்டு வந்து நிறுத்தி விட்டீர்களே...!" சினந்தார் மிஸ்டர் க்றோ.

"ஏன் உங்களுக்கே ஆச்சரியமாக இருக்கின்றதா? இதுதான் நான் கூறிய வீடுகளில் ஒன்று. இயற்தேயிலை உற்பத்தி நிறுவனம் இப்படியான வீடுகள் 140ஐ தொழிலாளர்களுக்கு கட்டிக் கொடுத்துள்ளது. கழிவறை, குடிதண்ணீர், குளியல் அறை என அத்தியாவசிய வசதிகள் உட்பட நவீன வசதிகளுடன் இந்த வீடுகள் கட்டப்பட்டுள்ளன" என்று கூறினார் செய்தியாளர். உண்மையாகவே மிஸ்டர் க்றோவால் நம்பவே முடியவில்லை. 7 பேர்ச் காணியில் அழகாக வடிவமைக்கப்பட்ட வீடுகள். வீடுகளைச் சுற்றி நடப்பட்டிருந்த பூக்கன்றுகள் மேலும் அழகூட்டின.

அப்படியே சற்று இடது பக்கமாகச் சென்றனர். அங்கே கலர் கலரான பட்டாம் பூச்சிகள் போல் சிறு குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தனர். ஓர் ஆசிரியை அவர்களுக்கு துணையாக நின்றார்.

அந்த ஆசிரியையின் வாயைக் கிளறினார் மிஸ்டர் க்றோ, அந்த ஆசிரியை கூறிய விவரங்கள் க்றோவை வாயடைக்கச் செய்து விட்டன. "இவர் கள் எல்லோருமே தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகள் தான். நிர்வாகத்தால் நடத்தப்படும் மொண்டிசூரியில் படிக்கின்றனர். நகரப் புறங்க ளில் கூட இந்த வசதி இல்லை" என்றார் ஆசிரியை.

அதோடு நின்று விடவில்லை அந்த ஆசிரியை, மொண்டி சூரியையும் பார்க்க வேண்டும் என அவர்களை அழைத் துச் சென்றார். அங்கே நவநாகரீக யுவதிகள் பிள்ளைகளோடு பிள்ளைகளாக சிரித்த முகத்துடன் காணப்பட்ட னர். "பிரதிமாதமும் அப்புத்தளை பதுளை ஆகிய நகரங்களில் இருந்து டாக்டர்களும் சுகாதாரத் தொண்டர்களும் குழந்தைகளைப் பரிசோதிக் கின்றனர். தாய் சேய் நலன் பற்றி விளக்கம் அளிக்கின்றனர்" என கூறினார் அந்த ஆசிரியை.

மிஸ்டர் க்றோ தன் சொண்டால் தன்னையே ஒரு முறை சீண்டிப் பார்த்துக் கொண்டார். பின்தங்கிய காட்டு மலைப் பிரதேசத்தில் இவ்வளவு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பது ஆச்சரியம் தான்.

இவற்றை எல்லாம் பார்த்தபின் மிஸ்டர் க்றோ ரோட்டுக்கு வந்தார். இரண்டு பெண் தொழிலாளர்கள் கொழுந்துக் கூடைகளுடன் வந்தனர்.

கால்களில் சப்பாத்து, மழை கோட், தொப்பி என்பன அணிந்திருந்தனர். தேயிலை மலை என்றாலே அட்டையும் பாம்புகளும் நிறைந்தது. இவற்றிடம் இருந்து



கொழுந்து பறிக்கும் பெண் தொழிலாளர்கள்

பாதுகாப்பு வழங்கவே சப்பாத்துகள் மற்றும் மருந்து வகைகள் நிர்வாகத்தால் வழங்கப்பட்டுள்ளன என்று அந்தத் தொழிலாளர்கள் கூறினார்கள். இவ்வளவு வசதிகளையும் ஒரு தனியார் நிறுவனம் செய்து கொடுத்திருப்பது பெரும் வியப்பை ஏற்படுத்தியது. இந்த நிறுவன முகாமையாளர்களை சந்திக்க வேண்டும் என்றார் மிஸ்டர் க்றோ.

தாராளமாக சந்திப்போம் என்ற செய்தியார் துரைராஜ், வெளிக்கள சிரேஷ்ட அதிகாரியை மிஸ்டர் க்றோவுக்கு அறிமுகப்படுத்தினார். அந்த அதிகாரி தந்த விவரங்கள்:—

அப்புத்தளை தேர்தல் தொகுதியில் அழுதமலை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ளன. இதல் கஸ்ஹின்ன பிளக்வுட் தோட்டங்கள்.

பின்தங்கிய மலையகத்தின் ஏனைய தோட்டங்களைப் போலவே இங்குள்ள தொழிலாளர்களும் உடல், உள, சமூக பொருளாதார பிரச்சினைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர். இவர்களின் 150 வருட நரக வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் இத்தோட்டங்களை இயற் தேயிலை உற்பத்தி நிறுவனம் (Bio Tea) பொறுப்பேற்றது.

எந்த விதமான இரசாயன உரவகைகளோ, மருந்து வகைகளோ இன்றி இயற்கைப் பசளை (சாணி உரம், கொம்போஸ்) களைக் கொண்டு தரமான தேயிலையை உற்பத்தி செய்கிறது இந்த நிறுவனம்.

உற்பத்தியைப் பெருக்கி ஆதாயத்தைப் பெற்றுக் கொண்ட இந்த நிறுவனம் தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டது. இதன்படி மூன்று பிரிவுகளாக சமூக அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்தி உள்ளோம்.

ஐந்து தனித்தனி பாலர் பாடசாலைகள் இயங்குகின்றன. இந்த நிலையங்களில் குழந்தைகள் மனவியல் நிபுணர் ஒருவரின் வழி நடத்தலில் பயிற்சி பெற்ற ஆசிரியைகள் படிப்பிக்கின்றனர் என்று கூறினார் அந்த அதிகாரி.

இவ்வளவு விடயங்களையும் கேட்டறிந்த மிஸ்டர் க்றோவுக்கு கண்டதையும், கேட்டதையும் அறிந்தவற்றையும் நம்பவே முடியவில்லை. கோடி கோடியாக ஆதாயத்தைப் பெறும் 22 தோட்டக் கம்பெனிக ளும், அரச பெருந்தோட்டக்



டாக்டர்களும், சுகாதாரத் தொண்டர்களும் குழந்தைகளின் நலன் பற்றி ஆராய்கின்றனர்.

கூட்டுத் தாபனமும், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையான அரச நிறுவனங்களும், அரசியல்வாதிகளும் தொழிலாளர்களைப் பற்றி சிறிதும் சிந்திக்காத வேளையில் தனியார் நிறு வனம் ஒன்று இவ்வளவு வசதிகளையும் செய்துள்ளது. இந்த நிறுவனத்தின் செயற்பாடு இவர்களுக்கு எல்லாம் ஒரு முன் மாதிரியாக அமைய வேண்டும்.

இவ்வளவு நன்மைகளையும் செய்துள்ள இயற் தேயிலை தோட்ட அதிகாரிக்கும் இதனை அறிய உதவிய செய்தியாளர் துரைராஜுக்கும் நன்றி கூறிவிட்டு கொழும்பு நோக்கி பறந்தார் மிஸ்டர் க்றோ.

படங்கள்: துரைராஜ்


விழிகளின் மீது விழிப்பாயிருங்கள்...




Kingdom Opticals

32, ஹம்டன் லேன், வெள்ளவத்தை, கொழும்பு -06.
தொலைபேசி : 552688 E-mail : jbsalba@sltnet.lk



SIVA NARUMANA POONGA

எங்களிடம்

* றோயல் தயாரிப்பு பொருட்கள்
* சன்விட்டா பிஸ்கட் வகைகள்
* எமல்சன், எசன்ஸ், கலர் பவுடர் வகைகள்
* ஐஸ்கிறீம் தயாரிப்புப் பொருட்கள்
* மென்பானம் தயாரிப்புப் பொருட்கள்
* பேக்கரி உற்பத்திக்குத் தேவையான உற்பத்திப் பொருட்கள்
* ஆயுள்வேத அரிஸ்டம், ஆசவம்,குளிகை,லேகியம், தைலவகைகள்

Branch:
Royal Industries, Adamally Building
Colombo - 13. Tel: 326679, 074 - 712439

மற்றும்ஆயுள்வேத மூலிகை சரக்குகள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

சிவா நறுமணப் பூங்கா
288, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 – 2567



இப்பத்திரிகை கொழும்பு –06, வெள்ளவத்தை பெரக்கும்பா பிளேஸ் 1/5ஆம் [illegible] 2001 நவம்பர் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.